26 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
அனைத்து காப்புறுதி மற்றும் சேமிப்புத்திட்ட தேவைகளுக்கும்...
Jey Ahamparam
416 301 1733
உங்கள் வாகன, வீட்டு (for your Home & Auto) காப்புறுதிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும்

தூய பணமாற்றுச் சேவையில் முன்னோடிகள்
மு.காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave., East, Suite # 3
(Eglinton & Markham)
Scarborough, ON M1J 2H6
Tel. - 416.267.8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி 26 | பாலம் 08 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | APRIL 15, 2016

# புதிய ஜனநாயகக்கட்சி புதிய தலைமையை கோருகிறது!

புதிய ஜனநாயகக்கட்சியின் மாநாடு எட்மன்ரன் நகரில் 2016, ஏப்பிரல் 8இல் இருந்து 10வரை நடைபெற்றது. 2015 ஒக்ரோபரில் நடைபெற்ற கனேடிய நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் எதிர்க்கட்சியாக இருந்த புதிய ஜனநாயகக்கட்சி மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்ட பின்னர் நடைபெறுகின்ற புதிய ஜனநாயகக்கட்சியின் மாநாடாக இது இருந்தது. இம்மாநாட்டில் முக்கிய விடயமாக புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவரான ரொம் மல்கெயர் தனது தலைமைப்பதவியை மீள உறுதி செய்யும் வாக்கெடுப்பு நடைபெற இருந்தது.




ரொம் மல்கெயர் தனது தலைமைப் பதவியை உறுதி செய்ய கட்சியின் அரசியலமைப்பு சட்டப்படி மாநாட்டிற்கு வந்திருந்த 1,800 கட்சி பிரதிநிதிகளின் வாக்கெடுப்பில் குறைந்தது 50% ஐ விட ஒன்று கூட அவருக்கு ஆதரவாக வர வேண்டும். ஆனால் கனேடிய பிரதான ஊடகங்கள் எல்லாம் ரொம் மல்கெயர் கடந்த கட்சி மாநாட்டில் 92% இற்கும் அதிகமான பிரதிநிதிகளின் ஆதரவை பெற்றபடியால் இம்முறை 70% இற்கு குறைவான ஆதரவை பெற்றால் அவர் தலைமைப்பதவியில் இருந்து விலகி விடுவார் என எதிர்வு கூறின.

கிட்டத்தட்ட எல்லா கனேடிய ஊடகங்களும் ரொம் மல்கெயர் 70% இற்கு கூடிய ஆதரவை பெறுவாரா, இல்லையா எனவும் 70%இற்கு குறைவான ஆதரவை பெற்றால் தொடர்ந்தும் தலைமைப்பதவியை வகிப்பாரா, இல்லையா எனவும், விவாதித்து கொண்டிருந்தனவே தவிர எந்த ஒரு ஊடகமாதல் அவர் புதிய ஜனநாயகக்கட்சி மாநாட்டு பிரதிநிதிகளிடம் இருந்து அறுதிப்பெரும்பான்மை (50%+1) வாக்குகளை கூட பெறமாட்டார் என எதிர்வு கூறவில்லை.

ஆனால் 2016 ஏப்பிரல் 10இல் நடைபெற்ற ரொம் மல்கெயர் தலைமைப்பதவியை உறுதி செய்யும் வாக்களிப்பின் முடிவாக 48% ஆன பிரதிநிதிகளின் ஆதரவை மட்டுமே ரொம் மல்கெயர் பெற்றார் என அறிவிக்கப்பட்டவுடன் அது பெரும்பாலான ஊடகவியலாளர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது மிகவும் தெளிவாக தெரிந்தது. புதிய ஜனநாயகக்கட்சி மாநாட்டில் பிரதிநிதிகள் 52% ஆனோர் கட்சிக்கு புதிய தலைமை தேவை என வாக்களித்திருந்தனர்.

52% ஆனோர் புதிய தலைமையை கேட்டு வாக்களித்துள்ளனர் என்ற முடிவை அறிவித்தவுடனேயே, ஐக்கிய எஃகு (இரும்பு) தொழிலாளர் சங்கத்தின் தலைவரான Ken Neumann அடுத்த தலைவர் தெரிவை இரண்டு வருடங்களுக்கு தள்ளிப்போடுமாறு ஒரு பிரேரணையை முன்மொழிந்தார். அது பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. வழமையாக புதிய தலைவர் தேர்தல் ஒரு வருடத்திற்குள் நடைபெற வேண்டும்.

தேர்தல் முடிவின் பின்னர் உரையாற்றிய ரொம் மல்கெயர் கட்சி புதிய தலைவரை தெரிவு செய்யும் வரையும் தான் தலைமைப் பதவியில் இருப்பேன் என்றார். அதைவிட கட்சியின் பிரதிநிதிகள் இரண்டாக பிரிந்து இருப்பதை உணர்ந்த அவர் இம்மாநாடு முடிந்து செல்கையில் நாம் எல்லோரும் ஒன்றாக ஒற்றுமையாக செல்ல வேண்டும் எனவும், தனக்கு பிறகு தலைமை பதவி ஏற்பவருக்கு நாடு முழுவதும் உள்ள புதிய ஜனநாயகக்கட்சி உறுப்பினர்கள் 100 வீதமான ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்க வேண்டும் எனவும் வேண்டிக் கொண்டார்.

புதிய ஜனநாயக்கட்சியின் இந்த இரண்டு பட்ட நிலைக்குரிய காரணங்களைப் பார்ப்போம். கனடாவின் பொதுத்தேர்தல் காலத்திலே புதிய ஜனநாயகக்கட்சியின் கொள்கைவகுப்பாளரில் ஒருவரான Avi Lewis மற்றும் பிரபல எழுத்தாளரான அவரது மனைவி Naomi Klein உம் சேர்ந்து தீவிர இடதுசாரி கொள்கையான 'Leap Manifesto' யை வெளியிட்டனர். Avi Lewis என்பவர் முன்னாள் ஒன்ராரியோ புதிய ஜனநாயகக்கட்சி தலைவரும் தீவிர இடதுசாரி கொள்கை உடையவருமான Stephen Lewis இன் மகன் ஆவார்.

தொடர்ச்சி 03ஆம் பக்கம்...

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

LEXUS OF RICHMOND HILL
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

Raguvaran Rajaguru
My 1 priority is your satisfaction!
416-712-2006
5-year variable 2.25%

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS (Glasg)
DENTAL SURGEON
> Wisdom Tooth Extraction
> Root canal > Dentures
> Gum Treatment
> Dental Implant
> Tooth Fillings
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

NON-MEDICAL INSURANCE
AGE 18-65
• Mortgage Protection Insurance
• Life Insurance • RESP
• Critical Illness • RRSP
• Disability
• Travel Insurance (Super Visa)
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca



HOMES for Sale *Commercial*Investments
LISTING COMMISSION 999/-* !!
Harwood & Taunton
4 bm 4 wsrm home 729 k
Bayview/Elgin Mills
finished
Rossland /Harwood
695k
4 bm 4 wsrm basement finished -apartment
Scarbough
LARGER LOT 50 x 182
Bungalow House
SCARBOROUGH
$263,500
New Condo apartment
Mccowan and Kingston rd
STORE PLUS APT
389k
Investment rented for $3000
9th Line & Bur Oak
LUXURY
4 bedroom / 5 wsrm bsmnt apt
Steeles/Kennedy
4 bm 3 wsrm
Ontario north /224K
100+Ac
Vacant 100+ acre
Pharmacy/Lawrence
649K
3 bm 4 wsrm basement apartment potential 1200/- income
COMMISSION NEGOTIABLE GUARANTEED SALE
Hall of Famer
14 years of service
Century 21 BROKERAGE
80 Corporate Dr. Suite 208 Toronto
416-290 1200
Pat Pushpakanthan
Real Estate Broker
COMMERCIAL & RESIDENTIAL
416-894-1187
PAT WILL BEAT ANY DEAL*!!
NEW condos
VIP ACCESS
SAVE MONEY!
21 FREE services
Rental corner
2+1 condo apt 1650/-
1+1 condo apt 1400/-
studio apt 999/-
3 bm bangalow 1590/-




THINKING OF SELLING, BUYING OR INVESTING
Always committed to work in the client's best interest
Act with Market Conditions
Exposing Your Property to 1000's of Potential Buyers
Call me to find out how much your home worth.
Free Market Evaluation without any Obligations
TRUST
HONEST
GUARANTEE
We do sell Cottages & Recreational Properties
Muthiah Sivabalan
Sales Representative
Friendly and Confidential Service Just Call
Cell: 416.399.6640
msbalan78@gmail.com
HomeLife/GTA Realty Inc.
Higher Standards Agents... Higher Results!




Friends MATRIMONY
திருமணத்
உங்கள் தேடலுக்கோர் முற்றுப் புள்ளி...
சனி, ஞாயிறுகளில்
12:00pm-6:00pm
இலவசமாக திருமண
பொருத்தம் பார்க்கப்படும்
5000 மேற்பட்ட பொருத்தமான வரன்கள் உங்கள் தெரிவுக்கு
மிக இலகுவாக இணையத்தில் பதிவு செய்யும் வசதி
அல்லது தொலைபேசி, தபால், email ஊடாக பதிவு செய்யலாம்
info@friendsmatrimony.com
www.friendsmatrimony.com
Choose Your Life Partnar Here
அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி 10:30a.m- 7:00p.m
Sri Lanka
Ph: 94-112-363663
No-11- 2/1, 33rd lane,
Wellawatta,
Canada
info: 647-709-1536
GTA Square
5215 Finch Ave. E. Unit 257




# புதிய ஜனநாயக...

## 01ஆம் பக்கத்தொடர்ச்சி

இக்கொள்கைகளின்படி 20 வருடங்களுக்குள் படிம எரிபொருள் (Fossil Fuels) இல் இருந்து மின்சார உற்பத்தி முற்றாக நிற்பாட்ட வேண்டும். மின்சாரம் 100% புதுப்பிக்க கூடிய சுற்றுப்புற சூழலை மாசுபடுத்தாத வளங்களில் இருந்து (Renewable Resources) பெறவேண்டும். 2050 ஆம் ஆண்டில் சூழல் மாசடையும் எரிபொருள் பாவனையை முற்றாக ஒழித்து விட வேண்டும். சக்தி வளத்தை நிர்வகிப்பதை ஜனநாயகப்படுத்த வேண்டும். அதாவது சக்திவளங்களை இலாப நோக்குடைய தனியார் நிறுவனங்கள் நிர்வகிப்பதை மாற்றி மக்களால் ஜனநாயக முறைப்படி நிர்வகிக்கப்படும் நிறுவனங்களால் பராமரிக்கப்படும் முறை உருவாக்கப்பட வேண்டும். இது இவ்வாறு மிகவும் தீவிர இடதுசாரி கொள்கைகளை கொண்ட தத்துவம் ஆகும். இதற்கு ரொம் மல்கெயரின் ஆதரவும் இருந்தது.

மற்றையது அல்பேட்டாவின் முதல்வர் Rachel Notley ஆல் புதிய ஜனநாயகக் கட்சி மாநாட்டில் முன்வைக்கப்பட்ட கனடாவின் கிழக்கு கடற்கரைக்கு எரி பொருள் கொண்டு செல்லும் குழாய்களை அமைக்கும் திட்டத்திற்கான சில நிபந்தனைகளுடன் கூடிய ஆதரவாகும். இது அல்பேட்டாவின் எண்ணைவள உற்பத்திக்கு ஆதரவு அளிக்கும் திட்டமாகும். அல்பேட்டாவின் முதல்வர் 2016 ஏப்பிரல் 09இல் இந்த கட்சி மாநாட்டில் நடத்திய 35 நிமிட உரை மிகவும் உணர்ச்சி பூர்வமாக இருந்தது. முதல்வர் அல்பேட்டாவின் எரிபொருள் உற்பத்தியை தங்களது காபன் வரி திட்டம் மூலம் எவ்வாறு சுற்றுப்புற சூழல் பாதிப்பை படிப்படியாக குறைத்து பொருளாதார வளத்தையும் பாதிக்காது முன்எடுக்கலாம் என விபரித்திருந்தார்.

ஒன்றுக்கு ஒன்று முரணான இவ்விரண்டு கொள்கைகளால் புதிய ஜனநாயகக்கட்சி பிரதிநிதிகள் இரண்டாக பிளவுபட்டிருந்ததே பெரும்பாலானோர் புதியதலைமை வேண்டும் என வாக்களித்ததிற்கான காரணமாக வாக்களிப்பு முடிந்த பின்னர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

புதிய ஜனநாயகக்கட்சியின் புதிய தலைமைக்கான தேர்தலுக்கு ஒரு வருடத்திற்கு மேல் இருக்கும் நிலையில் ஊடகங்கள் தற்போதே யார் யாரெல்லாம் தலைமைப் பதவிக்கு போட்டி போடப்போகிறார்கள் என ஊகம் தெரிவிக்கத் தொடங்கி விட்டன.

குளோப் அன்ட் மெயில் ஊடகத்தின் ஊகங்களைப் பார்ப்போம். இவ் ஊடகம் பின்வரும் ஐவரையும் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைமைப்பதவிக்கு போட்டியிட கூடியவர்கள் என்கிறது.

Niki Ashton - இவர் 33 வயதான மனிரோபாவின் வடபகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஆவர். இவர் ஏழு வருடங்களுக்கு மேல் புதிய ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார். பூர்வீக குடிமக்களின் உரிமைக்கும் பெண்களின் உரிமைக்குமாக போராடி வரும் இவர் 2012 இல் நடைபெற்ற கட்சியின் தலைமைக்கான தேர்தலில் 7ஆம் இடத்தில் இருந்தவர். இடது சாரி கொள்கை உடையவர்.

Alexandre Boulerice - புதிய ஜனநாயகக் கட்சியில் நட்சத்திர செல்வாக்குப்பெற்ற குவிபெக் மாகாண நாடாளுமன்ற உறுப்பினர். 42 வயதான இவர் 2011ஆம் ஆண்டில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார்.

Nathan Cullen - 43 வயதான இவர் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தில் இருந்து புதிய ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக 2004 ஆம் ஆண்டில் இருந்து பதவி வகிக்கிறார். இவர் முன்பு லிபரல் கட்சியுடன் புதிய ஜனநாயகக்கட்சி இணைய வேண்டும் எனக் குரல் கொடுத்தவர்.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்



# வைகோவை நினைத்து நெகிழ்கிறது நெஞ்சம்!

## நேர்காணல் - நாஞ்சில் சம்பத்

மீண்டும் மேடைகள் ஏறிவிட்டார் நாஞ்சில் சம்பத். அடுக்கு மொழி மேடைப் பேச்சிலேயே ஆட்சியைக் கைப்பற்றிய தமிழகத்தில் தற்போது அரசியல் மேடைகளில் வார்த்தைப் போர்வாள் சுழற்றும் ஒரே மேடைப் பேச்சாளர். அதிமுகவுக்காக சூறாவளி சுற்றுப் பயணத்தில் இருக்கும் நாஞ்சில் சம்பத்துடன் பேசினோம்.

கருணாநிதிக்கு போர்வாளாக வைகோ இருந்தது போல் வைகோவுக்கு போர் வாளாக இருந்தவர் நீங்கள். இப்போதும் வைகோ மீதான பழைய பாசம் உங்களுக்குள் எட்டிப் பார்ப்பதுண்டா?

அண்ணன் வைகோ மீது பாசம், மரியாதை, மதிப்பு எல்லாம் இருக்கிறது. அவர் என்னை அங்கீகரித்த நாட்கள், அரவணைத்த பொழுதுகள், தேசிய பாதுகாப்பு சட்டத்தில் சிறை சென்றபோது எனக்காக வாதாடி என்னை மீட்டுத்தந்த நாட்களை நினைத்துப் பார்த்து மனம் நெகிழத்தான் செய்கிறது.

அதிமுகவுக்காக தமிழகம் முழுக்க பிரச்சாரம் செய்பவர் நீங்கள். உங்களுக்கு தேர்தலில் சீட் வழங்கப் படவில்லையே?

நான் கேட்கவும் இல்லை. என்னுடைய பன்முக திறமைக்குச் சட்டமன்ற உறுப்பினராக நீடிக்க முடியாது. அம்மாவே விரும்பிச் சொன்னாலும் வேண்டாம் என்று சொல்லியிருப்பேன். பிரச்சாரத்தில் மட்டும் என்னை ஈடுபடுத்திக்கொள்வேன். இலக்கிய தளத்தில் அழுத்தமாகக் காலூன்ற நினைக்கிற நான் சட்டமன்ற உறுப்பினராக இயங்குவதற்கான வாய்ப்பில்லை.



- சிவதாணு -

மக்கள் நலக் கூட்டணி, விஜயகாந்தின் தேமுதிக, வாசனின் தமாக என்று பலமான கூட்டணி உருவாகியிருக்கிறதே இந்த அணி பற்றி?

அரசியலில் எந்தத் திசையில் செல்வது என்பது தெரியாமல் தவித்துக் கொண்டிருந்த தேமுதிகவுடன் மக்கள் நலக் கூட்டணியும் தமாகவும் இணைந்து கொண்டாலும் குறைந்த சதவீத வாக்குகள் தான் அவர்களுக்கு இருக்கிறது. இன்றைக்கு நான் முதல்வர், நீ முதல்வர் என்று முந்திக்கொள்பவர்கள் எல்லாம் 2016க்காக முந்தவில்லை 2021க்காக மேளம் கொட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஜெயலலிதா, பிரச்சாரத்துக்கு வர மாட்டார் என்ற ஊகங்களைப் பொய் யாக்கி பிரச்சாரத்தை தொடங்கியுள் ளார். ஆனால், குறிப்பிட்ட சில தொகுதிகளில், அதுவும் மேடைகளில் உட்கார்ந்து மட்டும் பேசுகிறார். இது பலவீனம் இல்லையா? தேர்தல் முடிவில் உங்கள் கட்சிக்கு இது பின்னடைவை தராதா?

‘அம்மாவை மக்கள் நேரடியாக பார்க்க முடியுமா? ’ என்று 18 கோடி ரூபாய் செல- வழித்து திமுகவில் விளம்பரம் செய்தார்கள். என்ன ஆனது? இப்போது மக்கள் அம்மாவை நேரடியாகப் பார்க்கிறார்கள். அம்மா அவர்களின் வசதிக்கேற்ப பிரச்சார பயணத்தை வகுத்துக்கொள்வார். மக்கள் அதனை ஒரு குறையாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள். ஏனென்றால், தமிழகத்தில் இன்றைக்கு 1 லட்சத்து 87 ஆயிரம் குடும்பங்கள் அரிசியை உலையில் போடும் போது அம்மாவின் முகத்தைத்தான் அதில் பார்க்கிறார்கள். லட்சக்கணக்கான பெண் களின் மாங்கல்யத்திற்காக அரை பவுன் தங்கமும் 50 ஆயிரம் பணமும் தருகிற போது அந்தத் தங்கத்தின் வழியாக அம்மாவின் முகத்தை மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். விளிம்பு நிலை மக்களுக்கு இதுவரைக்கும் கிடைக் காத சாதனங்களை அம்மா கொடுத்திருக் கிறார்கள். அதற்குத்தான் வாக்கு. அம்மா வின் பிரதிநிதிகளாக கட்சியின் நிர்வாகிகள் ஏற்கெனவே வாக்கு சேகரிக்கும் பணியைத் தொடங்கிவிட்டோம். எந்த இடத்திலும் எங்களுக்கு எதிராக யாரும் குரல் கொடுத்து நான் கேட்டதில்லை.

தாலிக்கு தங்கம் கொடுத்துவிட்டு டாஸ்மாக்கில் தாய்மார்களின் தாலி பறிக்கப்படுவதாக விமர்சனங்கள் எழுந்துள்ளது. இதற்கு உங்கள் பதில் என்ன?

படிப்படியாக மதுவிலக்கு அமல்படுத்தப்படும் என்று அம்மா சொல்லியுள்ளார்கள். சரி, ஏன் இதுவரை செய்யவில்லை என்று நீங்கள் கேட்கலாம். மதுவிலக்கைக் கருணாநிதி ரத்து செய்கிறபோது எந்தக் காரணத்தைச்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்...



# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

பவர் ஒப் சேல் பிரச்சினையா?

நல்ல ரேட்ல மோட்கேஜ்,
லைன் ஒப் கிரெடிட்,
ரீபைனான்ஸ்,
2வது, 3வது மோட்கேஜ்,
பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ்,
அனைத்து கடன்களையும் ஒன்றாக்க



MORTGAGE IN ANY SITUATION

மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,

## "மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

**416-613-2788 / 416-816-9011**




**வோக் இன் - SATURDAYS- 9.00 am- 5.00 pm**

உங்கள் மாதாந்த மோட்கேஜ் கொடுப்பனவுடன் Credit Card, Car Loan, Personal Loan, Line of Credit மற்றும் ஏனைய அதிகளவு வட்டி செலுத்தும் கடன்களை ஒன்று படுத்தி எவ்வாறு உங்களது மாதாந்த கடன் சுமையை குறைப்பது???

3 Yrs Fixed Rate : 2.20 % *OAC
5 Yrs Variable : CALL US

எமது முகவரி

**1504 Markham Rd,**
**Toronto, ON, M1B 2V9**
**(Markham & HWY 401)**



MORTGAGE ALLIANCE
Lic # 10530
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4
Toll Free : 1-877-366-3487

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**

# கனடாவின் # 1 மோட்கேஜ் நிறுவனம்

# வடக்கில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கியும், தெற்கின் இனவாதக் கூச்சலும்!

வடக்கிலோ, கிழக்கிலோ - தமிழர் வாழும் பகுதிகளில் ஏதேனும் சிறு சம்பவம் ஒன்று இடம்பெற்றால் அதனை மிக உச்சமாக தெற்கிலுள்ள இனவாதிகள் பயன்படுத்திக் கொள்கின்றனர். கடந்த மாதம் 29ம் திகதி வடக்கில் - சாவகச்சேரியில் சில வெடி பொருட்களும் ஒரு தற்கொலை அங்கியும் மீட்கப்பட்ட சம்பவம் அவர்களின் இனவாதப் பரப்புரைகளுக்கு நல்லதொரு வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அவர்கள் கூச்சலிடுகின்றனர். குறித்த வெடிபொருட்களும் தற்கொலை அங்கியும் தெற்கில் பயன்படுத்துவதற்காகவே வைத்திருக்கப்பட்டவை என்றும், மீண்டும் தெற்கில் குண்டுவெடிப்பு தாக்குதல்கள் இடம் பெறப் போகின்றன என்பதாகவும் சாதாரண சிங்கள மக்களை அச்சமூட்டி, அதன் மூலமாக தங்களது குறுகிய அரசியல் நோக்கத்தை அடைய அவர்கள் முற்பட்டு வருகின்றனர்.

மெத்தப் படித்த மனிதரும், பேராசிரியரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், மஹிந்த ராஜபக்ஸவின் நெருங்கிய ஆதரவாளருமான ஜீ.எல்.பீரிஸ் இது தொடர்பில் ஒரு கதையினையே புனைந்துள்ளார். அதாவது, சாவகச்சேரியில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கியும், வெடிபொருட்களும் கொழும்பு - வெள்ளவத்தைக்கு கொண்டுவரப்படவிருந்ததாக அவர் தெரிவித்திருக்கின்றார்.

இவ்வாறு அவர் தெரிவித்ததால் புலனாய்வுப் பிரிவிடம் வாக்குமூலமளிக்கும் நிலையும் அவருக்கு ஏற்பட்டிருக்கின்றது. பீரிஸ் கூறியது உண்மையானால் அத்தகவல் எவ்வாறு அவருக்குத் தெரியும்? யார் அவருக்கு சொன்னது? இது தெரிந்திருந்தால் முன்னரே ஏன் பாதுகாப்புத் தரப்பினரிடம் அவர் அறிவிக்கவில்லை என்கின்ற கோணத்தில் அவரிடம் விசாரணை மேற்கொள்ளப் பட்டிருக்கின்றது.

இந்த வெடிபொருட்களையும் தற்கொலை அங்கியையும் தனது வீட்டில் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இப்பொருட்கள் மீட்கப் பட்ட அடுத்த நாளே கிளிநொச்சி - அக்கராயன் குளத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட நபர் 32 வயதான, ரமேஷ் என்றழைக்கப்படும் எட்வட் ஜூலின் என்றும் அவர், தமிழீழ விடுதலைப் புலி இயக்கத்தில், 13 வயதில் இணைந்து கொண்டவர் என்றும் பாதுகாப்புத் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவருடன் தொடர்பு வைத்திருந்தவர்கள் என்ற சந்தேகத்தில் மேலும் ஐவர் சில தினங்களுக்கு முன்னர் கைதாகியுள்ளனர். அவரது கைத் தொலைபேசியிலிருந்த இலக்கங்களை வைத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர்.

போர் முடிவுற்றதன் பின்னர், பலர் வெடி பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். அந்த வெடிபொருட்கள் தாக்குதல்களுக்கு பயன்படுத்துவதற்காக குறித்த நபர்கள் வைத்திருக்கவில்லை. மீன்களை பிடிப்பதற்கு இந்த வெடிபொருட்களை சிலர் பயன்படுத்து கின்றனர். இவ்வாறு வெடிபொருட்களை பயன்படுத்தி மீன்களை பிடிப்பது சட்டவிரோத மானதெனினும், அவ்வாறான நடவடிக்கைக-ளில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர்.



எங்காவது காணப்படுகின்ற இந்த வெடி பொருட்களை எடுப்பவர்களும் இவ்வாறு சட்ட விரோதமாக மீன்பிடிப்பவர்களுக்கு அவற்றை விற்பனை செய்கின்றனர். இவ்வாறான நடவடிக்கைகள் போரின் பின்னர் வடக்கு கிழக்கில் இடம்பெற்று வந்துள்ளன. சாவகச்சேரி வெடிபொருட்களுடன் சம்பந்தப் பட்டதாக கைது செய்யப்பட்ட நபரும் மீன் பிடிக்க பயன்படுத்துவதற்காகவே இவற்றை வைத்திருந்ததாக முதற்கட்ட விசாரணை களில் தெரிவித்திருக்கின்றார். முறையாக விசாரிக்கப்பட்டால் உண்மைகள் வெளி வரும். ஆனால், அதற்கு முன்பதாகவே பல்வேறு கட்டுக்கதைகளை தென்னிலங்கை இனவாதிகள் அவிழ்த்துவிட்டு வருகின்றனர்.

போர் முடிவுற்றதன் பின்னரான காலகட்டங் களில், வடக்கு கிழக்கில் மக்கள் மீள்குடிய மர்த்தப்பட்ட பிரதேசங்களில் பல்வேறு வகையான வெடிபொருட்கள், குண்டுகள், துப்பாக்கிகள் என்பன மீட்கப்பட்டுள்ளன. இவற்றை அடையாளம் கண்டதும் பொது மக்களே பாதுகாப்புத் தரப்பினருக்கு அறிவித்து அவற்றை மீட்பதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். இப்போது, வெடி பொருட்களுடன் ஒரு தற்கொலை அங்கியும் மீட்கப்பட்டமை இனவாதப் பரப்புரை யாளர்களுக்கு வெறும் வாய்க்கு அவல் கிடைத்ததைப் போலாகிவிட்டது.

ஆட்சிமாற்றம் ஏற்பட்டதன் பின்னர், கடந்த ஒரு வருடத்தில் இவ்வாறு 18 அங்கிகள் மீட்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டியாரச்சி தெரிவித்துள் ளார். கடந்த ஜனவரி மாதம் முதல் இன்று வரை ஆயிரத்திற்கும் அதிகமான ஆயுதங் கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிடுகின்றார். எனவே, இவ்வாறு ஆயுதங் கள் கண்டுபிடிக்கப்படுகின்றமை தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என எவராலும் கூறமுடியாது. இவ்வாறு, ஆயுதங்கள் மீட்கப் படுகின்றமை தேசிய பாதுகாப்பு உறுதியாக உள்ளது என்பதையே வெளிப்படுத்துவதாக வும் அவர் கூறுகின்றார்.

உண்மை நிலைப்பாடு இவ் வாறாகத் தான் உள்ளது. ஆனால், தெற்கில், மக்களால் தோற்கடிக்கப்பட்டவர் கள் மீண்டும் ஆட்சியை பிடிக்க பல்வேறு முயற்சி களில் இறங்கி யுள்ளனர். அவற்றில் ஒன்றுதான் இவ்வாறான பரப்புரை நடவடிக்கைகள். இதனை அவர்களின் ஆட்சி காலத்திலும் அவர்கள் செய்தார்கள். விடுதலைப்புலிகளின் மீளுரு வாக்கம் நடைபெறுகின்றதெனக் கூறிக்கொண்டு கைதுகளையும் கண் காணிப்புக்களையும் அப்போது அவர்கள் தீவிரமாக மேற்கொண்டனர்.

தமிழ் பிரதேசங்களிலிருந்து இராணுவம் அகற்றப்பட வேண்டும் - அங்கு முழுமை யான சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும் - படையினர் வசமிருக்கும் பொது மக்களின் காணிகள் அவர்களிடம் மீள ஒப்படைக்கப்பட வேண்டும் என்றெல்லாம் சர்வதேச நாடுகளும், ஐ.நா உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களும் மஹிந்த அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து வந்த நிலையில், விடுதலைப்புலிகளின் மீளுரு வாக்கம் என்கின்ற ஒரு 'நடவடிக்கை'யின் தேவை அவசியப்பட்டது. அதற்காகவே அவர்கள் அதனை நடைமுறைப்படுத்தினர்.

ஆட்சிமாற்றத்தின் பின்னர் நல்லாட்சி-நல்லிணக்க செயற்பாடுகளை நடைமுறைப் படுத்த வேண்டிய அவசியம் புதிய அரசாங்கத்திற்கு உள்ளது. அதற்காகவே வடக்கில் படையினரிடமுள்ள காணிகளை கட்டம் கட்டமாக மக்களிடம் கையளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், படையினரை கணிசமாக குறைக்கும் நடவடிக்கைகளையும் இந்த அரசாங்கம் மேற் கொள்ள வேண்டியிருக்கின்றது. இவற்றை யெல்லாம் மேற்கொள்கின்ற சந்தர்ப்பங்களில் அவற்றைக் குழப்பும் நோக்கிலேயே மீண்டும் புலிகள் - மீண்டும் பயங்கரவாதம் என தெற்கில் ஒரு அணியினர் கூச்சலிடுகின்றனர்.

தோற்கடிக்கப்பட்டுள்ள அவர்களுக்கு இரண்டு பிரதான நோக்கங்கள் உள்ளன. வடக்கு, கிழக்கிலுள்ள மக்கள் முன்னைய அழுத்தங் களுடனேயே தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்பது ஒன்று. மக்கள் மத்தியில் குழப்பங்களை உருவாக்கி, புதிய ஆட்சியை கவிழ்ப்பதென்பது இன்னொன்று.

மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான ஆட்சி இரண்டு பிர-தான தேர்தல்களிலும் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரும், முன்னைய ஆட்சியாளர்கள் குறித்து அவர்கள் அவதானமாகவே இருக் கின்றமையினை அவதானிக்க முடிகின்றது.

ஆட்சியை பொறுப்பேற்றதன் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப் பிட்ட ஒன்றை இங்கு நினைவூட்டுவது பொருத்தமானது. தோற்கடிக்கப்பட்ட எதிரி குறித்து சாதாரணமாக இருந்து விட முடியாது. தொடர்ந்தும் அவதானமாக இருக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். இதிலிருந்து நிலைமைகளை நாம் புரிந்து கொள்ளலாம்.

## - விகிர்தன் -

புதிய ஆட்சியை கவிழ்த்து மீண்டும் ஆட்சியை கைப்பற்றிவிட வேண்டும் எனத் துடிக்கும் ராஜபக்ஸ தரப்பினர் அதற்கு பிர-தான ஆயுதமாக பயன்படுத்துவது இனவாதத் தையே. நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுவிட்டது, நாட்டில் மீண்டும் குண்டு வெடிப்புக்கள் இடம்பெறப்போகின்றன, எங்கள் வீரத்தாலும் அர்ப்பணிப்பாலும் அழிக்கப்பட்ட பயங்கரவாதிகள் மீண்டும் புத்துயிர் பெறுகின்றார்கள் என்றெல்லாம் கூறுகின்ற போது அது சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தும். அதனூடாக தங்களுக்கான ஆதரவை அவர்கள் மத்தியில் அதிகரிக்கலாம் என்பதே தோற்கடிக்கப்பட்டவர்களுடைய நோக்கம்.

வடக்கு கிழக்கை விடவும், தென் பகுதிகளிலேயே இன்று பல்வேறு குற்றச் செயல்கள் இடம்பெறுகின்றன. துப்பாக்கிச் சூடுகள், கொலைகள் மட்டுமல்லாமல் ஆயுதங்களும் நாளாந்தம் பிடிபடுகின்றன. சட்டவிரோமான துப்பாக்கிகளை வைத்திருப்ப வர்கள் தென் பகுதிகளிலேயே உள்ளனர்.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6


# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் - தற்போதைய நிலவரம்

கடந்த நான்கு இதழ்களில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்முறை நான்கு பிரிவுகளை அடக்கியது எனவும் அவையாவன:


1. Prenomination Phase - ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்ய முந்திய காலப்பகுதியாகும்.
2. National Conventions Phase - தேசிய மாநாடு இது ஜனாதிபதி மற்றும் உப ஜனாதிபதியை வேட்பாளரை கட்சிகள் தெரிவு செய்யும் மாநாடு. (ஜுலை 2016)
3. General Election Phase - தேர்தல் பிரச்சாரமும் பொதுத்தேர்தலும் (நொவம்பர் 08, 2016 வரை)
4. Electoral College Phase - ஜனாதிபதி மற்றும் உபஜனாதிபதியை உத்தியோக பூர்வமாக தெரிவு செய்து அறிவிக்கும் காலம் (நொவம்பர் 08, 2016இல் இருந்து 20, 2017 வரை)

எனவும் அவை நான்கையும் விரிவாகப் பார்த்தோம். இவ்விதழிலிருந்து அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் தற்போதைய நிலவரம் பற்றிப்பார்ப்போம்.

இதுவரை 2016ஆம் ஆண்டில் நடைபெற உள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் நாடு தழுவிய வேட்பாளர்களாக இருப்பவர்கள் இருவர். அவர்கள் Hillary Clinton உம் Berni Sanders உம் ஆவர். குடியரசுக் கட்சியின் சார்பில் மூவர் நாடு தழுவிய வேட்பாளர்களாக இருக்கிறார்கள். அவர்கள் Ted Cruz, John Kasich மற்றும் Donald Trump ஆவர்.

2016இல் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளராக வர ஜனநாயகக்கட்சிக்கு 56 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் 4,765 பிரதிநிதிகளில் குறைந்தது 2,383 பேர் ஆதரவளிக்க வேண்டும். 2016 ஏப்ரில் 15 வரை நடைபெற்ற 36 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து Hilary Clinton 1,287 பிரதிநிதிகளையும் Bernie Sanders 1,037 பிரதிநிதிகளையும் பெற்றுள்ளார்கள். ஜனநாயகக்கட்சிக்கான அடுத்த தேர்தல் ஏப்பிரல் 19இல் நியூயோர்க் மாநிலத்தில் நடைபெற உள்ளது. ஜனநாயகக்கட்சியின் தேசியமாநாடு 2016 யூலை 25இல் Philadelphia, Pennsylvania இல் நடைபெற உள்ளது.

2016 இல் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளராக வர குடியரசுக்கட்சிக்கு 56 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் 2,472 பிரதிநிதிகளில் குறைந்தது 1,237 பேர் ஆதரவளிக்க வேண்டும். 2016 ஏப்பிரல் 15 வரை நடைபெற்ற 36 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து Donald Trump 743, Ted Cruz 545 மற்றும் John Kasich 143 பிரதிநிதிகளை பெற்றுள்ளார்கள். குடியரசுக்கட்சிக்கான அடுத்த தேர்தல் ஏப்பிரல் 19இல் நியூயோர்க் மாநிலத்தில் நடைபெற உள்ளது. குடியரசுக்கட்சியின் தேசிய மாநாடு 2016 யூலை 18இல் Cleveland, Ohioஇல் நடைபெற உள்ளது.



தற்போது குடியரசுக்கட்சிக்குள் பலத்த போட்டி நிலவுகிறது. Donald Trump 743 பிரதிநிதிகளும் Ted Cruz இற்கு 545 பிரதிநிதிகளும் ஆதரவு தெரிவித்துள்ளனர். இது வரை தேர்தல் நடைபெறாத மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து 854 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

இவர்களிடம் இருந்து 58% ஆனவர்களின் ஆதரவை Donald Trump பெற்றால் தான் அவருக்கு கட்சியின் தேசியமாநாட்டிற்கு முன்னரே அறுதிப்பெரும்பான்மைக்கு தேவையான 1,237 பேரின் ஆதரவு கிடைக்கும். இவர் கட்சியின் தேசிய மாநாட்டிற்கு முன்னரே பெரும்பான்மை பிரதிநிதிகள் ஆதரவை பெற்றால் Donald Trump குடியரசுக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ஆவது தவிர்க்க முடியாததாகி விடும். இதனால் இவர் கட்சியின் தேசிய மாநாட்டிற்கு முன்னரே மாநில மற்றும் பிரதேசங்களில் நடைபெறும் தேர்தலில் இருந்து 1,237 பேரின் ஆதரவை பெறாமல் தடுப்பதற்கே தற்போது Ted Cruz, John Kasich உம் அவர்களுக்கு சார்பான குடியரசுக்கட்சியினரும் மும்முரமாக வேலை செய்து வருகிறார்கள்.

**Donald Trump கட்சியின் தேசிய மாநாட்டிற்கு முன்பு அறுதிப் பெரும்பான்மைக்கு தேவையான 1,237 பேரின் ஆதரவை பெறா விட்டால் என்ன நடக்கும்?**

கட்சிமாநாட்டில் பங்குபற்றும் குடியரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சித்தலைவர்கள் உட்பட சிலருக்கு தாம் விரும்பிய ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிக்கும் உரிமை உண்டு. கட்சி மாநாட்டில் முதலில் வாக்கெடுப்பு நடைபெறும். அவ்வாக்கெடுப்பில் மாநிலம் மற்றும் பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தாம் யார் சார்பாக தெரிவு செய்யப்பட்டோமோ



அவர்களுக்கும் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சித்தலைவர்கள் தாம் விரும்பியவருக்கும் வாக்களிப்பதன் மூலம் வாக்குகள் எண்ணப்படும். இந்த முதலாவது வாக்களிப்பில் தற்போது குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர்களாக இருக்கும் மூவரில் ஒருவர் 1,237 பிரதிநிதிகளின் ஆதரவைப்பெற்றால் அவர் குடியரசுக்கட்சியின் வேட்பாளர் ஆக தெரிவுசெய்யப்படுவார்.

இந்த முதலாவது வாக்கெடுப்பில் தற்போது ஜனாதிபதி வேட்பாளராக இருக்கும் ஒருவர் அறுதிப்பெரும்பான்மை (1,237) பெறா விட்டால் குடியரசுக் கட்சித் தலைமைப் பீடம் மாநிலம் மற்றும் பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இனிமேல் தாம் யார் சார்பாக தெரிவு செய்யப்பட்டோமோ அவருக்கு வாக்களிக்க வேண்டிய கட்டாயம் இல்லை என தெரிவித்து விடுவார்கள். இதுவும் மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடும். சில மாநிலங்கள் இரண்டாவது வாக்கெடுப்பிற்குப் பின்னரே தமது பிரதிநிதிகளை தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி வேட்பாளரைத் தவிர வேறு ஒருவருக்கு வாக்களிக்க அனுமதிக்கின்றன.

இதன்பிறகு இந்த பிரதிநிதிகளும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சித் தலைவர்களுமாக சேர்ந்து தமக்கு விரும்பிய எவரையும் குடியரசுக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யலாம். அவர் கட்டாயமாக குறைந்தது 1,237 பிரதிநிதிகளின் ஆதரவை பெற்றவராக இருக்க வேண்டும்.

**Donald Trump அல்லது மற்றைய இருவரில் ஒருவர் வாக்கெடுப்புகளில் அறுதிப்பெரும்பான்மை வாக்குகளை பெறாவிட்டால், பிரதிநிதிகள் யாரை குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்வர்?**


இது யாராகவும் இருக்கலாம். Mitt Romnez அல்லது Paul Ryan ஆக இருக்கலாம் என சில ஊடகங்கள் எதிர்வு கூறுகின்றன. சில ஊடகங்கள் Dick Chency அல்லது Kim Kardashin ஆகக் கூட இருக்கலாம் என்று கூறுகின்றன. ஆனால் Paul Ryan தனக்கு ஜனாதிபதி வேட்பாளராக வர விருப்பமில்லை எனவும் பிரதிநிதிகள் கட்டாயமாக தற்போது ஜனாதிபதி வேட்பாளராக இருக்கும் மூவரில் ஒருவரைத்தான் தெரிவுசெய்ய வேண்டுமென 2016 ஏப்ரில் 12இல் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வாக்கெடுப்புகளில் தற்போது குடியரசுக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக இருக்கும் மூவரில் ஒருவரும் தெரிவு செய்யப்படாமல் வேறு ஒருவர் குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டால், Donald Trump சுயேட்சை வேட்பாளராக இந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார் என ஊடகவியலாளர்கள் எதிர்வு கூறுகின்றனர்.

இவ்வாறு நடைபெறும் கட்சியின் தேசிய மாநாடு 'தரகு வேலை நடக்கும் தேசிய மாநாடு' (Brokered Convention) என அழைக்கப்படுகிறது. அமெரிக்க சரித்திரத்தில் முன்னர் தரகு வேலை நடக்கும் தேசிய மாநாடுகள் நடைபெற்று அதுவரை ஜனாதிபதி வேட்பாளராக இல்லாத ஒருவர் அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஜனநாயகக்கட்சியில் Hillary Clinton இம்முறை தேசிய மாநாட்டிற்கும் முன்னரே தனக்கு அறுதிப்பெரும்பான்மைக்கு தேவையான 2,383 பேரின் ஆதரவை பெற்று விடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca






LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com




# வீழ்ச்சியடைந்துள்ள வடமாகாண கல்வி நிலை!

- ஆதித்தன் -

வட மாகாணத்தில் இன்று கவலை தரும் ஒரு விடயமாக இருப்பது மாணவர்களின் கல்வியில் ஏற்பட்டு வரும் வீழ்ச்சியாகும். இலங்கையிலுள்ள ஒன்பது மாகாணங்களில் வட மாகாணம் கல்வித் தரத்தில் ஒன்பதாவது இடத்தில் உள்ளது. அதாவது, கடைசி இடத்திற்கு வந்துவிட்டது. இது அதிர்ச்சி தரும் ஒன்றாகும்.

2014 ஆம் ஆண்டின் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக மேற்கொள்ளப் பட்ட பகுப்பாய்வின் அடிப்படையில் வடமாகாணம் ஒன்பதாம் இடத்திற்குப் பின் தள்ளப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. வடமாகாணக் கல்வி நிலை சில ஆண்டுகளின் முன்னர், முதல் மூன்று இடங்களுக்குள் இருந்த நிலை மாறி தற்பொழுது இறுதி இடத்திற்கு சரி- வடைந்துள்ளமை சாதாரணமாக பார்க்கக் கூடிய விடயமல்ல. நமது தாய் மொழியான தமிழ் மொழியில் சராசரியாக 25 வீதமான மாணவர்கள் சித்தியெய்தத் தவறுகின்றனர் என்ற புள்ளிவிபரமும் தமிழ் கல்வியாளர் களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

வெடிச் சத்தங்களும், உயிரிழப்புக்களும் இருந்த காலத்தில் கூட கல்வியில் இவ்வாறானதோர் சரிவை வடமாகாணம் கண்டதில்லை. கடுமையான பொருளாதாரத் தடை காரணமாக கற்றல் உபகரணங்களை வாங்குவதே கடினமாக இருந்த காலப்பகுதி அது. மின்சாரமில்லை. மாணவர்கள் குப்பி விளக்குகளில் படித்தார்கள். அக்காலங் களில் வடமாகாண மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று தென்பகுதியினரை ஆச்சரியத்திலாழ்த்தியிருந்தனர். இன்று நாடு முழுவதும் ஒரே மாதிரியான நிலைமை ஏற்பட்டுள்ளது. எதற்கும் எவ்வித தடை களும் இல்லை. குறிப்பாக கற்றலுக்கான தடைகள் எவையும் இல்லை. இருந்த போதும் ஏனிந்த நிலை?

இது தொடர்பிலான ஆய்வுகள் தற்போது கல்விசார் புலமையாளர்களால் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. இப்போது, பாடசாலை களில் ஆசிரியர் பற்றாக்குறை என்று சொல்வதற்கில்லை. போர் நடைபெற்ற காலத்தில் வடக்கில் யாழ்ப்பாண குடா நாடும் வன்னிப் பிரதேசமும் போக்குவரத்து தொடர்புகளற்ற நிலையில் பிளவு பட்டிருந்தது. வன்னியிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதென்றால் திருகோணமலைக்குச் சென்று, அங்கிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு பயணம் செய்த நிலைமைகள் அப்போதிருந்தது. இதனால், வடக்கிலிருந்த ஆசிரியர் வளம் சரியாக பாடசாலைகளுக்கு பகிரமுடியாத நிலை இருந்தது. ஆனால், இப்போது ஆசிரியர் வளம் அனைத்துப் பாடசாலைகளுக்கும் பகிரப்பட்டுள்ளது. ஆனால், பாட ரீதியாகவும் வகுப்பு ரீதியாகவும் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை நிலவுகின்றமை ஆய்வாளர் களால் அவதானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, ஆங்கிலப் பாடத்தை கற்பிப்பதற் கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. க.பொ.த உயர்தர வகுப்புகளில் இரசாயன வியல், பௌதீகவியல், உயிரியல் போன்ற விஞ்ஞான பாடங்களைக் கற்பிப்பதற்கான போதிய ஆசிரிய வளமில்லை. வடமாகாண உயர்தரப் பாடசாலைகளில் விஞ்ஞான, கணித, வர்த்தக பாடங்களைக் கற்பிப்பதற்கு 2075 ஆசிரியர்கள் தேவை யாக இருந்த போதிலும், 1841 ஆசிரியர்கள் மட்டுமே சேவையில் உள்ளனர். இதனால் 224 ஆசிரியர்களுக்கான வெற்றிடம் உள்ளது. ஆனால், ஏனைய பகுதிகளைச் சேர்ந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது. தேவையான பாடங் களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பான தகவல்களை திரட்டி, பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகள் அல்லது வலயங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவற்றிற்கான ஆசிரியர்களை நியமிப்பதற்கான நடவடிக் கைகளை எடுத்தல் வேண்டும் எனவும், இதன்போது, அந்தந்த வலயங்களை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர் களுக்கே முன்னுரிமை வழங்குதல் அவசி யம் எனவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப் படும் ஆசிரியர்கள், பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளில் குறைந்தது 5 வருடங்களா வது கடமையாற்ற வேண்டும் என்ற நிபந்தனையுடன், ஒரு ஒப்பந்தத்தில் கைச் சாத்திட வேண்டும். இதனை மீறுகின்றவர் கள் வேலை இழந்தவர்களாகக் கருதப்படு வர் என்ற நிபந்தனையும் உள்ளடக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தல்கள் முன் வைக்கப்படுகின்றன. பாடசாலைகளில் கற்பித்தலில் உள்ள குறைபாடுகளும், அதனை நிவர்த்தி செய்வதற்கான ஆலோசனைகளும் ஆய்வு ரீதியாக மேற் கொள்ளப்பட்டு அதற்கான பரிகாரங்களும் குறிப்பிடப்பட்டு, வட மாகாண முதலமைச்ச ருக்கும், கல்வி அமைச்சருக்கும் வழங்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் கூட, இன்று மாணவர்களிடம் ஏற்பட்டுள்ள பழக்கவழக்கங்களும், ஆசிரியர்களிடம் இல்லாமற் போயுள்ள அர்ப்பணிப்பு உணர்வுமே இந்த நிலைமைகளுக்கு காரணம் என்று கூறினால் அது மிகையாகாது.



போர்க் காலங்களில் மாணவர்களுக்கு கற்றலை விடவும் வேறு பொழுதுபோக்கு கள் இல்லை. ஆசிரியர்களுக்கு கற்பித் தலைவிட வேறு வேலைகள் இல்லை. இன்று மாணவர்களை வேறு திசைகளில் இழுக்கும் பொழுதுபோக்கு சாதனங்கள் அதிகரித்து விட்டன. குறிப்பாக இணைய வசதியுடன் கூடிய நவீன கைத் தொலைபேசிகள் இல்லாத உயர்வகுப்பு மாணவர்கள் எவரையும் வடக்கில் காண முடியாது. அந்தளவிற்கு போதைப் பொருள் போல அவை அவர்களை ஆக்கிரமித்துள்ளன.

ஐந்தாம் ஆண்டிற்கு வந்தவுடனேயே இவ்வாறான சாதனங்களை பயன்படுத்த மாணவர்கள் ஆரம்பித்து விடுகின்றார்கள். மாணவர்களை அவர்களின் பெற்றோரோ அல்லது ஆசிரியர்களோ கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த பொழுதுபோக்கு சாதனங்களே இன்று வட மாகாணத்தில் கல்வி பின்னடைந்துள்ள மைக்கு பிரதான காரணிகளில் ஒன்றாகும்.

தென்னிலங்கை மாணவர்களிடம் இப் பழக்கங்கள் இல்லையா என்று யாரும் கேள்வி எழுப்பலாம். வட மாகாணத்தில் இந்த பொழுதுபோக்கு சாதனங்கள் போர் முடிவிற்கு வந்த பின்னரே அதிகரித்தது. தெற்கில் சாதாரணமாகவே இருந்து வந்தது. தடைசெய்யப்பட்ட ஒரு பொருள் தாரா- ளமாக கிடைக்கத் தொடங்கியதும் அதன் மீதான ஆர்வம் அதிகரிப்பதென்பது இயல்பானது. அதனால், வடக்கில் அது தீவிரமாக மாணவர்களையும் இளைஞர் களையும் தொற்றிக் கொண்டுள்ளது. இதனை எவ்வித்தில் தடுப்பது என்பதை கூறுவது கடினமானது. ஆசிரியர்கள் தொடர்பாக பார்க்கப்போனால், பாடசாலை களில் கற்பிப்பதை விடவும் அவர்கள் தனியார் கல்வி நிலையங்களில் கற்பிப்பதில் அதிக ஆர்வம் காட்டி வருவதால் கல்வி ஒரு வியாபாரமாகி விட்ட நிலை ஏற்பட்டுள்ளது.

வன்னிப் பிரதேசங்களில் உள்ள ஆசிரியர்கள் கடுமையான போர்க் காலங்களில் கூட அர்ப்பணிப்புடன் கற்பித்த மையை மறக்கவியலாது. ஆனால், அவர்களும் இன்று பொருளாதாரத் தேடலுக்கு முன்னுரிமை வழங்கிச் செயற்படு கின்றனர். பாடசாலையில் கற்பிப்பதை விடவும் வேறு தொழில்களிலும் ஆசிரியர்கள் ஈடுபடுகின்ற நிலைமையினை அவதானிக்க முடிகின்றது.

பாடசாலை நிர்வாக முறைமை, ஆசிரியர் வளம் குறித்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். ஆனால், மாணவர்களின் பழக்கவழக்கங்களில் மாற்றத்தை ஏற்படுத்து வதும், ஆசிரியர்களிடம் அர்ப்பணிப்புத் தன்மையை ஏற்படுத்துவதென்பதும் எளிதா னதல்ல. அவர்கள் நினைத்தால் தவிர வேறு வழிமுறைகளால் அவற்றை ஏற்படுத்த முடியாது.

மாணவர்களின் பொழுது போக்கு பழக்கத்தை மாற்ற பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஒன்றிணைந்து ஒரு வழிமுறையை அல்லது பொறிமுறையை ஏற்படுத்துவது குறித்து ஆராயலாம். இதனை இப்படியே விட்டுவிட முடியாது. எவ்வாறெனினும் இந்த வீழ்ச்சியிலிருந்து வட மாகாண கல்வித் தரத்தை காப்பாற்றியே ஆகவேண்டும்.

தமிழர் வாழ்வியலில் எத்தனையோ அழிவுகள், இழப்புக்கள் ஏற்பட்ட போதும் அவர்களின் அழிக்க முடியாத சொத்தாக கல்வியே திகழ்ந்து வந்துள்ளது. எனவே, கல்வியின் வீழ்ச்சியிலிருந்து அதனை மேலெழச் செய்யும் கடமை அனைத்து தமிழர்களுக்கும் உள்ளது.

விளம்பரம்™
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
பத்திரிகை முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: செல்வி ரஞ்சன்
தாரணி இந்திரராஜ்
பதிப்பு: Canyon Press Inc.

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E.,*
*#201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com*

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளி யாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர் கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமை யாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# நிருபிக்கப்பட்ட G7-500
# கணித வெற்றி நெறி

**For Gr. 7**

கடந்த **27** வருடத்திற்கும் மேலாக கணிதபாடம் கற்பித்தல் ஏற்பட்ட அனுபவத்தில், தரம் 11, 12இல் பயிலும் மாணவர்கள் மிக அவதிக்குட்படுவதைக் கண்காணிக்கக்கூடியதாக இருந்தது. இவ் இக்கட்டான சூழ்நிலைகளைத் தவிர்க்கவென்றே எமது முழு அனுபவங்களையும் திரட்டி May2015இல் மிகப்பெரிய கணித கல்வி நெறியொன்றான **G8-400** ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் மிகச்சிறப்பான வெற்றிகிட்டியதோடு, மேலும் புதிய அதினுண்மையும் புலப்பட்டது. இப்புதிய அனுபவத்துடன் பல பெற்றோரின் வேண்டுதலினையும் செவிமடுத்ததில் இவ்வருடம் **G7-500** எனப்படும் புதிய கணித பாடத்திட்டம் தற்சமயம் தரம் 7இல் பயிலும் மாணவர்களுக்காக ஆரம்பிக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் முழுவிபரங்களை மாணவர்களும் பெற்றோர்களும் அறியும் பொருட்டு ஓர் சிறிய கணித அறிமுகதேர்வு நடைபெறவுள்ளது. ஆர்வமுடைய பெற்றோர்கள் பின்வரும் மின்அஞ்சல்மூலம் மாணவர் பெயர், பாடசாலை, தொலைபேசி இல., இவற்றுடன் முற்பதிவுசெய்யவும்.



அறிமுகத் தேர்வு: **May 21/2016**

பதிவுத் தேதி இறுதிநாள்: **May 16/2016**

மின் அஞ்சல் : **g7.500math@gmail.com**

## New classes for 2016 / 17

- For current Gr.7 **New** — G7-500 — starts: May 23/16
- For current Gr.8 **New** — G8-400 — starts: May 23/16
- For current Gr.10 — G11 & 12 — starts: May 1/16

Entire new program, Helps students score 90's and above in Function(G11) and AF(G12)

*University Level

- For current Gr.11 — G12-100AFCV — starts: May 15/16

(Advanced Function, Calculus &Vectors)

The most wanted program for Gr.11. If anyone is thinking of going into higher level University for a life science or Engineering program, You must consider this Program.

*University Level

மேலதிக தகவல்களுக்கு

**Info: 416-666-5515**

**MATH WORLD**
**Most Advanced Talented Help**

# ஜெயலலிதாவின் ஐந்தாண்டு ஆட்சி

## ஒரு மதிப்பீடு -3

வாஸந்தி - எழுத்தாளர்

இலவசங்களைச் சார்ந்து வாழ்பவர்களாகத் தமிழக மக்களை மாற்றியதுதான் இந்த ஆட்சியின் மிகப்பெரிய சாதனையாக எனக்குத் தெரிகிறது. இலவச டிவி, இலவச மின்சாரம் என முன்பும் இலவசங்கள் இருந்ததுதான் என்றாலும், விலையில்லா கிரைண்டர், விலையில்லா மிக்ஸி, விலையில்லா மின்விசிறி, விலையில்லா அடுப்பு, விலையில்லா ஆடு, விலையில்லா வேட்டி சேலை, மாதம் 20 கிலோ விலையில்லா அரிசி, விலையில்லா அம்மா குடிநீர் என இலவசங்களை இந்த அரசு வாரி வழங்கி, எங்கும் விலையில்லா மயமாக்கிவிட்டது. இன்னொரு பக்கம் குறைந்த விலை அம்மா உணவகம். இவை எல்லாம் சேர்ந்து தமிழக மக்களைத் தன்மானமற்றவர்களாகவும் சுயகௌரவம் அற்றவர்களாகவும்தான் ஆக்கியுள்ளதுதான் இந்த ஆட்சியின் சாதனை.

இலவசங்கள் போலவே ஓட்டுக்குக் காசு என்பதையும் இந்த ஐந்தாண்டில் உறுதிபடுத்திவிட்டார்கள். இதனால், மக்கள் மத்தியில் ஜனநாயகம் குறித்த பிரக்ஞையே அடியோடு போய்விட்டது. ராஜா ராணி கால ஆட்சி போல் உள்ளது. ஆட்சியில் இருப்பவர்களைப் புகழ்ந்து பாடி பரிசல் பெற்றுச் சென்ற புலவர்கள் போலிருக்கிறார்கள் தமிழர்கள்.

அடுத்து அரசு என்ன தரும் எனக் கையேந்தி நிற்கும் பிச்சைக்காரர்களாக இருக்கும் தமிழக மக்களை முன்னேற்றுவதற்கான எந்தப் பெரிய திட்டமும் இந்த அரசிடம் இல்லை. எதையும் இந்த அரசு செயல்படுத்தவுமில்லை. கல்வியறிவு, வேலை வாய்ப்பு, உற்பத்தி என எல்லாத் துறைகளிலும் தமிழகம் பின்னோக்கிதான் செல்கிறது. கோயம்புத்தூர் பஞ்சாலைகள் மிக மோசமான நிலையில் உள்ளன.

ஆனால், இந்த இலவசங்களை மக்கள் பெரியதாகத்தான் நினைக்கிறார்கள். இது மிக வேதனையானது. 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்பார்கள். மக்கள், குறிப்பாக ஏழைகள், படிப்பறிவற்றோர் இந்த இலவசங்களை பெரியதாகத்தான் நினைக்கிறார்கள். கர்நாடகாவில் எங்கள் வீட்டு வேலைக்கு வரும் பெண்கூட, "தமிழகத்தில் அம்மா நிறையப் பொருட்கள் இலவசமாகக் கொடுக்கிறார்கள் அதுபோல் இங்கே கர்நாடகா அரசு எதுவுமே கொடுக்கவில்லை. தமிழக மக்கள் கொடுத்து வைத்தவர்கள்" என்று சொல்கிறார். இதுபோல் மற்ற மாநில மக்கள் மத்தியிலும் தமிழக இலவசங்கள் குறித்த நல்ல வரவேற்பு உள்ளது. மனோரீதியில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மற்ற மாநிலத்தவர்களே இதுபற்றி பேசும்போது தமிழக மக்கள் பற்றி சொல்லவா வேண்டும்.



எனக்குத் தெரிந்து அம்மாவின் விலையில்லாப் பொருட்கள்தான் இன்று தமிழக ஏழை மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது. அதிமுகவின் வாக்கு வங்கியும் இவர்கள்தானே. தேர்தலில் இது அதிமுகவுக்கு பெரிய பலமாக இருக்கும். இலவசங்கள் என்பது அடுத்த தேர்தல் வெற்றிக்கான வியூகங்கள்தானே. அதிமுக கட்சி அறிவித்த திட்டங்களில் எதையெல்லாம் செய்துள்ளது, எதையெல்லாம் செய்யவில்லை என்பதைவிட, மக்கள் மனதில் இன்று இலவசத் திட்டங்கள்தான் இருக்கிறது. சமீப கருத்துக் கணிப்புகளில்கூட ஏழைகள் அதிகமும் அதிமுகவுக்கு வாக்களிப்போம் என்று சொல்லியுள்ளது குறிப்பிடத்தக்கது. இலவசங்கள்தான் தேர்தலை தீர்மானிக்கப் போகிறது என்பது வேதனையானது.

தமிழக உள்ளாட்சி அமைப்பு பதவிகளில், பெண்களுக்கு, 50 சதவீத ஒதுக்கீடு அளிக்கும் சட்ட திருத்த மசோதா, சட்டசபையின் கடைசி நாளில் நிறைவேற்றப்பட்டுள்ளது. எம்.ஜி.ஆர். போல் பெண்கள் மத்தியில் ஜெயலலிதாவுக்கு எப்போதும் ஒரு வசீகரம் உண்டு. இந்தச் சட்ட திருத்த மசோதா அதனை இன்னும் அதிகரிக்கும். அதிகாரத்தைக் கைப்பற்றினால் மதுவிலக்கைக்கூடக் கொண்டுவர முடியும் எனப் பெண்கள் நினைக்கிறார்கள். அந்த வகையில் இதை ஜெயலலிதாவின் ஒரு சாமர்த்தியமான அணுகுமுறை என்றே நான் பார்க்கிறேன்.


# CUSTOM BUILD HOME

**Build Your Personalized Custom Build Home**
**Starting From $139 / sq ft**

**Quality ! Price !! Peace of Mind !!!**



உங்கள் கனவு இல்லத்தை நனவாக்குவதற்கு
அனுபவம் நிறைந்த, நாணயமான ,
தரமான கட்டிட நிபுணர்கள்

**Industrial Buildings from $85 / sq ft**

**TAMB CANADA** (647) 877-8262 (TAMB)

# தெரியாதவர்களுக்கு கதவைத் திறக்காதீர்கள்!

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் 462**

ஒன்ராரியோ அரசு ஏப்ரல் 01, 2015ஆம் அன்று ஒரு புதிய சட்டத்தை நடைமுறைப் படுத்தியது. அதாவது கதவு தட்டும் வியாபார பிரதிநிதிகள், Hot Water, Heaters ஐ ஒரு வழங்குபவரிடமிருந்து வேறொரு வழங்குபவரிற்கு மாற்றுவதில் இருந்து மக்களை பாதுகாக்கவே இந்த சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. ஆனால் இவ்வாறான தேவைகளுக்கு கதவு தட்டுவது நாளாந்தம் தொடர்ந்தே நடைபெற்று வருகின்றது. கவனமாக இருக்க வேண்டியது எமது கடமை.

**ஆனால் நோக்கம் வேறு.**

அதாவது Furnace (வீட்டை வெப்பமாக்கும் சாதனம் மற்றும் Air condition (வீட்டை குளிரூட்டும் சாதனம்) போன்றவற்றை வாடகைக்கு தரும் நிறுவனத்தை மாற்றுவதற்கான பத்திரத்தில் ஒப்பமிடுவதற்காகவே கதவை தட்டுகின்றார்கள். இந்த நிலையில், இவ்வாறான சாதனங்களிற்கு மாதமாதம் பணம் செலுத்துவதுடன் இவற்றை நாம் உரிமை கொண்டாட முடியாது.

• இவ்வாறாக கதவு தட்டுபவர்களிடம் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும்.

• Furnace / Air Conditon ஐ 'பரிசோதிப்பதற்காக (Inspect) வருவதாக காட்டிக் கொள்வார்கள்.

• எரிவாயுவின் புதிய உபகரணத்தால் சேமிக்கப்படும் பணம் மாதமாதம் செலுத்த போதுமானதாக இருக்கலாம் எனக் கூறுவார்கள்.

• ஒன்ராரியோ அரசு $1300 வரை மீளளிப்பு (Rebate) தருவதாக கூறுவார்கள். ஆனால் உண்மை என்ன என்றால் - High Efficiency Furnace இற்கு $650, - Central air condition இற்கு $250-$400 வரை பெறுமதியான Rebate கிடைக்கலாம்



பொதுவாக இவ்வாறான சாதனங்கள் வாடகைக்கு பெறுவதனை விட சொந்தமாக வாங்குவதே சிறந்தது என புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. அத்துடன் புதிதாக ஆதனம் வாங்குபவர்கள் இவ்வாறான சாதனங்கள் வாடகைக்குரியதா அல்லது வீட்டு சொந்தக்காரர் உரிமை கொண்டுள்ளாரா என்பதை ஆதன முகவர் மூலம் அறிவது சிறந்தது. பொதுவாக புதிய ஆதனம் வாங்கும்போது இதற்கு முக்கிய கவனம் கொடுத்தல் நல்லது.

ரொறொன்ரோவின் ஆதன விலையானது வன்கூவரின் அதேபாதையில் செல்வதனைக் காணலாம். அதாவது ஆதன வியாபாரத்தின் வியாபாரமும் விலையேற்றமும் இவ்வாறே காணப்படுகின்றது. இன்று கனடாவில் வன்கூவர் நகரமே ஆதன விலையில் முன்னிலையில் காணப்படுகின்றது.

ரொறொன்ரோவில் ஒரு மில்லியன் டொலரிற்கு குறைந்த விலையில் உள்ள ஆதனங்கள் (வீடுகள் / மனைகள்) இலகுவாக விற்கப்படுகின்றது. (போட்டா போட்டியில் (Multiple Offers) விற்கப்படுகின்றது. விலை கூடிய ஆதனங்கள் காலம் எடுத்தே விற்கப்படுகின்றது.

ஆனால் வன்கூவர் நகரில் விலை கூடிய வீடுகளும் போட்டியில் விற்கப்படுகின்றது. அண்மையில் வன்கூவர் நகரில் $25.29 மில்லியனிற்கு விற்கப்பட்டுள்ளது. இதற்கு பல வாங்குபவர்களின் போட்டியே காரணமாகக் காணப்பட்டது. அதாவது 5 மில்லியனிற்கும் மேலதிகமாக விற்கப்பட்டுள்ளது. ஆதனம் விற்றல் வாங்கலில் 2013 மத்தியில் ஏற்பட்ட இந்த அதீத ஆதன விலை அதிகரிப்பு, இந்த வருடத்தின் இந்த மாதம் வரை தொடருகின்றது. இந்நிலைமை அதிகமாக வன்கூவரில் ஏற்பட்ட போதிலும் ரொறொன்ரோவிலும் இதே மாதிரியான முறையை காணக்கூடியதாக உள்ளது. குறைந்த வட்டிவீதம், விற்பனைக்கான வீடுகள் சந்தையில் குறைந்தளவு காணப்படுதல், புதிய குடிவரவாளர்களின் வருகை, கனேடிய டொலரில் ஏற்பட்ட இறக்கம் முக்கிய காரணங்களாக கொள்ளப்படலாம்.

பொதுவாக வெளிநாட்டவர்களினால் அதிக வீடுகள், மனைகள் வாங்குவதும் ஒரு காரணமாகக் கூறப்படுகின்றது. 2000ஆம் ஆண்டிற்கு பிற்பாடு வெளிநாட்டவர்கள், அதிகமானோர் கனடாவின் ஆதனத்தில் முதலீடு செய்வதனைக் காணலாம். அண்மையில் வந்த அறிக்கைகளின் பிரகாரம் 10% இற்கு குறைவானவர்களே

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"
HOMELIFE HIGHER STANDARDS
HomeLife / GTA Realty Inc. Brokerage.*
5215 Finch Ave, East. #203 Toronto, On. 416 315 9397
* independently owned and operated

Raja Mahendran, P Eng

HOTELS FOR SALE
Prominent Hotels Available For Sale in & around GTA.
Price starting from $4 million

Sale /Lease
GTA Square
Middlefield & Finch
Commercial /office space
Size Upto 1000 Sq. Ft.
2nd Floor, 2- Lockers
1-Underground Parking
Available immediately

Retail space
Middlefield &Finch
Retail space
Size Upto 430 Sq. Ft.
Main Floor, corner unit
1-Underground Parking
Price Reduced to $159K
( from $169K)

BAKERY FOR RENT/SALE
Well Established Bakery in East Scarborough
Close to: 10 Highrise condos/Appartments, Schools, TTC,Community Centre,Library and Church.
Included:Bakery Equipments,Coolers & other accessories
Availabe Immediately For Rent or Sale

# புதிய ஜனநாயக...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

Megan Leslie - இவர் புதிய ஜனநாயகக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர். 2015 இல் தேர்தலில் தோல்வியுற்றவர். 42 வயதான இவர் சுற்றுப்புற சூழல் மாசு அடைவதை நிறுத்த தீவிர நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பவர். இவர் 'Leap Manifesto' கொள்கையின் ஆதரவாளர்.

Avi Lewis - 'Leap Manifesto' கொள்கையை வகுத்தவரில் ஒருவர். ரொறொன்ரோவில் பிரபல திரைப்பட தயாரிப்பாளராக இருந்து வருகிறார். 48 வயதான இவர் CBC யில் ஊடகவியலாளராக இருந்தவர். தீவிர இடதுசாரி போக்குள்ள புதிய ஜனநாயகக்கட்சி உறுப்பினர்களின் கதாநாயகனாக திகழ்கிறார்.

மேற்கூறியவாறு புதிய ஜனநாயகக்கட்சியின் தலைமைப்பதவிக்கு போட்டிபோடக் கூடிய இரண்டு பெண்களையும் மூன்று ஆண்களையும் தனது 2016 ஏப்பிரல் 10 பதிப்பில் குளோப் அன்ட் மெயில் விபரித்துள்ளது.

# வைகோவை...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

சொன்னாரோ, அந்தக் காரணம் இன்றும் பூரணமாக உள்ளது. 4 ஆண்டுக் காலம் அதிமுக ஆட்சி வெற்றிகரமாக நடந்துவந்த சூழ்நிலையில், அரசை எதிர்த்துப்போராட அவர்களுக்கு எதுவும் கிடைக்காத நிலையில்தான், இந்தப் போராட்டத்தை மக்கள் மீது திணித்தார்கள். தன்னைத் தற்காத்துக்கொள்ள நினைக்கும் எந்தத் தமிழனும் மதுவுக்கு அடிமையாகமாட்டான். மதுவுக்கு தமிழ்நாட்டில் மக்களை அடிமைப்படுத்திய குற்றம் கருணாநிதிக்கு உரியதே தவிர எங்களுக்கு அல்ல. ஆகவே, இந்த அரசாங்கத்தின் மீது பொய் நெல்லைக் குத்தி பொங்கவைக்க நினைப்பவர்களின் இந்தக் குற்றச்சாட்டு வீரியமற்றது. இது நீடிக்காது.



இந்தத் தேர்தலில் அதிமுகவின் பலம் என்ன?

கடந்த ஐந்தாண்டு காலத்தில் அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தைத் தீர்மானிப்பதற்கு செய்த திட்டங்கள், அச்சத்தில் இருந்தும் பசியிலிருந்தும் அறியாமையில் இருந்தும் தமிழகத்திற்கு விடுதலை பெற்றுத்தந்த மாட்சி, மாநில உரிமைகளை அடகு வைக்காமல் முல்லைப் பெரியாறு

**- சிவதாணு -**

பிரச்சனையிலும் காவிரி பிரச்சனையிலும் போராடி மீட்டுத்தந்த வீரம், நெய்வேலி லிக்நைட் காப்பரேஷன் பங்குகளைத் தனியாருக்கு விற்க துடித்தபோது அதனை அரசே வாங்கி பொதுத்துறை நிறுவனத்தை காப்பாற்றித் தந்த சாதுர்யம், 2 லட்சத்து 42 ஆயிரம் கோடிக்கு தமிழகத்தில் தொழில் முதலீடு செய்ய வித்திட்ட விவேகம்... இவை எல்லாவற்றையும் மக்கள் மன்றத்தில் உரக்கச்சொல்லி வாக்குகளை கேட்போம்.

ஆனால், பெருமழை வெள்ளத்தின் போது அரசு காட்டிய மெத்தனம் அதிமுகவுக்கு எதிரான அலையாக வீசும் என்கிறார்களே எதிர்கட்சிகள்?

ஆளுங்கட்சிக்கு எதிரான அலை என்பது தமிழகத்தில் இல்லவே இல்லை. ஆங்காங்கே உருவாகக்கூடிய சில அசம்பாவிதங்களை எதிர்க்கட்சிகள் பெரிதாக்க எடுத்துக்கொண்ட முயற்சியும் வெற்றிபெறவில்லை. எதையும் கண்டுங்காணாமல் இருக்கும் அரசு இது இல்லை. "ஒரு தவறு செய்தால் அதைத் தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்" என்ற மக்கள் திலகத்தின் மணிவாசகத்தை நடைமுறைப்படுத்தும் ஆட்சி இந்த ஆட்சி. குழம்பிய குட்டையில் மீனைப் பிடிக்கலாம் என்று குதர்க்க புத்தியுள்ளவர்கள் செய்யும் அற்பத்தனமான அரசியல் எடுபடாது. இதுவரை இந்திய அரசியலில் யாரும் பெற்றிராத வெற்றியை அதிமுக பெறும்.

மூன்று வருடங்களுக்குப் பெய்ய வேண்டிய மழை மூன்று நாட்களில் கொட்டித் தீர்த்தது. அதை உள்வாங்கும் சக்தி மண்ணுக்கும் மக்களுக்கும்கூட இல்லை தான். அது உலகத்தில் இன்றைக்கு அசாதாரணமாக உருவாகி இருக்கும் பருவ நிலை மாற்றத்தின் விளைவு. மழைக்குப் பிறகு நிவாரணப் பணிகளை இந்த அரசு மேற்கொண்ட விதம் குறித்து மக்கள் பாராட்டத்தான் செய்கிறார்கள். 30 லட்சம் பேருக்கு அவர்களின் வங்கிக் கணக்கில் பணம் போட்டு, அவர்கள் இழந்த குடும்ப அட்டை, பாஸ்புக், அடையாள அட்டை எல்லாவற்றையும் ஒரு வாரத்தில் திருப்பிக் கொடுத்து, அடையாறு ஆற்றங்கரை ஓரத்தில் வாழ்ந்த மக்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் புதிய வீடுகளைக் கொடுத்து, 15 நாட்களில் இயல்பு நிலைக்கு அம்மா கொண்டு வந்தார். அந்த நேரத்தில் ஏற்பட்ட அதிருப்தியான கோஷங்களை திமுக பயன்படுத்திக்கொண்டது. ஆனால், அது நீண்ட நாட்கள் அவர்களுக்குப் பயன் தரவில்லை.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பலருக்கும் நிவாரணத் தொகை 5000 ரூபாய் சென்று சேராதது உங்களுக்கு எதிராகத் திரும்பாதா?

பாதிக்கப்பட்ட அனைவருக்கும் பணம் போய்ச்சேர்ந்துவிட வேண்டும் என்பதில் அரசு உறுதியாக இருக்கிறது. ஆனால், அதை கொடுக்கவிடாமல், தேர்தல் கமிஷன் மூலம், திமுகதான் முட்டுக்கட்டை போடுகிறது.

உங்களின் பிரதான போட்டியாளரான திமுக, காங்கிரஸ் மற்றும் சில சிறு கட்சிகள் கூட்டணியுடன் தேர்தலை எதிர்கொள்ளும்போது தனித்து நிற்கும் அதிமுக முடிவு சரியானதுதானா?

நாங்கள் நாடாளுமன்ற தேர்தலை சந்தித்தபோதே கூட்டணியை நம்பி நிற்கவில்லை. தனியாக 39 இடங்களில் நின்று 37 இடங்களில் வென்று இந்தியாவில் மூன்றாவது பெரிய கட்சி என்ற தகுதியை அடைந்தோம். அந்த வெற்றி இன்னும் விசாலமாகும். நேற்று இருந்த நிலையைவிட இன்றைய நிலைமை மோசமாகவில்லை.


TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB &AP PROGRAMME
✓ MCAT Classes
✓ EQAO GR 3 & 6
GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com


# வடக்கில்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

மொனராகலை பகுதியில், சட்டவிரோதமாக துப்பாக்கி உற்பத்தி செய்யப்பட்டு வந்த தொழிற்சாலை ஒன்று கடந்த வாரம் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது. அங்கு, பல்வேறு வகையான துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன. துப்பாக்கி தயாரிப்பிற்கு பயன்படுத்தப் பட்ட இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டன. இது ஒரு சம்பவமாக மட்டுமே தென்னிலங்கையில் பார்க்கப்படுகின்றது. சிங்கள ஊடகங்களும் இவ்வாறான வற்றை ஒரு செய்தியாக மட்டுமே வெளியிடுகின்றன. தமிழ் பிரதேசங்களில் இடம் பெறும் சிறு சம்பவமும் ஊதிப் பெருப்பிக்கப்படுகின்றது. கடந்த மூன்று மாதங்களில் நாடு முழுவதிலுமிருந்து, வெடிபொருட்களைக் கண்டுபிடித்த சம்பவங்கள் பத்தாயிரம் இடம்பெற்றுள்ளதாக பாதுகாப்பு செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி குறிப்பிடுகின்றார்.



இன்று தெற்கில் மேற்கொள்ளப்படும் இனவாதப் பரப்புரைகளை ஒரு தீய விடயமாகவே பார்க்க வேண்டியுள்ளது. அரசாங்கம் இதனை சாதாரணமாக விட்டுவிடாமல் அனைத்து விடயங்களுக்கும் மக்களிடம் விளக்கமளித்து வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற புதிய மாற்றத்தை, துளிர்விடத் தொடங்கியுள்ள ஜனநாயகத்தை தக்க வைக்கவும் அதனை மேம்படுத்தவும் மக்களின் பங்களிப்பும் பொறுப்பும் மிக முக்கியமானவை. குறிப்பாக, தமிழ் மக்கள் எல்லாப் பக்கங்களிலும் விழிப்புடனிருப்பது இத்தருணத்தில் மிக அவசியமானதாகும்.

# தெரியாதவர்களுக்கு...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

வெளிநாட்டு முதலீட்டாளர்களாக காட்டுகின்றது. எனினும் உள்ளூர் வாங்குபவர்கள் விற்பவர்களும், ஆதன விலையின் அதிகரிப்பிற்கு காரணமாக கொள்ளலாம். கடந்த பல வருடங்களாக பல அறிக்கைகள் ஆதனத்தின் விலை கட்டுக்கடங்காமல் அதிகரிப்பதாகவே கூறிவருகின்றன. இவ்வாறான சில அறிக்கைகள் விரைவில் விலையிலும், ஆதன வியாபாரத்திலும் பாரிய தடங்கல் ஏற்படலாம் என அபாய அறிக்கையையும் விட்டுக் கொண்டே இருக்கின்றது.

ஆனால் இதுவரை காணவில்லை. "பல நாள் கள்ளன் ஒரு நாள் பிடிபடுவான்", புலி வருகின்றது என்ற கதை போலவும் இருக்கலாம். எதற்கும் ஆழம் அறிந்து கால் விடுவது சிறந்தது. நிதானமான முதலீடு எப்பொழுதும் எமது முதலீட்டை பாதுகாக்கும்.

# அதிமுகதான் மீண்டும் ஆட்சிக்கு வரும்!

## நேர்காணல் - தமிழருவி மணியன்

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது பாஜக கூட்டணியி-ல் கட்சிகளை ஒன்று சேர்க்கும் 'லிங்க்' மேக்கராக செயல்பட்டவர் காந்திய மக்கள் இயக்கத் தலைவர் தமிழருவி மணியன். அப்போது எந்தக் கட்சிகளை எல்லாம் 'லிங்க்' செய்தாரோ அந்தக் கட்சிகளை எல்லாம் தற்போது விமர்சனங்களால் வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறார். மக்கள் நலக் கூட்டணி - தேமுதிகவுடன் இணைந்து விஜயகாந்த் முதல்வர் வேட்பாளராக அறிவிக்கப் பட்டதும், "அக்கூட்டணியைத் தோற்கடித்தே தீருவேன்" என்று சூளுரைத்து அரசியல் களத்தை சூடேற்றினார். தமிழருவி மணியனு டன் பேசினால் அனல் தெறிக்கிறது!

25 தொகுதியில் மட்டும் ஏன் உங்கள் கட்சி போட்டியிடுகிறது?

234 தொகுதிகளுக்கும் செலவுகள் செய்ய எங்களுக்கு வசதி இல்லை. எனவே, பரிட்சார்த்தமாக 25 தொகுதிகளுக்கு மட்டும் வேட்பாளர்களை அறிவித்துள்ளோம். ஒவ்வொரு தொகுதியிலும் 2000 வாக்குகள் வாங்கினாலும் சரி, 5000 வாக்குகள் வாங்கினாலும் சரி, இதன்மூலம் ஒரு மாற்று அரசியலை முன்னெடுத்து மக்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டும் என்ற கொள்கையில் உறுதியாக உள்ளோம். மதுவற்ற மாநிலம், ஊழலற்ற நிர்வாகம் இதுதான் எங்களது நோக்கம்.

யாருடனும் கூட்டணி அமைக்காமல் தனித்துதான் நிற்கப் போகிறீர்களா?

காந்திய மக்கள் இயக்கம், ஒருபோதும் சாதிய அமைப்புகளோடும் மத அமைப்பு களோடும் கூட்டணி அமைக்காது என்பதில் உறுதியாக இருக்கிறோம். இப்போது தமிழகத்தை ஆளும் அ.தி.மு.கவை தவிர அனைத்துக் கட்சிகளுமே மதுவிலக்கைப் பற்றி பேசுகின்றன. ஆனால், அவர்களது கட்சியில் இருப்பவர்களே மது அருந்துபவர் களாக இருக்கிறார்களே. பாமகவினர் எந்த இடத்தில் மாநாடு போட்டாலும் மது விற்பனைதான் அதிகமாக உள்ளது. எனவே, இவர்கள் யாருடனும் கூட்டணி சேர்வது சாத்தியமில்லை.

ஆனால், ஒரு மாற்று அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்பதற்காக, அப்துல்கலாமோடு 20 ஆண்டு காலம் நிழல-ாகப் பயணித்த பொன்ராஜ் அவர்கள் உருவாக்கியுள்ள விஷன் இந்தியா பார்ட்டியோடு இணைந்து தேர்தலை சந்திக்க உள்ளோம். காந்தியம் சொல்லக் கூடிய நேர்மை, எளிமை, பொதுவாழ்வில் தூய்மை ஆகியவற்றின் வடிவமாகவே வாழ்ந்து மறைந்தவர் அப்துல்கலாம். அவருடன் இருந்தவர் பொன்ராஜ்.

முன் எப்போதையும்விட அதிகமான முதல்வர் வேட்பாளர்கள் இந்தத் தேர்தலில் களத்தில் நிற்கிறார்கள், உங்கள் கூட்டணி முதல்வர் வேட்பாளர் யார்?

பதவிகளை நாடிச் செல்லாமல் இருப்பதற்குப் பெயர்தான் உண்மையான காந்தியம். அமெரிக்க விடுதலைப் போரை முன்னின்று நடத்திய ஜோர்ஜ் வாஷிங்டன் தான் வெற்றிபெற்றதும் முதல் அதிபராக வந்தார். இதுபோலவே போராடி வெற்றி பெற்றதும் ரஷ்யா அதிபராக லெனின், தென் அமெரிக்க அதிபராக நெல்சன் மண்டேலா, கியூபா அதிபராக ஃபிடல் காஸ்ட்ரோ போன்றோர் வந்தார்கள். ஆனால், இந்தியா விற்கு விடுதலை பெற்றுத் தந்த காந்தி மட்டும் எந்தப் பதவிக்கும் வரவில்லையே. பதவி துறப்பதுதான் காந்தியத்தின் சிறப்பே. முதலமைச்சர் பதவி கனவு காண நான் தயாராக இல்லை.



கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டணியை உருவாக்கும் பரபரப்பில் இருந்தீர்கள். இப்போது அப்படி எந்த முயற்சியிலும் ஈடுபடாமல் சைலண்டாகி விட்டீர்களே?

அப்போது பா.ஜ.க. தலைமையில் ஓர் அணியை அமைத்ததற்கு காரணம், அதிமுக, திமுக பிடியில் இருந்து

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

ஆயுர்வேத, சித்த, யோக மருத்துவ முறையில் சிகிச்சை

•ஒற்றைதலைவலி (Migraines)
•கழுத்துவலி (Neck pain)
•முதுகுவலி (Back pain
•முழங்கால்வலி (Knee pain)




•கைவலி (Hand pain)
•கைவிறைப்பு (Numbness)
•மூட்டுவலிகள் (Arthritis)
•பாதவலி (Foot pain)

OUR SERVICES:

CONSULTATION
MASSAGE THERAPY
HERBAL REMEDIES
YOGA CLASSES

YOGA CLASSES FOR ADULTS

Monday to Thursday 9.00am to 10.30am | Sat & Sun 7.00am to 8.45am



YOGA FOR KIDS & ADULTS

Sunday 6.00pm to 7.00pm

EASTERN HEALING CLINIC

220 Milner Ave ( Markham & Milner),
Unit #3,Scarborough,Ontario,M1S 4M8
TEL: 416-803-6571 Web: www.yogalight.ca



**CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT**

" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb

**Commercial**

. We Clean Commercial Linens, Aprons, & Towels• We Clean Uniforms Dry Clean or Wash & Dry

. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc

STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm

(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7


# அதிமுகதான்...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

தமிழகத்தை விடுவிப்பதற்காகத்தான். 20 விழுக்காடு வாக்காளர்கள் இருந்தால்தான் இவர்களைத் தாண்டி மூன்றாவது அணியினுடைய பக்கம் மக்கள் தங்கள்



கவனத்தைத் திருப்புவார்கள் என்பதால் அதற்கான முயற்சியில் இறங்கினேன். அந்தச் சமயத்தில் இரண்டு திராவிடக் கட்சிகளையும் விட்டுவிலகி இருந்த

**- சிவதாணு -**

தே.மு.தி.க, பா.ம.க, ம.தி.மு.க. கட்சிகளை ஒருங்கிணைக்க முயற்சி செய்தேன். என் கணிப்பு தவறவில்லை. 19 சதவீத வாக்குகள் அந்த அணிக்குக் கிடைத்தது. அந்தக் கூட்டணிகள் அப்படியே சட்டப்பேரவை தேர்தலை நோக்கி வந்திருந்தால் இப்போது நிச்சயம் ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கும். ஒரு கூட்டணி அரசு உருவாக வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். ஆனால், அந்தக் கூட்டணி தேர்தல் முடிந்தவுடன் முடிந்தது.

கூட்டணிக்காக தலைவர்களை நெருங்கிப் பேசிப் பார்த்த போதுதான் ஒவ்வொருவருடைய மன இயல்பையும் புரிந்துகொள்ள முடிந்தது. மக்கள் நலனைவிடச் சுயநலம் தான் அவர்களிடம் ஓங்கியிருந்தது. இந்த ஞானம் எனக்குள் கனிந்த நிலையில்தான் இனி எந்தக் காலத்திலும் அதுபோன்ற முயற்சிகளில் ஈடுபடக்கூடாது என்று முடிவெடுத்து ஒதுங்கிக்கொண்டேன்.

ஆரம்பத்தில் மக்கள் நலக் கூட்டணியை ஆதரித்த நீங்கள் தற்போது ஏன் எதிர்க்கிறீர்கள்?

தி.மு.க, அ.தி.மு.க, காங்கிரஸ், பா.ஜ.கவுக்கு மாற்றாக ஒரு நல்லக் கூட்டணியை உருவாக்க வேண்டும் என்று தோழர் ஜி.ராமகிருஷ்ணன் என்னிடம் பேசினார். ஆனால், ஏற்கெனவே எனக்கு ஏற்பட்ட கசந்த அனுபவங்களினால் நான் யார் வீட்டு வாசலுக்கும் போகத் தயாராக இல்லை. எனவே, நீங்களே ஒரு மாற்று அணிக்கான முயற்சிகளை எடுங்கள். அதற்கு என் ஒத்துழைப்பு முழுமையாக உண்டென்று சொன்னேன். அதன்பின்னர் வி.சி.க, சி.பி.ஐ, சி.பி.எம், மதிமுக ஒன்றிணைந்தார்கள். காந்திய மக்கள் இயக்கத்தையும் சேர்த்து 5 கட்சிகளின் கூட்டியக்கமாக தேர்தலில் போட்டியிடுவோம் என்றார்கள். அவர்கள் தேர்தல் வரைக்கும் இதே உறுதியுடன் இருப்பார்களா என்ற சந்தேகம் எனக்கு இருந்தது. எனவே, அப்பொழுதே "வரும் சட்டமன்றத் தேர்தலில் இரு திராவிடக் கட்சிகளையும் இரு தேசியக் கட்சிகளையும் புறக் கணிப்போம் என்று பத்திரிகையாளர்களைக் கூட்டி பகிரங்கமாக அறிவியுங்கள்" என்றேன். அதில் கருத்து வேறுபாடுகள் எழுந்தன. என்னை விட்டுவிடுங்கள் என்று நான் வெளியேறிவிட்டேன். அவர்களின் வாய் பேசுவது மட்டும்தான் மக்கள் நலம் மனது முழுக்க சுயநலம்தான்.

நீங்கள் எதிர்த்து களம்காணும் திமுக, அதிமுக, காங்கிரஸ், பாஜக கட்சிகளிடம் பிடித்த விஷயங்கள்?

இந்தியா விடுதலைப்பெறத் தியாக உணர்வோடு போராடிய கட்சி, காங்கிரஸ். அந்தத் தியாக உணர்வு காமராஜர், கக்கனோடு முடிந்துவிட்டது. தற்போது அது அங்கே யாரிடமும் இல்லை.

திமுகவில் கலைஞருடைய சோர்வறியாத உழைப்பு பிடிக்கும். 90 வயதில் இந்த உழைப்பு, வேறு எந்தக் கட்சியிலும் எந்தத் தலைவரிடமும் காணமுடியாது. விஜயகாந்துக்குச் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் என்று பெயரே தவிர உண்மையான எதிர்க்கட்சியாக ஒவ்வொரு நாளும் இயங்கியவர் கலைஞர்தான்.

அதிமுகவில் ஜெயலலிதாவின் ஆளுமையும் துணிச்சலும் பிடிக்கும். ஈராயிரம் ஆண்டு ஆணாதிக்க சமூகத்தில் ஒரு பெண்ணாக தானாகவே உயர்ந்து நின்றுள்ளார். எம்.ஜி.ஆரால் ஜெயலலிதா உயர்ந்தார் என்கிறார்கள் நான் அப்படி நினைக்கவில்லை. ஜெயலலிதாவிற்கும் எம்.ஜி.ஆருக்கும் கருத்து வேறுபாடு வந்தபோது ஜெயலலிதாவை உதறித் தள்ளிவிட்டு லதாவைத்தான் உயர்த்திப் பிடித்தார், எம்.ஜி.ஆர். லதாவோ ஒரு சரோஜா தேவியோ அதிமுகவை நிச்சயம் இந்த உயரத்திற்கு கொண்டு வந்திருக்க மாட்டார்கள். முழுக்க முழுக்க ஜெயலலிதா என்ற பெண்மணியின் தனிப்பட்ட ஆளுமை தான் எம்ஜிஆருக்குப் பிறகான அதிமுக வளர்ச்சிக்குக் காரணம். பாஜகவில் தமிழகத்தில் சொல்லிக் கொள்வதுபோல் ஒருவரும் இல்லை. தமிழிசை சவுந்திர ராஜன் ஊடகங்களில் காட்சி தரவேண்டும் என்பதற்காகவே ஓயாமல் பேசிக் கொண்டிருக்கிறார். பேசாமல் இருப்பது தவறு, அதிகமாகப் பேசுவது பெருந்தவறு.

ஜெயலலிதா சார்ந்து உங்களிடம் ஒரு மென்மையான போக்கு இருப்பதாகத் தெரிகிறது. ஈழத் தமிழர் பிரச்சனையில்கூட திமுகவையே தொடர்ந்து விமர்சனம் செய்கிறீர்கள்?


ஜெயலலிதா மீது எனக்கு எந்தவொரு மென்மையான போக்கும் கிடையாது. ஜெயலலிதா, கலைஞர் இருவரையும் தராசில் ஒன்றாகத்தான் நிறுத்திப் பார்க்கிறேன். ஆனால், கலைஞர் தமிழினம் அழிந்தபோது வேடிக்கை பார்த்த குற்றவாளி. ஈழப்போர் நடந்தபோது, "சர்வகட்சி தலைவர்களை அழைத்துச்சென்று காங்கிரசிடம் பேச்சு வார்த்தை நடத்தி, போரை தடுக்கப் பாருங்கள்" என்று எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தேன். அவர், "அப்படிப் செய்வதால் நல்லக்காரியம் ஒன்றும் நடக்காது" என்று கூறினார். அன்றைக்கு அவருக்கு இருந்த செல்வாக்கை பயன்படுத்தி ஓரளவிற்காவது தாக்குதலை நிறுத்தியிருக்க முடியும். அந்தத் துரோகம் காரணமாகத்தான் எங்களது உறவு முறிந்தது.

ஆனால், அதிமுக மீதும் ஈழ மக்கள் விஷயத்தில் நாடகமாடுகிறார்கள் என்ற விமர்சனம் உள்ளதே, உதாரணமாக ஏழு பேர் விடுதலை. இன்று வரைக்கும் அவர்கள் உள்ளேதானே இருக்கிறார்கள்?

ஆளுநர் ஒருமுறை நிராகரித்துவிட்டால் மீண்டும் ஆளுநருக்குப் பரிந்துரை செய்யலாம் என்று அரசியல் அமைப்புச் சட்டம் கூறுகிறது. ஜெயலலிதா நினைத்திருந்தால் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 161ஆவது விதியைப் பயன்படுத்தி ஆளுநர் மூலம் 7 பேரையும் விடுவித்திருக்க முடியும். ஆனால், உண்மையில் விடுதலை செய்வதற்கு ஜெயலலிதாவிற்கும் மனமில்லை, கலைஞருக்கும் மனமில்லை. இவர்கள் இருவருக்கும் உண்மையான ஆர்வமும் ஈடுபாடும் இருந்திருந்தால் ஏழு பேரையும் எப்பொழுதோ விடுதலை செய்திருக்கலாம்.

தேர்தலில் யார் வெற்றி பெறுவார்கள் எனக் கருதுகிறீர்கள்?

பலமுனைப் போட்டி காரணமாக அதிமுகவிற்கு எதிரான வாக்குகள் வெவ்வேறு கூட்டணிக்குப் போகும் என்பதால் மீண்டும் அதிமுகதான் ஆட்சிக்கு வரும்!

**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

**யோகா சோதிடம்**

• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்

• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# விற்பனை மற்றும் சந்தைப்படுத்தும் முகாமையாளர்கள் தேவை

UWINPRO TRAINING & CONSULTING / CANADIAN COLLEGE FOR HIGHER STUDIES

ஆற்றல் மிக்க எமது குழுவுடன் சேர்ந்து நீங்களும் முன்னேறுங்கள்!

**At Canadian College for Higher Studies** our educational philosophy is to work harder to put our students' interests at the forefront of everything we do. We provide dedicated and professional instruction to help our students achieve their educational goals. Our programs are focused on qualifying our graduates for six figure careers. In fact, our student have earned more than $ 200,000 per year within a couple of years from the start date. Most of our well performing students were beginners.

Our faculty brings up to three decades of knowledge & experience to the classroom with the promise of staying committed to student's success through excellence in teaching and learning.

At **UWIN** Pro we focus in providing corporate consulting and training services. We have provided such services to Federal Government of Canada - CBSA, National Defense, PWGSC, HP USA, Patheon, Enbridge, SAP, Dr. Oetker etc. Some of our best students from Canadian College for Higher Studies have taken part in some of these projects.

**Canadian College for Higher Studies & UWIN Pro Inc.** are currently hiring Salespersons to help strategically promote our programs and courses to targeted clientele including local communities.

**The ideal candidates should**,

- identify training opportunities and conduct research on upcoming trends in the training local, international & corporate markets.
- promote corporate training offered by UWIN Pro Inc. to corporations if required.
- sell programs to communities by establishing contact and developing relationships with prospects.
- be friendly with community members and leaders by providing support, information, and guidance.
- Identify training improvements or new programs & courses by remaining current on industry trends, market activities, and competitors.
- prepare reports by collecting, analyzing, and summarizing information.
- feel that the customers are the top priority. So will assist in maintaining quality service by establishing and enforcing organizational standards.

**Skills/Qualifications:**

Presentation Skills, Client Relationships, Emphasizing Excellence, Energy Level, Negotiation, Prospecting Skills, Meeting Sales Goals, Creativity, Sales Planning, Independence, Motivation for Sales, Excellent Communication Skills. Applicants should have a minimum of 2 years experience in Marketing and Sales in education in Canada.

**A basic salary with generous bonus or profit sharing will be provided to suitable full time candidates.**

**Medical/dental benefits available after probation.**

**We also welcome applicants willing to work part time.**

மேல் குறிப்பிட்ட திறமைகளும் தகைமைகளும் உங்களுக்கு இருந்தால் உங்களைப் பற்றிய விபரங்களை எங்கள் மின்னஞ்சல் **info@thecanadiancollege.ca** இற்கு அனுப்பிவையுங்கள்

**www.thecanadiancollege.com**

# பெண்களும் சில இதயப் பிரச்சினைகளும்

## Heart Death

எல்லோருக்கும் ஒரே மாதிரியான இதயம் இருக்கும்போது பெண்களுக்கு மட்டுமே தனித்துவமான இதயமொன்று உள்ளதா என்று அனைவரும் கேட்க கூடும். பால் வேறுபாடு என்று ஒன்று இருக்கும் வரையில் எல்லாமே வித்தியாசமாகத்தான் இருக்கும். குழந்தையொன்று பிறந்தவுடன் அதன் பிஞ்சுக்கால்கள், மென்மையான கைகள், அவர்களது அழுகைக் குரல்கள், சிரிப்புகள் எல்லாமே ஒரே மாதிரித்தான் இருக்கும். ஆனால் வளர வளர எல்லாமே மாறிப்போய் விடுகின்றன. ஆண் பிள்ளைகளின் குரல்களுக்கும், பெண் பிள்ளைகளின் குரல்களுக்கும் முற்றான வேறுபாடுகள் ஏற்பட ஆரம்பிக்கும். உடல் அமைப்பு, உயர வேறுபாடுகள், விளையாட்டுக்கள் எல்லாமே மாற ஆரம்பிக்கின்றன. பருவமடையும் பெண்கள் முற்றாகவே மாற்றமடைந்து படிப்படியாக இளம் பெண்ணாகி விடுகின்றனர். ஆண்களின் திடகாத்திரம், விளையாட்டுக் கள், குணாதியசங்கள் எல்லாமே மாறி விடுகின்றன. இந்த நிலையில் திருமண வாழ்வில் அடியெடுத்து வைக்கும் பெண்களில் சிலருக்கு ஏற்படுகின்ற தாங்கொணாத துயரங்களும், சுக்கு நூறாகும் இதய உணர்வுகளும் அவர்களின் வாழ்வினை முற்றாக மாற்றி விடுவதாக பல ஆய்வுகள் இடம் பெற்றுள்ளன.

ஆண்கள் சந்திக்காத சில விசேடமான பிரச்சினை பெண்களுக்கு மட்டுமே உள்ளது. பூப்படைதல் முதல் குழந்தை பெறுவதற்கிடையில் அவர்களது ஹோர்மோன் சுரப்பிகள் மிகவும் வேகமாக செயல்படுகின்றன. எந்த ஒரு வைத்திய நிலையத்திலும் கர்ப்பமடைந்துள்ளவர்கள் பற்றிய விசேட குறிப்பொன்று காணப்படும். காரணம் கர்ப்பமுறுபவர்களுடைய உறுப்புக்கள் பல வித்தியாசமான முறையில் செயல்படுவதினாலேயாகும். பெண்களது தாய்மை அச்சம், அதீத உணர்வு வேறுபாடுகள், விரைவாக ஏற்படும் கோப உணர்வுகள், வேறுவேறான கற்பனை உணர்வுகள், குடும்ப பொறுப்புகள், துணைவரது நெருக்குதல்கள் என்பவற்றால் மன அழுத்தம், உளச்சோர்வு என்பன அவர்களை வந்து சேர்ந்து விடலாம். குறிப்பாக புலம்பெயர்ந்து வந்துள்ள பெண்களின் பல்வேறு நெருக்கடிகளும் பிரச்சினைகளும் அவர்களை விரைவான இதய நோயாளிகளாக மாறிவிட செய்கின்றன. எந்த பெண்களைப் பார்த்தாலும் மகிழ்ச்சியாக இருப்பதுபோல காட்டிக் கொள்வார்கள். ஆனால் சற்று அவர்களுடன் பேச்சு கொடுத்தால் மட்டுமே அவர்களது உடல் நோய்ப் பிரச்சினைகள் தெரிய வரும். தாயகத்தில் காணப்படாத பெண்களது இதய கோளாறுகள் இங்கு வருவதற்கு பல காரணிகள் உள. உணவு வகைகள், காலநிலை வேறுபாடு, பொருளாதார நலிவு, வேலைக்கு செல்லல், இருப்பிட வசதிக்குறைவு, குழந்தை வளர்ப்பு போன்ற பல சம்பவங்கள் அவர்களது இதயத்தினையே முதலில் பாதிக்கின்றன.



கவிதைகளில் பெண்களின் பல்வேறு அழகுகள் பற்றி எழுதவே முடியும். ஆனால் அண்மைய மருத்துவ ஆய்வுகள் யாவும், பெண்கள் மிகுதியான துயரத்திற்கு ஆளாகின்றனர் எனவும், அவர்களது இதயமானது பல வகையான சிக்கல்களுக்கு ஆளாக வாய்ப்புகள் உள்ளன எனவும் தெரிகின்றன. ஆண்கள் மாரடைப்புக்கு அதிகம் உள்ளாகும் நிலையில் பெண்களின் இதயம் வேறுபாடான அதிர்ச்சிக்கு மட்டுமே உரியதாகி தொடர்ந்து அவர்களை நீண்ட காலத்திற்கு வருத்தி விடுகின்றது. இவர்கள் இதய நோயாளிகளாகவே வாழ நேரிடும்.

பெண்களுக்கு ஏற்படும் இதயப் பிரச்சினை பற்றி உலகிற்கு முதன்முதலில் அறிவித்தவர்கள் ஜப்பான் நாட்டு மருத்துவ ஆராய்ச்சியாளர்களேயாவர். பெண்களின் திடீர் உளவியல் பாதிப்பு என்பது ஏனைய உறுப்புக்களை விட இதயத்தினை பாதிப்பதே அதிகம் என்பதே இவர்களது கருத்தாகும். எதிர்பாராதவிதமாக பெண்களுக்கு ஏற்படும் தாங்க இயலாத துயர நிகழ்வுகளை போல் அவர்களது இதயத்தில் ஏற்படும் பல வகையான மாற்றங்களையும் இவர்கள் மருத்துவ ரீதியாக தொகுத்து அவர்களுடைய மொழியில் ரக்கோ சுபோ (TAKO TSUBO) என தொகுத்துள்ளனர். இந்த நிலையில் பெண்கள் திடீரென துயர நிகழ்வுகளுக்கு உள்ளாகும் போது இதயம் அடையும் மாற்றங்களை துல்லியமாக எக்ஸ் கதிர்களைப் பயன்படுத்தி ஆய்வு நிகழ்த்திய போது பெண்களின் இடது பக்கத்தில் உள்ள 'வென்டிரிக்கிள்' (Ventricle) என்ற ஆற்றல் வாய்ந்த கீழ் அறைதான் மிகவும் பாதிக்கப்படுவதினை கண்டறிந்துள்ளனர். கடுமையான மன உளைச்சலால் அவர்கள் பாதிக்கப்படும்போது இக்கீழறை உருவத்தினையே சற்று மாற்றிக் கொள்வதாகவும் கூறுகின்றனர்.

2005 ஆம் ஆண்டு அமெரிக்காவில் மினியாப்போலிஸ் ஆய்வுமையமும், போல்ரிமோரில் உள்ள ஜோன் ஹோப்கின்ஸ் மருத்துவ பல்கலைக் கழகமும் தனித்தனியாக ஆய்வுகளை மேற்கொண்டன. அவர்களின் ஆய்வின்படி, 45 வயதிற்கும் 50 வயதிற்கும் இடைப்பட்ட பின் பருவமாற்ற காலத்தில், மாதவிடாய் நிற்கும் (Menopause) காலத்தில் இதயத்தில் ஏற்படும் மாற்றங்களை குறிப்பிட்டுள்ளனர். பெண்களின் முதுமையில் பின் பருவ மாற்றத்தை அடையும் பொழுது உடலில் சுரக்கும் 'ஈஸ்ட்ரோஜன்' என்னும் ஹோர்மோனின் சுரப்பு நின்று விடுகிறது என்கிறார்கள். பூப்பு அடைந்த காலம் முதல் பின்பருவ மாற்றம் அடையும்வரை இந்த ஈஸ்ட்ரோஜன் என்ற ஹோர்மோன் பெண்களின் இதயத்திற்கு இயற்கையான பாதுகாப்பினை தருகிறது. அத்துடன் எதிர்பாரா மன அழுத்தம் ஏற்படும்போது சிறுநேரக மேல் சுரப்பியானது அதிக அளவில் சுரக்கும் 'அட்ரினவின்' என்ற ஹோர்மோனானது தற்காலிகமாக சிதைந்து விடுகிறதெனவும் தங்கள் முடிவுகளை கூறியுள்ளனர்.

உலக அளவில் விரிவான முறையில் நடந்த ஆய்வொன்றில் பெண்களிடம் சுரக்கும் ஹோர்மோனான ஈஸ்ட்ரோஜனுக்கும், இதயத்தில் ஏற்படும் தீய விளைவுகளுக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்பதாகும். ஈஸ்ட்ரோஜன் மிகவும் உச்சக் கட்டத்தில் இருந்தாலும் மிக கடுமையான பிரச்சினையை எதிர் கொள்ளும்போது மட்டுமே இதய பாதிப்பு ஏற்படுவதாக கருதுகின்றனர். இதேவேளையில் 2010 ஆம் ஆண்டு ஜேர்மனியில் நிகழ்த்திய ஆய்வுப்படி துயரத்தின் காரணமாக சிறுவர்கள் கூட இதய பாதிப்புக்கு உள்ளாகின்றனர் எனக் கூறுகின்றனர்.

பெண்களது அன்றாட வாழ்க்கையில் பலவகையான தாங்கஇயலாத கடுமையான மன உளைச்சல், துயரம், எதிர்பாராத வகையில் ஏற்படும் மரண இழப்புக்கள் காரணமாக திடீரென சுரக்கும் ஹோர்மோன்கள் உடல் உறுப்புக்களை மட்டுமன்றி இதயத்தையும் பாதிக்கின்றது. இவ்வாறான உளவியல் சார்ந்த நிலையை இதய மருத்துவர்கள் 'உடைந்த இதயத்தின் அறிகுறிகள்' (Broken Heart Syndrome) என கூறுகின்றனர். இத்தகைய நிலையின்போது இதயமானது தன்னுடைய இயற்கை வடிவத்தை இழந்து இரண்டு பக்கமேலுறைகளும், ஊதிய பலூன் போன்ற அறிகுறி (Apical Ballooning Syndrome) நிலையை பெறுகிறது. இதுவே பெண்களுக்கு ஏற்படும் விசேடமான பிரச்சினையாகும்.

தோமஸ் லீ என்ற மருத்துவர் ஒரு பெண் எதிர்பாராதவிதமாக தாங்க இயலாத துயரத்திற்கு திடீரென உள்ளாவதால் உறக்கம் கொள்ள இயலாத காரணத்தாலும், இதன் விளைவாக ஏற்படும் இரத்த அழுத்தத்தாலும் அதேவேளை 'அட்ரிலனின்' என்ற ஹோர்மோனின் சுரப்பு ஏற்படுவதாலும் இதய தமனிகள் தற்காலிகமாக தனது விட்டத்தினை குறுகச் செய்வதாலும் இதயத்தின் திறன் முடக்கப்படுகின்றது என்கிறார்.

அண்மையில் 'Circulation' என்ற மருத்துவ இதழில் ஆய்வுக் கட்டுரை ஒன்று, கணவன் இறந்த முதல் நாளன்று மனைவியின் இதயமானது, சாதாரண நிலையை விட 21

**தொடர்ச்சி 34ஆம் பக்கம்...**



# வைத்தியமுறையில் நாளாந்த தாவர உணவுகள்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

கடந்த இதழ் தொடர்ச்சி....

## மணல் தக்காளி கீரை

இதனை உலகமாதா, விடைகந்தம், வாயசம் என வேறு பெயர்களால் அழைப்பதுண்டு. இது ஒரு பருவச் செடியாகும். நிமிர்ந்து வளரும். இதில் தனிச் செடிகள் மிக வேறுபட்டுத் தோன்றுவதுண்டு. இதன் இலைகள் அகலமான கோலங்களில் விரிந்த வளரும். இலைகள் அதிகம் காணப்படும். இலையின் அலகு மெல்லியது. அடிப்பாகத்தில் அண்ட வடிவங்களாகவும், நுனிப்பாகத்தில் ஈட்டி வடிவமாகவும் ஓரளவு நீண்டு இருக்கும்.

இதன் பூக்கள் சிறியது. வெள்ளையாக இருக்கம். கனி உருண்டை வடிவான சதையுள்ள கனியா இருக்கும். மிளகு அளவு கொண்டது. எனவே இதனை மிளகு தக்காளி எனவும் அழைப்பதுண்டு. பழம் கருநீல மணி போல அழகாக இருக்கும். சில இன வகைகளில் சிவப்பாகவும், மஞ்சளாகவும் இருக்கும். இதன் பழம் மணி போல காட்சியளிப்பதினால் மணத்தக்காளி என்ற பெயர் உருவாகியுள்ளது.

காகத்தின் கருங்கண் போல காணப்படுவதினால் காக்கா, காகாஞ்சி, காகமாசி என்கிற பெயர்களும் உண்டு. இதனால் தீரும் வியாதி ஒருவருக்கு வாய்வேக்காடாக இருந்தால் பச்சை இலையை வாயில் இட்டு மென்று கொண்டிருத்தல் வேண்டும். இப்படி சில நாட்கள் செய்து வர குணம் கிடைக்கும். மணத்தக்காளியில் கறுப்பு, சிவப்பு என இரு இனம் காணப்பட்டாலும் குணத்தில் வேறுபாடுகளில்லை. இதன் இலையும் காயும் பாவனைக்குரியதாகும்.

இக்கீரை இனிப்புச் சுவையை உடையது. உடலை தேற்ற வல்லது. மேலும் சிறுநீர் பெருக்கி, வியர்வையகற்றி, சளியகற்றியாக வேலை செய்யக் கூடியது. அத்துடன்



இக்கீரையைப் பாவித்து வந்தால் நாவில் ஏற்படும் புண், வெப்பு அகன்றுவிடும். இதன் வற்றலைப் பாவித்து வந்தால் நற்பயன் உண்டு.

மணத்தக்காளி இலைச்சாற்றை ஒரு நாளைக்கு மூன்று வேளை 1 தேக்கரண்டி வீதம் பாவித்து வந்தால் சிறுநீர் பெருக்கியாகவும் பாண்டு, மகோதரம், உள்விரணம் (புண்), உடல்சூடு ஆகியவை தீரும். இதன் காயை உலர்த்தி வற்றல் செய்து நெயில் வறுத்து பாவித்து வந்தால் பித்த சம்பந்தமான வியாதி தீரும். மணத்தக்காளி வற்றலை கொதி தண்ணீரில் இட்டு 3/4 மணி நேரம் சென்றபின் வடிகட்டிக் கொடுக்க மூத்திரக் கடுப்பு எரிவு நீங்கும்.


**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.456.9796




பணம் என்ற காகிதத்தை பெற...
சிலர் அன்பை இழக்கின்றனர்.
சிலர் பண்பை இழக்கின்றனர்...
சிலர் நட்புகளை இழக்கின்றனர்.
சிலர் உறவுகளை இழக்கின்றனர்...
சிலர் கற்பை இழக்கின்றனர்...
சிலர் கண்ணியத்தை இழக்கின்றனர்.
சிலர் மார்க்கத்தை இழக்கின்றனர்.
சிலர் மனித நேயத்தை இழக்கின்றனர்..
சிலர் வாலிபத்தை இழக்கின்றனர்.
சிலர் வாழ்க்கையையே இழக்கின்றனர்


NO MEDICAL INSURANCE

No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.

• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.
• விசா இல்லாதவர்களும் சுப்பர் விசாவில் உள்ளவர்களும் 78 வயதுவரை பெறலாம்

KABIS
KABIS & ASSOCIATES INC.

உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.
Does your current life insurance policy need a tune up please call me.



Nimal Subramaniam
Cell: 416.816.7994 Email:neel900@hotmail.com

La Capitale Financial Group
INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life

•Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA

# அதி உச்ச சம்பளம் பெறும் முதல் பத்து ஒன்ராரியோ மாகாணவாசிகள்

## கனடிய தகவல் தொடர் 247

### The Top 10 Earners

ஒன்ராறியோ மாகாணத்தில் வரி யிறுப்பாளரின் பணத்தில் இருந்து அதி உச்ச வருட சம்பளம் பெறும் ஊழியர்கள், அவர்களின் பதவி, தொழில் செய்யும் நிறுவனம், பெறும் வருட சம்பளத்தின் தொகை யாவற்றினையும் இவ்வருடம் எவ்வளவு தொகையென குறிப்பிட்டு ஒன்ராறியோ அரசு வெளியிட்டிருந்தது.

இவர்களின் விபரங்களை ***The Top 10 Earners - Sunshine list*** எனக்குறிப்பிட்டு அவர்களின் படங்களுடன் மார்ச் 25, 2016இல் 'ரொறொன்ரோ ஸ்ரார்' பத்திரிகை கட்டுரை ஒன்றினை வெளியிட்டு அவர்களை பகிரங்கமாக கௌரவித்திருந்தது.

இதேபோல் ஏனைய ஆங்கில ஊடகங்கள், இணையதளங்களிலும் இவை வெளியாகி யிருந்தன. மாகாணத்தில் அதி உச்ச அதிகாரங்கள், சக்தி, வலிமை என்பவற்றினை தன்னகத்தே கொண்டு பதவி வகிக்கும் மாகாண முதல்வர் Ms. கத்லீன் வின் (Premier Ms. Kathleen Wynne) இருந்தபோதிலும் அவரது வருட சம்பளம் $208,974 + சலுகைகள் என இருப்பதால் முதல் பத்து வரிசைக்குள் வர வில்லை என்பதனையும் அதே கட்டுரை யில் குறிப்பிடப்பட்டிருந்தது. இப்பத்துப் பேரும் வரிசைக்கிரமத்தில் பின்வருமாறு.

1. Mr. Tom Mitchell, Chief Executive, Ontario Power Generation
வருட சம்பளம் = $1,528,933.36 + $66,377.26 பெறுமதியான சலுகைகள். இவரே ஒன்ராறியோ மாகாணத்தில் அதி உச்ச சம்பளம் பெறும் முதன்மையானவர் ஆவார். ஒன்ராறியோ மாகாணம் முழுவதும் சுமார் 50% வீதமான மின்சாரத்தினை வழங்கும் மின்சாரக் கூட்டுஸ்தாபனம் ஒன்றின் தலைமை இயக்குனர் ஆவார். இன்னும் சில வருடங்களில் ஓய்வு பெறப் போகின்றார்.

2. Mr. Willaim Moriarty, Chief Executive Officer & President, University of Toronto Asset Management Corp.
வருட சம்பளம் = 1,473,445.98 + சலுகைகள். பொருளாதாரத்தில் எம். ஏ. பட்டம் பெற்ற இவர், றோயல் வங்கியின் முதலீட்டுத் துறையில் பணிபுரிந்தவர். ரொறொன்ரோ பல்கலைக்கழக பல பில்லியன் டொலர்கள் பெறுமதியான சொத்துக்களை முகாமைத்துவம் செய்யும் கூட்டுஸ்தாபனத்தின் தலைவர் ஆகவும் அதி உச்ச நிறைவேற்று அதிகாரம் கொண்ட நிர்வாகியாகவும் உள்ள ஒரு பொருளியல் நிபுணர் ஆவார்.

3. Ms. Barbara Gail Anderson, Senior vice president & chief financial officer, Panam / parapan American games
வருட சம்பளம் = $844,745.92 + 18,115.26 பெறுமதியான சலுகைகள். வட அமெரிக்க, தென் அமெரிக்க மத்திய அமெரிக்க நாடுகளிடையே ஒலிம்பிக் விளையாட்டு போட்டிகள் உட்பட பல்வேறு வகையான விளையாட்டு பயிற்சிகள், போட்டிகளை நடத்தும் மிகப் பெரிய விளையாட்டு கழகத்தின் உயர் உப தலைவர் மற்றும் தலைமை நிதியியல் அதகாரியாக பணிபுரிந்து வருபவர்.

4. Mr. Allen.K.Vansen, Vice President Operations, Sports & Venue Management Panam / Parapan American Games
வருட சம்பளம் = $802,079.83 + 15,096.06 பெறுமதியான சலுகைகள். மேலே குறிப்பிடப்பட்ட மாதிரி வட, தென், மத்திய அமெரிக்க நாடுகளை ஒன்றிணைந்த விளையாட்டுக் கழகத்தில் செயல்பாட்டு துறை மற்றும் தள நிலை முகாமைத்துவ துறைகளில் உப தலைவராகவும் பணி புரிபவர் ஆவார்.

5. Mr. Glenn Jager, Nuclear President and Chief Nuclear Officer of Ontario Power Generation
வருட சம்பளம் = $793.359.07 + $4536.00 பெறுமதியான சலுகைகள். ஒன்ராறியோ மின்சக்தி கூட்டுஸ்தாபனத்தில் அணுவிஞ்ஞானதுறை தலைவர், அணுவிஞ்ஞான துறையில் தலைமை உத்தியோகத்தராகவும் பணி புரியும் ஒரு விஞ்ஞானி ஆவார்.

6. Ms. Karen Hacker, Senior vice - President, Human Resources & Volunteers. Panam / Parapan American Games
வருட சம்பளம் = $789,880.64 + $15,096.06 பெறுமதியான சலுகைகள். வட, தென், மத்திய அமெரிக்க நாடுகளை ஒன்றிணைந்த விளையாட்டு கழகத்தில் மனித வள மற்றும் தொண்டர்கள் பிரிவின் உயர் உதவி தலைவராக பணி புரியும் ஒரு சட்டத்தரணி ஆவார்.

7. Ms. Jeffrey Lyash, President & CEO, Ontario Power Generation
வருட சம்பளம் = $787,472.14 + பெறுமதியான சலுகைகள்
ஒன்ராறியோ மின்சக்தி நிறுவனத்தின் தலைவராகவும், தலைமை நிர்வாகியாகவும் கடந்த ஓகஸ்ட், 2015 யிலிருந்து பணி புரிபவர்.

8. Ms. Katherine Handerson, Vice President, Marketing & Revenue, Panam / Parapan North American Games
வருட சம்பளம் = $762,996.71 + $13,586.46 பெறுமதியான சலுகைகள்
வட, தென், மத்திய அமெரிக்க நாடுகளை ஒன்றிணைந்த இவ்விளையாட்டு கழகத்தில் வர்த்தக ரீதியான விளம்பரங்கள், ரிக்கற் விற்பனைகள், வர்த்தக ரீதியான லைசென்ஸ் பெறுவது பல மில்லியன் டொலர் பெறுமதியான சர்வதேச வர்த்த நிறுவனங்களின் தொடர்பாளர் மற்றும் வருமான பிரிவு போன்றவற்றின் உபதலை-வராக பதவி வகிப்பவர்.

9. Mr. Joseph Mapa, President & Chief Executive Officer, Sinai Health System
வருடசம்பளம் = $760,152.83 + பெறுமதியான சலுகைகள்.
ரொறொன்ரோ மவுன்ற் சினாய் வைத்திய சாலையின் தலைவராகவும், தலைமை நிர்வாகியாவும் பணி புரிபவர் ஆவார்.


10. Ms. Jill Pepall, Executive Vice President & Chief Investment Officer, Onatario Pension Board
வருட சம்பளம் = $740,378.24 + பெறுமதியான சலுகைகள். ஒன்ராறியோ ஓய்வூதிய சபையில் உதவித் தலைவராக வும், தலைமை முதலீட்டு உத்தியோகத்த ராகவும் பணி புரிபவர்.

மேற்குறிப்பிட்ட முதல் பத்து அதி உச்ச சம்பளம் பெறுவோர் தவிர பின்வரும் தொழில் துறையில் உள்ளோர் வருட சம்பளங்கள் பின்வருமாறு

• ரொறொன்ரோ நகரபிதா Mr. John Tory.
வருட சம்பளம் = $181,954.15 + சலுகைகள்.


• ரொறொன்ரோ தலைமை பொலீஸ் அதிகாரி - Mr. Mark Salinders, Toronto Police Cheif, Mr. Mark Saunders, Toronto Police Chief
வருட சம்பளம் = $286,265.74 + சலுகைகள்.

• ஒன்ராறியோ மாகாண கணக்காளர் நாயகம் Ms. Bonnie Lysyk, வருட சம்பளம் = $259,343.90 + சலுகைகள்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC
mhc
• கழுத்து, முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்
போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்

Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.
WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:
• STRESS • SKIN PROBLEM • RESPIRATORY PROBLEMS • DIGESTIVE PROBLEMS • VARICOSE VEINS • BACK PROBLEM /NECK PROBLEM • TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP • ALLERGIES • SEXUAL PROBLEMS • SEXUAL PROBLEMS • CHOLESTEROL • TUMOR • FOOT PROBLEM
HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING
Cough, Flu, Depression, Anxiety, Asthma
Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea
Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer
Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis
Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER
TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# BRAND NEW TOWN HOME IN KENNEDY & ELLESMERE

Kennedy Gardens
URBAN TOWNS





**CALL FOR VIP PRICING**



* 1 To 4 Bedroom

**Close to**
* HWY 401
* Scarborough Town Center
* Grocery Store
* Centennial College
* UofT Scarborough






RE/MAX
Dynasty Realty Inc.
Real Estate Brokerage

**A. Anton Jeeva, FRI**
**(Broker)**
**Remax Dynasty Realty Inc., Brokerage***
**Dir: 415.575.5055**
Office: (905)471-0002 Fax: (905)471-7441
Email: anton.jeeva@gmail.com
Web: www.antonjeeva.com
8 Shadlock St, Unit 7, Markham, ON L3S 3K9

# செரிமான கோளாறுகளுக்கு தீர்வுகள்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

## Digestive Problem

நமது இன்றைய பதற்றமான வாழ்க்கை முறையினாலும், அதிக வேலைப்பளு காரணமாக நேரம் தவறி உண்பதும், கண்டதையும் கண்ட நேரத்தில் சாப்பிடுவதாலும், குறிப்பாக அதிக காரம் மற்றும் அதிக கொழுப்பு, மசாலா பொருட்கள் கலந்த உணவை உட்கொள்வதாலும், நினைத்த நேரத்தில் குளிர்பானங்கள் காப்பி மற்றும் மதுபானம், புகை பழக்கம் போன்றவற்றாலும், மனஅமைதி யின்றி கோபம், கவலை அடைவதாலும், மருத்துவரின் ஆலோசனையின்றி மருந்துகளை எடுத்துக் கொள்வதா லும் செரிமான கோளாறுகள் மனிதர்களை மிக எளிதில் பாதிக்கின்றது.



நாம் உண்ணும் உணவு மூன்றில் இருந்து நான்கு மணி நேரத்திற்குள் செரிமானம் ஆகி விடும். பின்னர் உணவின் சாரம் குடலில் இருந்து உறிஞ்சப்பட்டு நமக்குத் தேவையான சக்தியைக் கொடுக்கிறது. ஆனால் வயிற்றுப் பகுதியில் ஏற்படும் பிரச்சினைகளால் உணவு செரிமான மாவது தாமதமாகின்றது. இதனால் செரிமானத்திற்காக சுரந்த அமிலம் மற்றும் நொதிகளின் செயலால் வாயுவானது இடம் பெயர்ந்து வலியை ஏற்படுத்துகிறது.

நேரம் தவறாமல் உடலின் தன்மைக்கு ஏற்ப பொருத்தமான உணவுகளை அளவோடு உண்பவர் களுக்கு செரிமானக் கோளாறோ குடல் சம்பந்தமான நோய்களோ வருவதில்லை. அதை விடுத்து நினைத்த நேரத்தில் கிடைத்த உணவை வயிறு முட்ட சாப்பிடும் போது மலச்சிக்கல் என்னும் பெரும் உபாதை உண்டாகின்றது. இதனால் இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல் சம்பந்தமான நோய்கள் உருவாகின்றன. குடலில் எதற்காக புண்கள் தோன்றுகின்றதென்று சொல்லப்போனால் குடலில் இருக்கும் மூலாதாரச் சூடு அடி வயிற்றிலிருக்கும் கொழுப்புத்தன்மையை இறுக்கமடையச் செய்கின்றது. இந்த செயல்பாட்டால் குடல் தன் இயல்பிலிருந்து சுருக்கமடைந்து விடுகிறது. இதனால் நாளடைவில் தீராத மலச்சிக்கலும், வாயுத் தொல்லையும் குடலில் நிரந்தரமாகிவிடுகிறது. இந்த நிலையால் வயிறு பருமலடைகிறது. அத்துடன் மூலநோய் உருவாகும் அபாயத்தையும் உண்டு பண்ணுகிறது. நாளடைவில் மூட்டுவலிகளும் தீவிரமடைந்து செல்லும்.


எனவே ஆரோக்கியமாக வாழ வேண்டுமானால் நார்ச்சத்து (Fibre) அதிகமுள்ள உணவு வகைகளை உட்கொண்டால் மலம் மிக எளிதாக உடலிலிருந்து வெளியேறும். துரித உணவு (Fast Food), போதிய அளவு தண்ணீர் பருகாமை போன்றவற்றால் மலம் இறுகி வெளியேறுவது கடினமாகி விடும். இவ்வாறு சிரமப்பட்டு மலத்தை வெளியேற்ற நினைத்தால் மூலம் வெளியே வரக்கூடிய நிலையும் ஏற்படலாம்.

செரியாமை கோளாறுகளால் குடல், வயிறு, மூலாதாரம் ஆகிய பகுதிகள் பாதிக்கப்படும்போது ஒன்றுடன் ஒன்றுக்குத் தொடர்புடைய நோய்கள் ஏற்படுகின்றன. குடல் புண்ணால் வாயு பெருகி தொப்பையை உருவாக்குவதுடன் மூலநோய், குடலிறக்கம் (Henia) போன்ற ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட நோய்களுக்கு வழி வகுக்கின்றன. இதற்கு யோக மருத்துவம் மற்றும் மர்மப்புள்ளிகளை இயங்கச் செய்யும் வர்ம மருத்துவம் என்பன நல்ல தீர்வாகின்றன. வர்ம சிகிச்சை, வர்மமப்புள்ளிகளைத் தூண்டி செரிமான சக்தியை பெருக்கி குடல் மற்றும் வயிற்றுப் பகுதியில் தோன்றும் வாயுவை முதலில் கட்டுக்குள் கொண்டு வருகிறது. இதனால் குடல் புண்கள் ஆறுகின்றது. மலச்சிக்கலை போக்கி மூலநோய் குணமாக உதவுகிறது.

உண்ட உணவு சரியான முறையில் செரிமானம் ஆகிவிடும் போது தேவையற்ற கொழுப்பு உருவாவது தடுக்கப்படுகிறது. தேவையற்ற கொழுப்பு மற்றும் வாயுவினால் குடல் புண் ஏற்படுவதும் அதனால் மலக்குடலில் வீக்கம் தோன்றி மூலநோய் உருவாகுவதும் தடுக்கப்படுகிறது. இயற்கையான உடல் ஆரோக்கியத்திற்கும் உள் உறுப்புகளின் இயக்கத்திற்கும் எவ்வித ஊறு விளைவிக்காத யோகாசனம் மற்றும் வர்ம பரிகார முறைகளைப் பின்பற்றி செரிமான சக்தியை மேம்படுத்தும் பயிற்சிகளை மேற்கொண்டு அதன் மூலம் அல்சர் மற்றும் மூலநோய் தொந்தரவிலிருந்து விடுபடலாம். எவ்வித பக்கவிளைவுகளுமின்றி பூரண குணம் பெறலாம்.

**உணவு முறை**

'உணவே மருந்து - மருந்தே உணவு' என்ற சித்தர்களின் தத்துவத்தைக் கடைப்பிடிப்பவர்களுக்கு மேற்சொல்லிய நோய்கள் அண்டாது. காரமற்ற அளவான உணவு, போதுமான அளவு தண்ணீர், நார்ச்சத்து (Fibre) அதிகமுள்ள பழங்கள், காய்கறிகள் போன்றவற்றை உட்கொள்வதன் மூலமும் போதிய ஓய்வு உறக்கம் ஆகியவற்றைக் கடைப்பிடித்தல் மூலமும் உடலின் செரிமானம் சரிவர நடைபெறும். இத்துடன் தேவையான யோகா மற்றும் உடற்பயிற்சி, மூச்சுப்பயிற்சி இவை உடலுக்கும் மனதிற்கும் நல்ல ஆரோக்கியத்தைக் கொடுப்பதுடன் குடலின் செரிமான சக்தியை அதிகரித்து ஆரோக்கிய வாழ்விற்கு வழிவகுக்கும்.




ஆரோக்கிய வாழ்வு
N. Selvanathan
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721


# அதி உச்ச...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

• ஒன்ராரியோ தொலைக்காட்சி ஒளிபரப்பாளர் Mr. Steve Paikin, வருட சம்பளம் =$314,261.63 + சலுகைகள்.

• ரொறொன்ரோ மிருககாட்சிசாலை தலைமை அதிகாரி Mr. Robin Hale, Chief operating officer Toronto Zoo. வருடசம்பளம் = $211,340.53 + சலுகைகள்

• மாகாண முதல்வரின் தலைமை செயலாளர் Mr. Andrew Bevan, Chief of staff & Principal Secretary to the Premier

வருடசம்பளம் = $274,058 + சலுகைகள். மாகாண முதல்வரை விட அவரின் முழுநிர்வாகத்தினையும் கொண்டு நடத்தும் தலைமை நிர்வாகியின் சம்பளம் அதிகம் என்பதனையும் 'ரொறொன்ரோ ஸ்ரார்' சுட்டிக்காட்டியிருந்தது.


இதே வரிசையில் அதி உயர் சம்பளம் பெறும் துறைசார்ந்த திறமை மிக்க ஊழியர்கள் என பலர் இன்னும் இருந்தாலும் 'ரொறொன்ரோ ஸ்ரார்' பத்திரிகை இவர்களையே முன்னணியில் நிற்பவர்களாக பட்டியல் இட்டுக் காட்டியது.





ARISTO PEST CONTROL

Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL
• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat



Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# பற்றிக் பிறவுனுடன் ஒரு மாலை நேரம்

ஒரு மாலை நேரத்தில் ஊடகவியலாளர்களை ஒன்ராரியோ மாநிலத்தின் எதிர்க்கட்சித் தலைவர் திரு. பற்றிக் பிறவுன் சந்தித்தார். தமிழ்ப் புத்தாண்டுக்கு முந்தைய இரவிலேயே (சித்திரை 12) இச்சந்திப்பு இடம் பெற்றது. பற்றிக் வருவதற்கு முன்னர் ஊடகவியலாளர் அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என அங்கு வந்த ஊடகவியலாளர்கள் உரையாடினர். பல ஊடகவியலாளர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர். ஒரு கட்சியின் நிகழ்ச்சியில் ஒரு சுதந்திரமான அமைப்பை உருவாக்க முயற்சிப்பது, அவ் அமைப்பு அக்கட்சிக்கு சார்பாக செயல்படும் நிலைமையை ஏற்படுத்தும். அத்துடன் நடுநிலைமையும் பேணப்படாது என்ற கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன. இம்மாலை உணவு மற்றும் கலந்துரையாடலில் சில ஊடகவியாலாளர்களைக் காணக்கிடைக்கவில்லை.



திரு. பற்றிக் பிறவுன் பேசும் போது அரச விளம்பரங்கள் தமிழ் ஊடகங்களுக்கு கிடைப்பது குறைவாகவேயுள்ளது. இந் நிலையை தான் ஆட்சிக்கு வந்தால் மாற்றுவேன் எனத் தெரிவித்தார். விழா முடிவில் விளம்பரம் உட்பட்ட அனைத்து ஊடகங்களுக்கும் சிறப்பு பத்திரம் ஒன்றை ஒன்ராரியோ கொன்சவேற்றிவ் கட்சி சார்பாக சமர்ப்பித்தார். நிகழ்வின் முடிவில் உதயன் ஆசிரியர் லோகேந்திரலிங்கம் நன்றி தெரிவித்தார். ஊடகவியலாளர்களின் முக்கியத்துவத்தை கொன்சவேற்றிவ் கட்சியுணர்ந்துள்ளமை பாராட்டுக்குரியது.








TRIDEL
BUILT FOR LIFE
TRIDEL®
&
HomeLife/GTA Realty Inc., Brokerage*
HOMELIFE
HIGHER STANDARDS
"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"
OPEN HOUSE
Avani 2 Condominiums at Metrogate
Special
VIP Prices
Tridel Islington Terrace
Only
5% Down
* some conditions will apply
April 23, 2016 12:00 to 4:00 pm
Metropolitan Banquet Hall ( Kennedy & Finch)
3840 Finch Avenue East.Toronto, ON
Please Call: 416 321 6969
* Independently Owned & Operated


உங்கள் தணியாத தாகத்தை
சாந்திப்படுத்தவும்
ஒரு முறை அருந்தினால் மீண்டும்
அருந்தத் தூண்டும் இயற்கைச்
சுவையுடன் கூடிய
SHERBET / FALUDA
குளிர்பானம்
Niru BRAND®
SHERBET
Drink
with Jelly
NO PRESERVATIVES
NET WT./POIDS NET : 290 ml
NO PRESERVATIVES
அன்றும், இன்றும் என்றும் புதிய
தரமான தயாரிப்புக்களை அறிமுகப்படுத்தும்
நிரு பிராண்டின் புதிய தயாரிப்பு
சகல தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.




# மகுடம் - 2016

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கனடாக்கிளை நடத்திய 22ஆவது ஆண்டு 'மகுடம் 2016' கலைவிழா 2016 ஏப்பிரல் 02 இல் ஸ்காபரோவில் உள்ள சேர் ஜோன் ஏ மக்டொனால்ட் கல்லூரியில் நடைபெற்றது.

கொக்குவிலில் வாழ்ந்த சமூக சேவையாளரான அமரர் N.P. தேவராஜா அவர்களது நினைவாகவும், அவருக்கு நன்றி செலுத்தும் முகமாகவும் 'மகுடம்' கலைவிழா நடைபெற்ற அரங்குக்கு 'அமரர் N.P. தேவராஜா அரங்கு' எனப்பெயர் சூட்டப்பட்டது. இவ்விழாவிற்கு ராம் பிரசன் மற்றும் ஜீவிதா புவீந்திரன் அறிவிப்பாளர்களாக இருந்தார்கள்.

தேசிய கீதம், கல்லூரி கீதம் ஆகியன இசைக்கப்பட்டு கனேடிய தேசியக் கொடி மற்றும் கல்லூரிக் கொடியும் ஏற்றப்பட்டன. இதைத் தொடர்ந்து தமிழ்தாய் வாழ்த்தும் உலக சமாதானத்திற்காக உயிரிழந்தவர்களுக்கான அகவணக்கமும் நடைபெற்றன.

இவற்றைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் தெய்வீ சாயி நடனாலய அதிபர் செல்வி. ரூபினி தெய்வேந்திரனின் மாணவிகளின் வரவேற்பு நடனத்துடன் ஆரம்பமாகின. அடுத்ததாக அபிநயாலய நாட்டியாலய அதிபர் 'ஆடல் கலைமணி' ஸ்ரீமதி ரஜனி சக்திரூபனின் மாணவிகள் 'அழகே அழகே' என்ற சைவம் திரைப்பட பாடலுக்கு நடனம் ஆடினர். இந்நடன நிகழ்வின் பின்னர் உபதலைவர் திரு. M.V. ஜெகநாதன் கௌரவ விருது வழங்கி கௌரவித்தார்.

கௌரவ விருது வழங்கலைத் தொடர்ந்து கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர்சங்கம் நடத்திய கல்விசார் பேச்சுப்போட்டியில் அதிக புள்ளிகள் பெற்ற மாணவியான செல்வி. ஆரணி ஞான-நாயகன் உரையாற்றினார். இவர் 18 வயதிற்கு உட்பட்ட மாணவர் பிரிவில் முதலாவது இடத்தைப் பெற்றவராவர். 'நமது தாய்மொழி' என்னும் தலைப்பில் இவர் உரையாற்றினார்.

ஆரணியின் பேச்சைத் தொடர்ந்து சிறீ அபிராமி நாட்டியாலய அதிபரான ஸ்ரீமதி செந்தில்செல்வி சுரேஸ்வரனின் மாணவிகளின் 'குருஷேத்ரம்' நிகழ்வு நடை-பெற்றது. 18 நாள் பாரதயுத்தத்தை 18 நிமிடங்களில் மேடையில் மிகவும் அழகாக

கௌரவவிருந்தினர் திருமதி. இந்திராணி தேவராஜா அவர்களுக்கும் வழங்கினார்.

மலர் வெளியீட்டை தொடர்ந்து பிரதம விருந்தினர் உரை நடைபெற்றது. அவர் தனது உரையில் கல்லூரி நாட்களை நினைவு கூர்ந்ததுடன் கடந்த இருபத்திரண்டு வருடங்களாக பழைய மாணவர் சங்கம் ஆற்றிவரும் சேவையையும் பாராட்டினார். பிரதம விருந்தினர் உரையை தொடர்ந்து 'மதவடி' கலைஞர்களது நகைச்சுவை விருந்து நடைபெற்றது. சுகந்தன் மற்றும் குகனின் காலத்திற்கேற்ற நகைச்சுவைகள் பார்வையாளர்களை சிரிக்க வைக்கத் தவறவில்லை.

நகைச்சுவையை தொடர்ந்து உப செயலாளர் திருமதி. நாமகள் சிவகுமார் நன்றி உரை வழங்கினார். நன்றி உரையை தொடர்ந்து சிற்றுண்டிக்கான இடைவேளை


















மகுடம் 2016 கலைவிழா சரியாக மாலை 5:30 மணிக்கு பிரதமவிருந்தினர்களின் வரவேற்புடன் ஆரம்பமானது. பிரதம விருந்தினர்களாக திரு. குணரஞ்சன், திருமதி. மனோ குணரஞ்சன் அவர்கள் வருகை தந்திருந்தனர். பிரதமவிருந்தினரை அறிமுகம் செய்த ராம் பிரசன் கொக்குவில் இந்துக்கல்லூரி நிறுவினரான திரு. செல்லையா அவர்களின் பேரன் திரு. குணரஞ்சன் என குறிப்பிட்டார். குணரஞ்சன் கல்லூரிக்காலங்களில் கொக்குவில் இந்துவில் உதைபந்தாட்டம், கிரிக்கெட் மற்றும் கடேற் என பல துறைகளில் பங்குபற்றி ஒரு பிரபலமான மாணவனாக திகழ்ந்தார். அவர் கனடாவில் நீண்ட காலமாக 'Optimart' என்னும் நிறுவனத்தை நடத்தி வருகிறார் என்றார்.

பிரதமவிருந்தினர்கள் மற்றும் பழைய மாணவர் சங்கத்தலைவர் திரு. ரபிமோகன் தேவராஜா, அவரது பாரியார் ஆகியோர் மங்கல விளக்கேற்றியதுடன் கனேடிய அமரர் கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையாவின் மகளும் ரொறொன்ரோ கலாபவன அதிபருமான 'நாட்டியக் கலைமணி', 'பரதகலாவித்தகர்' ஸ்ரீமதி குமுதினி சிறீகாந்தனின் மாணவிகளின் 'கீர்த்தனம்' நடன நிகழ்வு நடைபெற்றது.

திரு. வாசு சின்னராசாவின் சதங்கை நர்த்தனாலயா பழைய மாணவிகளின் 'புஸ்பாஞ்சலி' நிகழ்வு அடுத்ததாக நடந்தது. புஸ்பாஞ்சலியை தொடர்ந்து தெய்வீ சாயி நடனாலய அதிபர் செல்வி ரூபினி தெய்வேந்திரனின் மாணவிகளின் கண்ணன் Fusion நடனம் நடந்தது.

இந்நடன நிகழ்வுகளை தொடர்ந்து கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்திற்காக அயராது உழைத்து வருபவரான திரு. கேதீஸ்வரன் சீவரட்ணத்திற்கு கொக்குவில் இந்துக் கல்லூரி பழையமாணவர் சங்க கனடாக் கிளையினர் சார்பில் பழையமாணவர் சங்க 28 மாணவிகள் மூலம் செந்தில்செல்வி நடிப்பித்து காட்டியிருந்தார். எல்லா மாணவிகளும் தமது பங்கை சிறப்பாக செய்திருந்தாலும் துச்சாதனன், கண்ணன், திரௌபதி மற்றும் சகுனியின் பாத்திரம் ஏற்று நடித்தவர்களின் நடிப்பு மிகவும் சிறப்பாக இருந்தது.

குருஷேத்திர போரின் பின்னர் தலைவர் திரு. தேவராஜா ரபிமோகன் உரையும் மகுடம் மலர் வெளியீடும் நடந்தன. தலைவர் உரையை தொடர்ந்து செயலாளர் நடராசா நாகேஸ்வரன் தேவராஜா குடும்பத்தவர்கள் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு செய்த, செய்து வருகின்ற உதவிகளைப் பற்றி கூறினார். அவர்கள் அன்பளிப்பு செய்துள்ள வீடு, காணி பற்றியும் அதில் கட்டப்பட்டுள்ள பெண்களுக்கான உள்ளக விளையாட்டு வசதிகள் பற்றியும் கூறினார். இதைத்தொடர்ந்து தலைவர் மகுடம் இதழ்களை பிரதம விருந்தினர்களுக்கும்,

விடப்பட்டது. இடைவேளையின் பின்னர் 8 மணிக்கு அக்கினி இசைக்குழுவினரின் 'இசை அலைகள்' நிகழ்வு ஆரம்பமாகியது. இந்நிகழ்வில் ரொறொன்ரோ கலைஞர்கள் சரிகா, தீபிகா, யாதவி, மகிஷா, சுரேஸ், சாம்பவி, சோபியா மற்றும் பலருடன் மொன்றியலில் இருந்து வந்த அமுதன் அண்ணாமலையும் பங்கேற்றனர். கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் 'நமது கலைஞர்களை நாமே நட்சத்திரகளாக்குவோம்' என்ற குறிக்கோளுடன் எமது கலைஞர்களை கொண்டு அக்கினி இசைக்குழுவின் ஒத்துழைப்புடன் இந்நிகழ்வை நடத்தினர். இந்நிகழ்வில் பெரும்பாலான பாடல்களுக்கு நமது கலைஞர்கள் நடனமும் ஆடினர்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அம்சமாக தமிழ் நாட்டில் இருந்து வந்த சத்தியபிரகாஸ் மற்றும் வந்தனா சிறிநிவாஸ் பாடல்கள் பாடினார்கள். இந்நிகழ்வுகளை அக்கினி

தொடர்ச்சி 26ஆம் பக்கம்...




# சித்திரைப் புத்தாண்டே

தை மகளின் தங்கையாய் சித்திரைத் தேவி
துர்முகி நாமம் கொண்டு சித்திரத் தேர் ஏறிவருகின்றாள்
இத்தரையில் சமாதானத்தென்றலாய் வீச
இனிய புத்தாண்டாய்பிறக்கின்றாள்

அதிகாலை நாம் எழுந்து மகிமைமிகு மருத்துனீர்
தலையில் தடவி நன்னீரில் மூழ்கிடுவோம்




குறைவின்றி நம் வாழ்வு செழிக்கவென்று
வீட்டில் ஒளி விளக் கேற்றி வைப்போம்

முடித்தேங்காய் மாவிலை கொண்டு நிறைகுடம்வைப்போம்
கருத்துடன் புத்தாடை அணி கலன்கள் பூண்டிடுவோம்
பெற்றோர், பெரியோர் பாதம் பணிந்து அவர்தம்
கையால் கைவிசேசம் பெற்று மகிழ்வோம்

நிறைவான வாழ்க்கைத்தரம் வேண்டிட ஆலயம் சென்று
இறைவனிடம் வரம் வேண்டித்தீபாராதனை செய்வோம்
பகமைதனை மறந்து பலரும் இணைந்து நின்று
பண்இசை பாடி மகிழ்வோம்

செந்தமிழர் சிங்களர் சேர்ந்து கொண்டாடும் இந்நாளில்
வீட்டிலும், நாட்டிலும் உலகெங்கும் சாந்தி சமாதானமும்
நிம்மதியும் ஒற்றுமையும் நிலவ வேண்டுமென
பாடி, ஆடி, ஒன்று கூடி மகிழ்வோம்

நெல்லுடன், நவதானியங்களும் விஞ்சி விளைந்திட
நல்மழை பெய்து நாடு செல்வம் கொழித்திடவும்
நல்லாட்சியின்கீழ் மக்களை வாழவைக்க வருக வருக
என நல்மகள் சித்திரைத் தேவியை வரவேற்போம்

அயலாரை, உற்றார், உறவினர்கள் நண்பர்களை அழைத்து
அறுசுவை உண்டிகள் சுவைத்துண்டு மகிழ்வோம்
பட்டாசு பலவும் கொழுத்தி எல்லோரும் இணைந்து
சித்திரைப் புத்தாண்டை வரவேற்போம்


கவிநாதம் பரந்தாமன்

# மகுடம்...

இசைக்குழுவின் சில்வியா தொகுத்து வழங்கினார். இந்நிகழ்வுகளுக்கு இடையே பல பாடல்கள் சேர்ந்து பாடினர். இவ்வாறு தொடர்ந்த இசை அலைகள் நான்கு மணிநேர இசைமழையின் பின்னர் நள்ளிரவு 12 மணியளவில் நிறைவெய்தியது.





கலைஞர்களையும் பழைய மாணவர் சங்கம் கௌரவித்தது. சத்தியபிரகாஸ் மற்றும் வந்தனாவிற்கு ஸ்காபரோ றூஜ் பார்க் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் கௌரவ விருது வழங்கி கௌரவித்தார். சத்தியபிரகாஸ் மற்றும் வந்தனாவுடன் எமது கலைஞர்களும்


அருந்ததி ஞா.

# வாழ்க்கைப் பயணங்கள் - 15

தொடர்கதை……….

பல மாதங்கள் கடந்து விட்டன.

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை. விடுமுறை நாள்.

அமலா வழமையை விட நேரம் பிந்தி எழுந்து காலைக் கடன்களை முடித்துக் குளித்து சாமிப் படத்துக்கு முன் நின்றபடி கடவுள் பிரார்த்தனையும் முடித்துக் கொண்ட பொழுது சுவரில் தொங்கிய கடிகாரம் காலை பதினொரு மணியைக் காட்டியது. "அதிகமாகவே காலையில் நேரத்தை வீணடித்து விட்டேன்" என்ற எண்ணம் அவள் மனதில் எழுந்தது. தேனீரையும் போட்டு, காலைச் சாப்பாட்டுக்கு இரண்டு பாண் துண்டுகளையும் எடுத்துக் கொண்டு உணவருந்தும் மேசையடியில் இருந்த கதிரையில் வந்து அமலா அமர்ந்து கொண்டாள். அவள் மனம் அமைதியாக இருந்தது. அமலாவுக்கு ஏதோ ஒரு கண்டத்தில் இருந்து தப்பியது போலான உணர்வு. அவளைச் சூழ்ந்த இருண்ட முகில்கள் மெல்லக் கலைந்து விட்டதான உணர்வு. ஆமாம் அந்த உணர்வு ஏற்படுவதற்கான காரணம் ஒன்று உண்டு. திருமண முறிவுப் பத்திரம் கிடைத்து விட்டது என்ற செய்தியே அதற்கான காரணமாகும்.

| 16209014 | Akash Sasitharan | 2 | MONTREAL |
| 16109011 | Kerthy Sabaratnam | 3 | TORONTO |
| **Grade 10 General Knowledge** | | | |
| 16210007 | Myuran Murugesapillai | 1 | MONTREAL |
| 16110002 | Cynthiya Gnanaseelan | 2 | TORONTO |
| 16110014 | Krisna Srinavasajendren | 2 | TORONTO |
| 16210008 | Yanojan Selvanayagam | 2 | MONTREAL |
| **Grade 11/12 General Knowledge** | | | |
| 16111008 | Ahrani Gnananayakan | 1 | TORONTO |
| 16111031 | Umaiyahl Nageswaran | 1 | TORONTO |
| 16111013 | Keerthigan Mathivannan | 3 | TORONTO |

**வினா விடை மீளாய்வு May 01, 2016 நடைபெறும்.**
**மீளாய்வு செய்ய விரும்புவோர் April 24, 2016 இற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.**

தொடர்புகளுக்கு: www.mahajanan .org அல்லது contest@mahajanan .org

Office : 647-547-7096 Gowri : 416-751-8427 Ravin : 647-989-6477 Seelan : 416-671-6447

# பூனைக்குட்டியும் சிங்கமும்

ஒரு வீட்டில் பூனை ஒன்று வாழ்ந்து வந்தது. அதற்கு வீட்டுக்காரர் இல்லாத பொழுது கணினியில் இணையத்தளம் பார்க்கும் பழக்கம் இருந்தது.

ஒருமுறை அது அவ்வாறு இணையத்தளத்தை பார்த்து கொண்டிருந்தபொழுது சிங்கம் என்ற ஒரு மிருகத்தைப் பற்றி படித்தது. சிங்கம் காட்டில் வசிப்பதையும், மிருகங்களை வேட்டையாடுவதையும் அறிந்தது. இந்த கம்பீரமான மிருகத்தைக் கண்ட பூனைக்கு மிகவும் பிடித்து போயிற்று. அதுவும் பூனையினம், தானும் பூனையினம் என்பதால் பூனை சிங்கம் போல் ஆக விரும்பியது.

சிங்கம் பிற மிருகங்களை வேட்டையாடுவதை கண்ட பூனை தானும் அதைப்போல வேட்டையாட வேண்டும் என நினைத்தது. பூனை தன் வீட்டிற்கு வெளியே சென்றது. அவ்வாறு வெளியே சென்றபோது பூனைக்குட்டி தன்னை விட பெரிய மிருகமான முயலை கண்டது. இதுவே சரியான தருணம் என பூனையும் சிங்கம் பாய்வதை போல முயலை நோக்கி பாய்ந்தது. முயலோ பூனைக்குட்டியை ஒருமுறை பார்த்துவிட்டு தன் வேலையை பார்த்துக் கொண்டு துள்ளிச் சென்றது. வெட்கத்துடன் பூனைக் குட்டியும் திரும்பி வீட்டிற்கு சென்றது. எவ்வாறு தான் ஒரு சிங்கம் போல ஆகலாம் என்று நினைத்தது. தன் பழக்கங்களையும் சிங்கத்தின் பழக்கங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தது.

'சிங்கம் காட்டில் வசிக்கின்றது, பெலத்து கர்ச்சிக்கின்றது' எனவே தானும் கர்ச்சிக்க வேண்டும் என பூனை நினைத்து கண்ணாடியை பார்த்து கர்ச்சிக்க முயற்சி செய்தது. இவ்வாறு ஒரு சில மணி நேரம் முயற்சி செய்த



பூனைக்குட்டிக்கு அதன் குரல் வேலை செய்யாமல் அடைத்து விட்டது. இதனால் 'சரி, பரவாயில்லை' என பூனைக்குட்டி காட்டிற்கு செல்ல நினைத்தது. ஆனால் பூனை வாழ்ந்த இடத்திற்கு அருகே காடு ஒன்றும் இருக்கவில்லை. எனவே அது அருகில் இருந்த மிருகக்காட்சி சாலைக்கு சென்றது.


அங்கு பூனைக்குட்டி தான் கண்ட மிருகங்களுக்கு எல்லாம் சிங்கம் போல் நடித்து காட்டியது. பன்றியை நோக்கி பாய்ந்தது, மானை நோக்கி கர்ச்சிக்க முயற்சி செய்தது. அவை பூனையை கவனிக்காமல் தங்கள் வேலையை பார்த்துக் கொண்டிருந்தன.

இதைக் கண்ட பூனைக்குட்டிக்கு சோகமாக இருந்தது. சிங்கம் செய்வது எல்லாம் தான் செய்தும் ஏன் பிற மிருகங்கள் தன்னை சிங்கம் போல மதிக்கவில்லை? என நினைத்தவாறு மிருகக்காட்சி சாலைக்குள் நடந்து திரிந்து, சிங்கத்தின் கூட்டிற்கு முன்னால் வந்தது.

குரல் போய் இருந்தாலும், சிங்கத்திற்கு பூனைக்குட்டியின் பிரச்சினை விளங்கியது. பூனையிடம் 'நான் செய்வதெல் லாம் செய்தால் நீங்கள் என்னைப்போல் ஆக முடியாது. குரல் போனதுபோல தீய விடயங்கள் தான் நடக்கும். ஒருவர் அவருக்கு என்ன சரியோ, அதைத்தான் செய்ய வேண்டும். அப்படி தான் வளர முடியும்' என அறிவுரை கூறியது.

பூனைக்குட்டியும் இதைக் கேட்டுக்கொண்டு வீடு சென்று 'எவ்வாறு ஒரு சிறந்த பூனை ஆவது' என இணைய தளத்தில் தேடியது.

**நீதி - 'இயல்பலாதன செய்யேல்' - ஆத்திசூடி.**



ஞா. ஆரணி
அகவை 17

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.



Engineering Drawing Package for Custom Build Home to Obtain Site Plan Approval and Building Permits - $11,995 +HST

Our Engineering Drawing Package for Custom Build Home includes the all the Applicable Drawings, Plans and Reports of the following: Legal Land Survey, Topographical Survey, Arborist Report, Tree Protection Plan, Geotechnical Report, Soil Test for Soil Bearing Capacity, Soil Percolation Test for Stormwater Management, Site Plan, Site Grading & Erosion Control Plan, Stormwater Management Report, Functional Servicing Report, Site Servicing Plan, Architectural Drawings, Floor Plans, Elevations, Cross Sections, Structural Drawings, Plumbing Drawings, Heat Loss / Heat Gain Calculations, HVAC Drawings, Duct Design, Ventilation Design / Calculations, and Landscape Architect Plan.

**We also offer Total Project Management for Custom Build Home, including Site Plan Approval, Building Permits, Arranging Construction Loan, and Construction Management for $22,975 +HST**



சகலவிதமான கட்டிட நிர்மாண வரைபடத் தேவைகளுக்கு நம்பிக்கையுடன் நாடுங்கள்

M.பாஸ்கரசிங்கம், P.Eng.

Periyathamby Kuruparan M Sc (Eng) Meghal Raval M Sc (Eng)

(416) 332 1743 www.buildingexpertscanada.com

# பெண்களும்...

## 16ஆம் பக்கத்தொடர்ச்சி

மடங்கு அதிகமாகவும், இறந்து ஒரு வாரம் கழிந்து ஆறு மடங்காகவும் துடிக்கும் என கூறுகின்றார். இதே வேளையில் மினியாபொலிஸ் மருத்துவ மனையை சேர்ந்த மருத்துவர் இத்தகைய உடைந்த இதய அறிகுறிகளுக்கு ஆளாகும்போது பெண்ணின் இதயமானது சீராக துடிப்பதற்கு பதிலாக கடுமையாக உலுக்கப்படுகிறது என்கிறார். இத்தகைய சீரற்றநிலையை மருத்துவர்கள் ‘கன்கியூசன் (Concussion) என்கிறார்கள். இலத்தீன் மொழியில் இச்சொல்லுக்கு உலுக்குதல் என்பதே பொருளாகும். அளவுக்கு அதிகமாக சுரக்கும் அட்ரின்லின் ஹோர்மோனாது, பலவகையான வழிகளில் இதயத்தை உலுக்கி செயல்பாட்டினை உறைய (Hibernation) செய்கின்றது. இத்தகைய நிலையில் இதயத்தின் திசுக்கள் நிரந்தரமாக மடிவதில்லை. இத்திசுக்கள் உயிருடன் இருக்கும் அட்ரினலின் சுரப்பு குறைந்ததும் இதயம் பழைய நிலைக்கு திரும்பும்.

தமிழ் பெண்கள் தாயகத்தில் அடைந்த இன்னல்களுக்கு அளவேயில்லை. பிள்ளைகளை, கணவன்மாரை, பெற்றோரை பறிகொடுத்து ஒரு அனர்த்தத்திற்கு பின்பதான மனஅழுத்தத்தால் பாதிக்கப்பட்டே இங்கு வந்துள்ளனர். யுத்த சூழ்நிலையை அனுபவித்தவர்களின் இதயம் சுக்குநூறாகி போயிருக்கும் என்பதில் மறுப்பு இல்லை. இங்குள்ள சூழ்நிலைகள் இன்னும் ஒருபடி மேலானது. இங்குள்ள வாழ்க்கை மலர் நிறைந்த மஞ்சம் அல்ல. இன்பமும் துன்பமும் கலந்த சவாலான வாழ்க்கை. வானொலிகளில் வந்து நேரடியாக ஆறுதல் பெறும் பெண்களின் தொகையே அதிகமரகும். ஒருசிலர் வசதி வாய்ப்புடன் வாழ்ந்தாலும் பலரது அன்றாட வாழ்வு மிகுந்த சவால்கள் கொண்டதாகும். இப்படியான சூழ்நிலைகளில் பெண்களின் இதயம் சுக்குநூறாகி போகின்றது என்பது ஒரு ஆய்வுப் பொருள்தான். திருமணமான மனைவி தன்னுடைய இளம் கணவனை எதிர்பாராத விபத்தில் இழப்பது, அளவுக்கு அதிகமாக தன் காதலனை மட்டும் நம்பி இருந்த இளம் பெண் தன்னுடைய காதலை உதறிவிட்டு காதலன் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்வது, திருமணம் செய்வதாக கூறி இளம் பெண்ணை இங்கு வரவழைத்து விட்டு வேறொரு பெண்ணுடன் தொடர்பு கொள்வது, எதிர்பாராத வகையில் தன்னுடைய



அன்புக்குரிய குழந்தையை வீதி விபத்தினால் திடீரென இழப்பது, தனது அன்புக்குரிய கணவன் செய்துவந்த தொழில் எதிர்பாராத வகையில் பறிபோவது, கணவனால் விவாகரத்து கோரப்படும்போது, புதிதாக திருமணம் செய்த பெண் கணவனின் குடும்பத்தினரால் துன்புறுத்தப்படும் போது எல்லாம் தாங்க முடியாத நிலைக்கு செல்ல நேரிடுகிறது.

புலம்பெயர்ந்து வந்துள்ள எமது குடும்பங்களில் பெண்கள் பல சுமைகளை தாங்க நேரிடுகிறது என்பது யதார்த்தம்தான். ஆண்களுக்கு எதுவித பிரச்சினையும் இல்லை என்பது இதன் அர்த்தமல்ல. ஆணுக்கு உரிய உடலமைப்பும், உணர்வு வலுவும், மரபுக் கூறுகளும் மிக உறுதியானவை. ஆனால் பெண்களின் சுபாவம், வாய்விட்டு சொல்ல முடியாத நிலை. குழந்தைகளால் ஏற்படும் சிக்கல், கணவரின் அன்பினை பெற முடியாத நிலை, குடிப்பதால் உடல் கெடும் கணவனின் நிலை, இரண்டு பேரும் வேலைக்கு செல்லும் சூழ்நிலை, வருமானத்தினை பெற்றாலும் அதனை பங்கிடமுடியாத குடும்பநிலை, எதுவித திட்டமில்லாமல் வாழக்கூடிய நிலை என்பவற்றால் பல இதயப் பாதிப்புக்களை சந்தித்தே தீரவேண்டியுள்ளது.

பல இதய நோய் உள்ள பெண்கள் மருந்துவர்களிடம் சென்றாலும் அவர்களுக்கு மன அழுத்தத்தால் இதயக் கோளாறு உள்ளது எனவும் வாழ்வுச் சூழலும், நொருங்குண்ட இதயமுமே காரணம் எனவும் கூறுவார்கள். பெண்களிடம் காணப்படும் பல்வேறு வகையான ஹோர்மோன் சுரப்புகள் எப்போது எப்படி தொழிற்படும் என்றும் கூறமுடிவதில்லை. தைரொய்ட், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களை விட பெண்களுக்கு ஏற்படும் இதய நோய் மிகவும் கஷ்டமானது. இவர்களுக்கு இதயத் துடிப்பு கூட ஒழுங்கின்றி காணப்படும். அவர்களால் உணர்ச்சிகளை வெளிக்காட்ட முடிவதில்லை. எல்லாமே உள்ளுக்குள் நடைபெறும் போராட்டமாகும். திடீரென்று ஒரு நாள் அது வெளிப்படும் போதுதான் இதயமே தாங்கமுடியாத வலியை அனுபவிக்கும். எந்த அதிர்ச்சியிலும் மகிழ்ச்சியாக வாழ முனைவதே அவர்களின் கடமையாகும்.



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

கனேடியச் செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com



Math tutorial 320

Answers to tutorial319

1)Multiplying the two given equations $(x^2yz^3)(xy^2)=(7^4)(7^5)$

$X^3y^3z^3=7^9$, therefore $xyz=7^3$

2)Re write 30/7 as4+2/7 $=\frac{1}{7/2}$

=4+1/(3+1/2) .By comparison x=4, y=3 and z=2

3)Using f(x)=px+q , f(f(x)) =f(px+q)

$=p(px+q) +q =p^2x+pq+q$ and

$F(f(f(x))) =f(p^2x+pq+q)$
$=p(p^2x+pq+q) +q =p^3x+p^2q+pq+q$

Evaluate this to8x+21 to find p=2,q=3 Thus p+q=5

4)( 6,3,0) =(q,t,-4)+s(-2,1,2) from this 0=-4+2s ,s=2 hence q=10 and t=1

5)We need to determine the number of standard deviations, k , that encloses at least 80percent or 4/5 Using Chebyshev's Theorem $1-1/k^2=4/5, k=\sqrt{5}$, therefore the person should leave $73+\sqrt{5}(12)=100$ mts before

TUTORIAL 320 Questions

1)The product of $20^{50}$ and $50^{20}$ is written as an integer in expanded form. Calculate the number of zeros at the end of the resulting integer? (gr10)

2)The line2y=3x intersects the curve $\frac{x2}{8}+\frac{y2}{18}$ =1 at the point Q andR.Calculate the length ofQR ?

3)Determine the coefficient of $x^2$ in the expansion of $[2X+1/X\}^8$ 'X≠ 0

4)A game consists of rolling a die, then cutting a deck of cards.Find the probability that a six is rolled and a six is cut from the deck of cards? (gr12)

5)In a repeated rolling of a pair of dice ,what is the probability that the first roll of doubles occurs on the third roll? (gr12)

By Mr S.F.Xavier(Teacher)

Tel 6473409490/4167322228

# வெளிச்சத்திற்கு வரும் வெளிச்சம்

## சுவாரசியமான அறிவியற் தகவல்களைக் கொண்ட தொடர்

சென்ற தடவையில் மாடேற்றுச் சட்டங்கள் பற்றி எங்களுக்குத் தேவையான அளவிற் தெரிந்து கொண்டோம். இனி தொடந்து எங்களின் பாதையிற் பயணிப்போம்.

நியூட்டன் கூறியபடி ஒளி சின்னச்சின்ன துகள்களாகச் செல்கின்றன என்றால் அத்துகள்கள் ஒரு வடிவினையும் கொண்டிருக்க வேண்டுமல்லவா. நியூட்டன் அதற்கும் பொருத்தமான பதில் கொடுத்திருந்தார். நியூட்டன் காட்டிய ஒளித் துகள்கள் கிட்டத்தட்ட ஒரு உருளை வடிவில் இருந்தன. ஒளியின் இந்த அமைப்புத்தான் ஒளியின் இயல்புகளைத் திருப்தியாக்குகிறது என நியூட்டன் கூறினார். ஒளி துகள் என்பது அது ஊடகமொன்றில் நேர்கோட்டிலே செல்லக் கூடியது என்பதை நியாயப்படுத்துகிறது. அத்துடன், ஊடகத்தின் அடர்த்தி காரணமாக, இந்த ஒளித்துகள்கள் அல்லது துணிக்கைகள் ஊடகமொன்றிற் செல்கையில் ஊடகத்தின் துணிக்கைகளினால் நெருக்குப்படுகின்றன. ஒளி, இன்னொரு ஊடகத்துள் நுழைகையில் ஊடகங்களின் அடர்த்தி வேறுபாடு காரணமாக, ஒளித்துகள்கள் வித்தியாசமான அளவிலான நெருக்குதல் பெறுகிறது. அதனால், சரிவாக அவ்வூடகத்துள் நுழையும் ஒளித்துகள்கள், முதலாவது ஊடகத்தில் தாம் வந்த நேரான பாதையை விட்டுவிலத்திப் புதியதொரு நேர்ப்பாதையிலே புதிய ஊடகத்தில் செல்ல வேண்டி வந்து விடுகின்றது. இதுதான் ஒளி முறிவாகத் தெரிகிறது என மிகவும் அற்புதமான விளக்கத்தை நியூட்டன் கொடுத்தார்.

வெவ்வேறு நிறங்களில் வரும் ஒளிக் கதிர்களுக்கான விளக்கமாக, அந்நிறங்களுக்கான ஒளித்துகள்களின் பருமன்களைக் குறிப்பிட்டார். வெவ்வேறு நிறங்களுக்கான ஒளித்துகள்கள் வெவ்வேறான பருமன்களில் இருப்பதனாலேயே வெவ்வேறு நிறங்களை நாங்கள் காண்கின்றோம் என நியூட்டன் விளக்கமளித்தார். அதனால் வெவ்வேறு நிறங்களின் ஒளித்துகள்கள் ஒரு ஊடகத்தில் இருந்து இன்னொரு ஊடகத்தினுள் செல்லும்போது, அந்த ஊடகத்தின் துணிக்கைகளினால் வெவ்வேறு அளவிலான நெருக்கல்களை அடைகின்றன. அதனால் வெவ்வேறு பாதையில் அந்நிற ஒளித் துணிக்கைகள் முறிவடைகின்றன. இதனாலேயே, முக்கோணக் கண்ணாடி அரியத்தின் ஊடாக வெண்ணிற ஒளி செல்கையில், அதிற் கலந்திருந்த ஏழு நிறங்களும் பிரிந்து நிறமாலையைத் தருகின்றது.

நியூட்டனின் ஒளிபற்றிய இந்தக் கொப்புலஸ் கொள்கையானது ஒளியின் பல இயல்புகளைத் திருப்தியாக்கியது. அக்கொள்கையானது மதிப்புக்குரியதுதான். நியூட்னின் ஒளிக் கொள்கை ஒளியின் பல இயல்புகளை விளக்கினாலும், அக் கொள்கைக்கு எதிர்ப்புகளும் இருக்கத்தான் செய்தன. குறிப்பாக நியூட்டனின் காலத்திலேயே இருந்த இன்னொரு விஞ்ஞானியான (Christian Huygens) ஐகன் என்பவர் நியூட்டனின் கொப்புலஸ் கருத்தினை துப்பரவாகவே ஏற்றுக் கொள்ளவில்லை. இவருடன் 'ஊக்' (Robert Hooke) என்பவரும் சேர்ந்து நியூட்டனின் ஒளியின் துகள் கருத்தினை மறுத்தார்கள். ஐகனின் கருத்துப்படி, ஒளியானது அலைவடிவிலேயே எல்லா இடங்களுக்கும் செல்கிறது என்றாகிறது. ஒளியின் துகள்கள் கருத்தை அவர் ஒரு பொருட்டாவே எடுக்கவில்லை. ஆனாலும் நியூட்டனின் ஈதர் எடுகோளை அவர் மறுக்கவில்லை, ஏற்றுக் கொண்டார். நியூட்டன், ஐகன் இருவரது முரண்பாடான கருத்துக்களால் முன்னரே மெதுமையாக இருந்த 'ஒளி அலையா இல்லைத் துகளா' என்ற சர்ச்சை, 17ம் நூற்றாண்டில் மிகப் பெரிதாக ஏற்பட்டது, நியூட்டனும் ஐகனும் தத்தமது கருத்துக்களுக்கான வலிமையான விளக்கங்களை முன்வைத்தார்கள்.

நியூட்டனின் ஒளியின் இம்மிக் கொள்கைக்கு எதிராக குரல் கொடுத்த ஐகனின் கருத்துக்களையும் அக்கால விஞ்ஞானிகளால் ஒதுக்கி விட முடியவில்லை. அலை இயக்கங்கள் பற்றி ஆய்வு செய்து, அலைகள் பற்றிய ஆச்சரியமான பல விபரங்களைத் தந்த அவரது கருத்தினையும் மற்றய விஞ்ஞானிகளால் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் போல இருந்தது. முன்னோக்கிச் செல்கிற அலையொன்று தான் வந்தடையும் ஒவ்வொரு புள்ளிகளையும் அவ்அலையின் புதிய அலைமுதலாக்கி அதில் இருந்து முன்னோக்கிப் பரவும் என்ற ஒளி பற்றிய அழகான கருத்தினை ஐகன் முன்வைத்தார். அவரது அலைகள் பற்றிய கருதுகோள்கள் எல்லாவற்றிக்கும் அக் கருதுகோளே ஆதாரமாக இருந்தது. காற்றில் ஒலியலைகள் செல்வது போன்றே இந்த ஒளியலைகளும் நியூட்டன் கூறியிருந்த ஈதர் என்ற ஊடகத்தின் துணிக்கைகளை அதிரப் பண்ணுவதின் மூலமாகவே தம்மை முன்னோக்கி நகர்த்துகின்றன என்றும் கூறினார் ஐகன்.

இந்த அலைமுதல் அமைப்புக் கொள்கையினைக் கொண்டு ஐகன் ஒளியின் முறிவிற்கான விளக்கத்தினையும் கொடுத்தார். நிறமாலையின் ஏழு நிறங்களும் வெவ்வேறு அலைநீளம் கொண்ட வெவ்வேறு அலைகளாக இருக்கின்றன. அதனால்தான் அவை கண்ணாடி அரியத்தின் ஊடாகச் செல்கையில் வெவ்வேறு நிறங்களைக் காட்டுகின்றன என்று நியூட்டனின் திருசியத்திற்கு விளக்கம் கொடுத்த ஐகன், வெள்ளொளியிற்கான காரணத்தையும் கொடுத்தார். அவரது கருத்துப்படி, அலைகளின் சிறப்பான மேற்பொருந்துகைத் தத்துவத்தின் காரணமாக, ஏழுநிற அலைகளும் ஒன்றாகச் சென்று வெள்ளொளியின் இயல்பைக் காட்டுகின்றன என்றும் கூறினார்.

நியூட்டனும் ஐகனும் தங்கள் தங்கள் பக்கமாக வைத்துக் கொண்ட தர்க்கங்கள் சிலவற்றைப் பார்ப்போம். இன்றும்கூட அவை மிகவும் சுவாரசியமானவை. பொருட்களின் நிழல்கள் விழுவதே ஒளி துகள்களாகச் செல்வதற்கு அருமையான விளக்கமாக நியூட்டன் காட்டினார். ஆனால் ஒரு சிறிய மெல்லிய குண்டூசியினை பிடித்தால் சற்றுத் தூரத்தில் குண்டூசியின் நிழல் தோன்றுமா? ஏன் தோன்றுவதில்லை? ஒளி துகளாக நேர்கோட்டில் சென்றால் குண்டூசியின் நிழலும் விழத்தானே வேண்டும். அதன் அலைபோன்ற இயல்பே குண்டூசியின் பின்னாலும் ஒளியினை கொண்டு வரப்பண்ணி, குண்டூசியின் நிழலை ஏற்படுத்தவில்லை. எனவே ஒளி அலையின் இயல்பைக் காட்டுகின்றது தானே! ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

> உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒளியின் துகள், அலைச் சிக்கலைத் தெளிவுபடுத்த இன்னொரு எடுத்துக் காட்டினையும் கூறுவார்கள். இரண்டு அறைகளை ஒரு சுவர் பிரித்து நிற்கின்றது. சுவர் முற்றாகவே ஒலி (சத்தம்) தடுப்புடையது. ஒரு அறையில் நின்று சத்தம் செய்தால் மறு அறைக்குள் இருப்பவருக்குக் கேளாது. அப்படியேதான் ஒளி (வெளிச்சம்)க்கும். ஒரு அறையில் உண்டாக்கப்படும் ஒளி அடுத்த அறையை வெளிச்சப்படுத்தாது. இனி, சுவரில் ஒரு சிறிய துவாரத்தை இடுவோம். ஒரு அறையில் இருந்து ஒருவர் பாடினால், மறு அறையில் இருப்பவருக்கு, அறையின் எந்த இடத்தில் நின்றாலும் கேட்கும். அது ஒலி, அலையின் தன்மையைக் காட்டுவதால் ஏற்படுகின்றது. இப்போது, ஒரு அறைக்குள் வெளிச்சத்தை உண்டாக்கினால் என்ன நிகழும்? துவாரம் உள்ள இடத்தின் ஊடாக வெளிச்சம் மறு அறைக்குள் நுழையுந்தான். ஆனால் மறு அறை எங்கும் அது வெளிச்சப்படுத்துவதில்லை. அத்துவாரத்தின் நேராக, நேர்கோட்டுப் பாதையை மாத்திரம் வெளிச்சமாக்கும். இப்படியாகப் பார்க்கையில் ஒளியானது, அலையின் தன்மையைக் காட்டவில்லையே! அப்படியாயின் எப்படி ஒளியினை அலைவடிவினது எனக் கூறுவது?

அப்படியாயின் ஒளி, அலையா அல்லது துகளா? முடிவினை நோக்கி அடுத்த தடவையும் வெளிச்சம் போட்டுப் பார்ப்போம். சரிதானே!


– கனி –
416.261.1348
leptons@hotmail.ca





AGARA
ACCOUNTING & TAX SERVICES
GTA SQUARE
Middlefield & Finch

- Consulting
- Incorporation
- Corporate tax
- HST Rebate
- Business registration
- Full cycle of accounting
- Pay roll

2015 TAX FILING

- Over 20 years of experience
- E-filing
- Reasonable Rate
- Quick refund



CALL - 416.275.5788

# EDUCATION

## Review Questions16-08

### ➢ ADVANCED FUNCTIONS 12

➢ Create a function of the form $f_{(x)} = \frac{P(x)}{q(x)}$ , where both $P_{(x)}$ is a cubic function and $q_{(x)}$ is a quadratic function. The function $f_{(x)}$ to have a removable discontinuity at $x = +2$, a vertical asymptote at $x = -2$, and an oblique asymptote of $y = 2x + 1$ . When $P_{(x)}$ is divided by $q_{(x)}$ $\left[ \frac{P_{(x)}}{q_{(x)}} \right]$, the remainder is 1. Sketch the graph of the function with all key features labelled.

### ➢ CALCULUS & VECTORS 12

Find the limits $\lim_{x \to 0} \frac{ax^2 + bx + c}{cx^2 + bx + a}$

(ii) $\lim_{h \to 0} \left( \frac{\frac{1}{4} + \frac{1}{h}}{4 + h} \right)$

### ➢ CHEMISTRY 12

(A) Explain " disproportionation" and "comproportionation" in redox reactions.

(B) Balance the equation in acidic solution

(i) $FeS + NO_3^- \rightarrow Fe^{3+} + NO + SO_4^-$

(ii) $HNO_3 + HCl + NH_4Cl \rightarrow NO_2 + Cl_2 + HClO_4 + H_2O$

## Answer Key : 16-07

### ➢ CHEMISTRY IB Organic




2-chloro- 2-methyl butane.

$E_2$ reaction predominate when a tertiary halide is heated with a strong base.

### ➢ BIOLOGY 12

(i) palmitic acid $CH_3(CH_2)_{14}COOH$
Plalmitic acid undergoes β oxidation.

Each molecule of acid produces,

Acetyl coA - 8 molecules,

NADH – 7 molecules ( 2.5 × 7 = 17.5 ATP)

FADH– 7 molecules ( 1.5 × 7 = 10.5 ATP)

Eight acetyl CoA undergoes citric acid cycle, and produces

24 NADH2 (2.5 × 24 = 60 ATP )

8 $FADH_2$ ( 1.5 × 8 = 12 ATP)

Substrate level oxidation - 8 ATP

Total of 108 ATP molecules produced. Activation uses 2 ATP molecules. Therefore net production is 106 ATP molecules.

(ii) Newly synthesised polypeptide in denatured state can undergo improper folding due hydrophobic interactions. Chaperons bind to the newly synthesised polypeptide chains, and prevent improper folding associations.

### ➢ VECTORS 12

First determine the vectors of $\overrightarrow{AB}$ and $\overrightarrow{BC}$

Then get the cross product of $\overrightarrow{AB}$ and $\overrightarrow{BC}$

$\overrightarrow{AB} \times \overrightarrow{BC} = (-1, 2, 2)$

A normal to the plane *is* $(-1, 2, 2)$

∴ Equation of the plane is $-x + y + 2z + D = 0$.

D= 3

equation of the plane is

$-x + y + 2z - 3 = 0$.

(ii) $x = 2 - t$

$z = -6 + 2t$

$-x + y + 2z = 3$

$-2 + t - 1 + t - 12 + 4t = 3$

$-15 + 6t = 3$

$6t = 18$

$t = 3$

Point of intersection (–1, 2, 0)

(iii) Unit vector in the direction of *n* is

$\frac{1}{|n|} \times n$

$= \frac{1}{\sqrt{6}} (-1 + 1 + 2)$

Answer key
16-08 - next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj
KEEN TUTORING CENTRE

# உலகத் தொல்காப்பிய மன்றம் - கனடாக் கிளை

## தொல்காப்பிய மன்றம் கனடாக் கிளை நடத்தும் தொல்காப்பியக் கருத்தரங்குத் தொடர் - 2

தமிழின் தொன்மையையும் சிறப்பையும் சான்றுபடுத்தும் தொல்காப்பியத்தைப் பரப்புதற்கு உலகத் தொல்காப்பிய மன்றம் தொடங்கப்பட்டுள்ளது. அம்மன்றத்தின் கிளைகள் உலகின் பல நாடுகளிலும் அமைக்கப்பெற்று வருகின்றன. கனடாவில் அமைக்கப்பட்டுள்ள உலகத் தொல்காப்பிய மன்றத்தின் கனடாக் கிளையின் சார்பில் ஒவ்வொரு மாதமும் தொல்காப்பியக் கருத்தரங்கு நடைபெற உள்ளது. இவ்வகையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இரண்டாவது கருத்தரங்கு நிகழ்வுக்குத் தமிழ் ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கருத்தரங்கம் பற்றிய விபரம்: நாள்: சனிக்கிழமை, ஏப்ரல் 16, 2016
நேரம்: 3:00 மணி முதல் – 5:00 மணி வரை

இடம்: Unit 3A - 5637, Finch Avenue East, Scarborough, M1B - 5K9
(Finch & Tapscott- (Toronto Tamil Sangam, Near to Dr. Lambotharan's Clinic)

கருத்தரங்கில் உரை நிகழ்துபவர்: திரு. பொன்னையா விவேகானந்தன் அவர்கள் அண்ணாமலை கனடா வளாகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் - ரொறன்ரோ கல்விச் சபை அனைத்துலக மொழிகள் கல்வித் திட்ட அலுவலர்

பொருள்: "தொல்காப்பியத்தில் களவியலும் கற்பியலும் - ஒரு நோக்கு"

தொடர்ந்து கேள்வி நேரமும் - கருத்துப் பரிமாற்றமும் இடம் பெறும். நிகழ்வு சரியாக பி.ப. 3:00 மணிக்குத் தொடங்கும் என்பதை அறியத்தருகின்றோம்.

உலகத் தொல்காப்பிய மன்றம் - கனடாக் கிளை


தொடர்புகளுக்கு: tolcanada@gmail.com / 416-267-5255 /647-295-3578
416-546-1354 / 647-885-8391 / 647-224-8871

MATH & PHYSICS TUTION

By a well-qualified and an experienced teacher. For all grades from Gr. 4 to 1st year of university.

Special classes in advanced functions, calculus & vectors and data management. Classes available at Scarborough & Stouffville.

Contact: 647 340 9490/ 416 732 2228



Are you interested in buying an investment property?
இரண்டாவது வீடு(கொண்டோ) வாங்க விரும்புகின்றீர்களா?



You know, You can have one + one






How Much? Don't Ask.... Call me
Ragu Mahesu
416-450-6833 (24hrs)
RE/MAX

# 2 நாள் அமெரிக்க சுற்றுப்பயணம்!

இனிய வசந்த காலத்தை இனிமையாய் களித்திட ..... இறைவனையும் வணங்கிட சன் சிட்டி (Sun City) பிளாசாவில் அமைந்துள்ள இலாப நோக்கமற்ற அமைப்பான Frontline சமூக சேவைகள் ஏற்பாட்டில் எதிர்வரும் ஏப்ரல் 23 மற்றும் ஏப்ரல் 24 (Saturday April 23rd and Sunday April 24th) ஆகிய 2 தினங்களும் அமெரிக்க சுற்றுலா பயணம்!








**பார்வையிடும் இடங்கள்:** ஸ்ரீ ராஜராஜேஸ்வரி கோவில் (Rochester), ஸ்ரீ வெங்கடேஸ்வர ஆலயம் (Pittsburgh), பாத்திமா தேவாலயம் (Buffalo), நயாகரா நீர்வீழ்ச்சி (Niagara Falls), இன்னும் பல...(outlet Mall shopping and site seeing)

**$ 250.00 மட்டுமே!!** முதியோர் (65 yrs & up) மற்றும் சிறுவர்களுக்கு (12 yrs & under) **$225.00**

**Frontline Community Services**

**Tel:(416) 840-4425/416-505-6486 Email: info@fcscanada.com**

**B11-2761 Markham Road, Scarborough ON M1X 0A4 (SunCity Plaza)**

FCS Frontline Community Services

On-Track

# Need a job immediately? Come join our team!

Employment opportunities with a Canadian Manufacturer of cold weather outerwear.

***Sewing Machine Operator, Gerber Cutter, Spreader***

**Skill Set Requirements**

- Industrial sewing experience is beneficial, but not required
- Able to run fabric through a machine with a steady hand
- Good work ethic with proven ability to follow direction and problem-solve
- Able to work independently and take initiative in a fast-paced environment

Information Sessions

Friday April 15, 2016: 10:30-12pm

Monday April 18. 2016: 4:00 -6:30pm

**Frontline Community Services**

B11-2761 Markham Road, Scarborough ON M1X 1M4 (SunCity Plaza)

Contact Vijaya Kula at (416) 840-4425

Other Services: Summer employment for students -Youth employment (18-29 years)

நகைச்சுவைத் தொடர் 330

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு நீதன்



வரவு எட்டணா செலவு பத்தணா...!.
தனது ராசிக்கு எத்தனை வரவு எத்தனை செலவு என பஞ்சாங்கத்தை பல பக்கங்கள் திருப்பி திருப்பி பாத்துக் கொண்டிருந்தா செக்கண்ட்புளோர் செல்லம்மா



அன்னம்மாக்கா உங்களுக்கு 4 வரவு - 8 செலவு.
அகிலா உங்களுக்கு 6 வரவு - 12 செலவு.
எனக்கு 6 வரவு - 6 செலவு என சொல்லி பெருமூச்சு விட்டா. துன்முகி வருடம் என்னென்ன மாற்றங்களைக்கொண்டு வரப்போகுதோ?.....

இந்தாங்கோ அன்ரி சாப்பிடுங்கோ..என்றபடி ரூபி ஆட்டிலறி அன்னம்மா, செக்கண்ட்புளோர் செல்லம்மா, ஐபொட் அகிலாண்டேஸ்வரி எல்லோருக்கும் சக்கரைச்சாதம் கொடுத்துவிட்டு தனியாக இந்தாங்கோ மாமா என உலகருக்கும், டடி கொஞ்சமா சாப்பிடுங்கோ என பிராங்பேட் பேரம்பலத்துக்கும் கொடுத்துவிட்டு...

டடி வாற கிழமை உங்களுக்கு மெடிக்கல் செக்கப்.....மறந்து போகாதேங்கோ என்று சொல்ல செக்கண்ட் புளொர் செல்லம்மா ஐபொட் அகிலாவின் காதுக்குள் அவைக்கு சக்கரை குறைஞ்ச சாதம் என சொல்லி சிரிக்க ராசம்மா கடைக்கண்ணால் பார்த்தபடி உள்ளே போனா.

மாமா உங்கடை மெடிக்கல் செக்கப் - பிளட் ரெஸ்ற் நிசல்ற் வந்திட்டுதாம். டொக்டர் வரட்டாம் எனச் சொல்ல உலகர் மௌனமாக இருந்தார்.
வாழ்கையில் எத்தனை ரெஸ்ற்? சோதனை மேல் சோதனை...
ஊர் பிரச்சினைகளை தலையில் போட்டு பிரசர், சுகரை ஏற்றியதுதான் மிச்சம்.

ஓ..மை கோட்......! மூவாயிரம் பேருக்கு மேல் சித்திரை புது வருட (துர்முகி) வாழ்த்துக்கள் அனுப்பியிருக்கினம் என பெருமையாகச் சொல்லிக் கொண்டு ஐபொட் அகிலாண்டேஸ்வரி ஐபொட்டை பெருவிரல், சுட்டுவிரல் தேய உருட்டிக்கொண்டேயிருந்தா...

ஆசையும் தோசையும்!
இஞ்சை..செல்லம்மா லண்டன் இளவரசரும் இளவரசியும் இந்தியா போயிருக்கினம். டில்லியிலை தாஜ்மகால் எல்லாம் பாத்திட்டு.. இளவரசர் தோசை சுட்டுக்குடுக்க, விலை கூடின (1700 பவுண்ஸ்) உடுப்பு பழுதாப்போகும் எண்ட பயத்திலை இளவரசி அதை வாங்கி சாப்பிடேல்லையாம்.





நீரால் அழிந்தது கொஞ்சம். போரால் அழிந்தது கொஞ்சம். உலகில் ஆங்காங்கே அழிவு, பேரழிவு, இயற்கை அழிவு ஒருபுறம். போரால் அழிந்தது, நீரால் அழிந்தது கொஞ்சம். இலங்கையில் ஒருபோதும் இல்லாத வரட்சி. பல நீர் நிலைகள் வற்றியுள்ளன. அதனால் என்றோ தண்ணீரில் மூழ்கிய சில ஆலயங்கள் தெரிவது மக்கள் கண்களில் ஆச்சரியத்தை வரவழைத்துள்ளது.



கடந்தவாரம் கேரளாவில் புது வருடத்திற்கு ஆலயத்திற்கு அருகில் வெடி விற்பனை நிலையத்தில் வெடி விபத்து ஏற்பட்டது. இதில் நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். பலர் காயமுற்று சிகிச்சை பெற்று வருகின்றனர். சட்டப்படி தடைசெய்யப்பட்ட பல வெடிகள் இதற்கு காரணமாகலாம் என விசாரணை நடக்கிறது.

புத்தாண்டை குதூகலமாகக் கொண்டாட வேண்டிய குடும்பங்கள் உறவுகளை இழந்து தவிக்கின்றனர். பிரதமர் நரேந்திரமோடி நேரில் சென்று குடும்பங்களுக்கு ஆறுதல் கூறியுள்ளார்.



மனிதவாழ்வில் கடவுளால் கொடுக்கப்பட்ட கொடை சிரிப்பு. அன்று முதல் இன்றுவரை சிரிப்பூட்டியவர்கள் மக்கள் மனதில் என்றும் நிற்கின்றனர்.





விசேட தினங்களில் நகைச்சுவை பட்டிமன்றம் பார்ப்பது போல தமிழக அரசியல் மேடைகள் ஆகிவிட்டன. குடித்துவிட்டு மதுபானக் கடைகளை மூடும்படி பேசுவதும்... பெண்களை மதிக்கவேண்டும் எனக்கூறிவிட்டு மேடைகளில் தரக்குறைவான, அசிங்கமான வார்த்தைகள் பேசுவதும் பின்னர் மன்னிப்பு கேட்பதும்... கொடும்பாவிகள் எரிப்பதும் சர்வ சாதாரணமாகி விட்டது.
(போயும் போயும் மனிதனுக்கிந்த புத்தியைக்கொடுத்தானே எம்ஜிஆர் படப்பாடல்)

ஞாபகம் இருக்கிறதா? ஏப்பிரல் 15..30



15. ஆபிரகாம் லிங்கன் நினைவுதினம். (ஏப்பிரல் 14 1865ல் ஜோன் பூத் என்பவரால் சுடப்பட்டு மறுநாள் இறந்தார்.



16. முதலாவது உலகத்தமிழாராச்சி மாநாடு கோலாலம்பூரில் நடைபெற்றது.

17. பெஞ்சமின் பிராங்லின் நினைவு தினம்.

19. சால்ஸ் டாவின் நினைவு தினம்.



19. அன்னை பூபதி நினைவுதினம். (1988) ஈழப்போராட்டத்தில் உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்தவர்.

21. பாவேந்தர் பாரதிதாசன் நினைவு தினம்.
இயற்பெயர் கனக சுப்பு ரத்தினம் 1891 - 1964




21. சித்திரா பௌர்ணமி

23. வில்லியம் சேக்ஸ்பியர் நினைவுதினம்



26. தந்தை செல்வா - எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தமிழரசுக்கட்சித் தலைவர் நினைவு தினம் (1898-1977)

27. ஈழத்து மூதறிஞர் கந்தமுருகேசனார் பிறந்ததினம் (1902−1965)

29. பாவேந்தர் பாரதிதாசன் பிறந்ததினம் (1891)

30. ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி 10ஆம் ஆண்டு சிவத்தமிழ் விழா




01 மே மேதினம்


# கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

## வருடாந்த பொதுக்கூட்டம் - 2016

**திகதி:** மே 08, 2016, ஞாயிற்றுக்கிழமை

**நேரம்:** பிற்பகல் 3:00 மணி

**இடம்:** *GTA Square (Second Floor)*
*5215 Finch Ave. E., #224*
*Scarborough, ON M1S 0C2*

இக்கூட்டத்திற்கு கொக்குவில் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் அவர்களின் தலைமுறைகள் அனைவரையும் தவறாது வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு: **416.414.3327 /416.299.6645**
**416.291.9956 / 416.283.1439**



**யாழ். இந்துக் கல்லூரிச் சங்கம் - கனடா**

இருபத்தைந்தாம் ஆண்டுக்கொண்டாட்டம் (யாழ். இந்துக் கல்லூரிச் சங்கம்-கனடா 1991-2016)

# இராப்போசன விருந்து – 2016

ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி சனிக்கிழமை, மாலை 5:30
Scarborough Convention Centre, 20 Torham Place Scarborough, ON M1X 0B3
(Finch Ave E & Finchdene Square)
(Major intersection: Finch Ave E & Markham Rd)
பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள், அவர்தம் குடும்பத்தினர் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தொடர்புகள் & மேலதிக விபரங்கள் - www.jhcacanada.com

| | | |
|---|---|---|
| ரவீந்திரா 416-230-0360 | விலோசன் 416-993-0826 | ரவி.மு 416-276-7650 |
| மோகன் 416-871-8534 | சிறீ 416-953-3297 | புவா 416-570-5261 |

# "லிபியாவிலும், ஸ்ரீலங்காவிலும் பொது மக்கள் வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்" - கலாநிதி நவநீதம்பிள்ளை



"ஐக்கிய நாடுகள் சபை 1993ஆம் ஆண்டு மனித உரிமை சபையை ஆரம்பித்து மனித உரிமையை விருத்தியடையச் செய்யவும், பாதுகாக்கவும் நடவடிக்கையினை மேற் கொண்டு வருகிறது. சர்வதேச ரீதியிலான மனித உரிமை மீறல் செயல்கள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென 58 சுதந்திரமான நிபுணர்களையும் நியமனம் செய்தது. அக்கால கட்டத்தில் லிபியாவிலும், ஸ்ரீலங்காவிலும் பொது மக்கள் திட்டமிடப்பட்ட வன்செயல்களினால் வெகு வாகப் பாதிக்கப்பட்டு வந்தனர். 1996ஆம் ஆண்டு ஆபிரிக்காவில் இடம்பெற்ற முதலாவது இனக் கலவரத்தின் போது பெண்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப் பட்டனர். 1998ஆம் ஆண்டு முதல் நான் ஆபிரிக்காவில் நீதிபதியாகப் பணியாற்றி வந்தேன். அப்போது இனப்படுகொலை களுக்கு எதிராக தீர்ப்பு வழங்கினேன். 2008ஆம் ஆண்டு நான் ஐ.நா.வின் மனித உரிமை ஆணையாளராக நியமனம் பெற்றேன். அக்காலத்தில் திரு. சிவலிங்கத்தின் குடும்பத்தினர் ஸ்ரீலங்காவில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டு வந்த இன்னல்களை வெளிக்கொணர்வதில் ஆர்வத்துடன் செயற்பட்டு வந்தனர்".

ஈழத்தமிழ் மக்களின் நலனில் அதிக அக்கறை கொண்டவராகவும், றிச்மன்ட்ஹில் பிள்ளையார் கோவில் நிர்வாக சபைத் தலைவராகவும் திகழ்ந்த அமரர் சிவலிங்கத்தின் ஞாபகார்த்தமாக ஏப்பிரல் 07, 2016 யோர்க் பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய முன்னாள் நீதிபதியும், ஐ.நா.வின் மனித உரிமை ஆணையாளராக வும் பணியாற்றிய கலாநிதி நவநீதம்பிள்ளை அவர்கள் இவ்வாறு கூறினார்.

கனடா பிரதம மனித உரிமை ஆணை யாளரான திருமதி றேனு மன்டெனியா கலாநிதி நவநீதம்பிள்ளை பற்றிய அறிமுக உரையை நிகழ்த்தியபோது நவநீதம்பிள்ளை அவர்களை ஆபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மன்டெலா 1995ஆம் ஆண்டு முதலாவது வெள்ளை யரல்லாத சட்டத்தரணியாக நியமித்தார் எனக் கூறினார். பேராசிரியர் வண. சந்திரகாந்தன் பொன்னாடை போர்த்தியும், திருமதி. சிவலிங்கம் மலர் செண்டு கொடுத்தும் கௌரவித்தனர். அமரர் சிவலிங்கத்தின் மருமகனான கனேடிய நாடாளுமன்ற உறுப்பினரான திரு. ஹரி ஆனந்தசங்கரியும் இவ்வைபவத்தில் பங்கு பற்றினார். கலாநிதி நவநீதம்பிள்ளை தொடர்ந்து உரையாற்றியபோது பின்வருமாறு கூறினார்:

"ஐ.நா.வில் நான் பணியாற்றிய போது சிரியாவிலும், ஸ்ரீலங்காவிலும் இடம் பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்த முற்பட்டேன். ஆனால் அதற்கு அந்நாட்டின் முந்திய அரச-ியல் தலைவர்களும், பின்னர் பதவிக்கு வந்த தலைவர்களும் அனுமதி தர மறுத்து விட்டனர். 2002ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டுவரை ஸ்ரீலங்காவில் பாலியல் ரீதியான துன்புறுத்தல் அதிகளவில் இடம் பெற்றுள்ளன. பத்தாயிரத்துக்கு மேற்பட்டோர் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகியுள்ள னர். இராணுவத்தினர் வைத்தியசாலைகள், வீடுகள் ஆகியவற்றினை குண்டு வீசித் தகர்த்துள்ளனர். அகதி முகாம்களிலும் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். இது சம்பந்தமாக விசாரணை நடத்த உயர் நீதிமன்றம் ஒன்று உருவாக்கப்பட வேண்டு மென நான் சிபார்சு செய்தேன். 2015இல் புதிய ஜனாதிபதியாகிய திரு.சிறிசேன அவர்கள் தாம் புதிய மாற்றங்களை ஏற்படுத்தப்போவதாகக் கூறினார். யுத்தம் முடிவடைந்தாலும் துன்புறுத்தல்கள் தொடர் கின்றன. நான் முல்லைத் தீவுப் பகுதிக்கு சென்றிருந்தபோது கணவன்மாரையும், வீடு வாசல்களையும் இழந்த குடும்பப் பெண்கள் அனுபவித்து வரும் கஷ்டங்களை நேரில் அவதானித்தேன். தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் நிலைமை யும் மிக மோசமாக இருந்தது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளை துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டேன்.






ஊடகவியலாளர்களும், மனித உரிமை அமைப்பின் அதிகாரிகளும் படையினரின் துன்புறுத்தல்களுக்கு ஆளாகி வருகின்றனர். அப்பாவி மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நான் ஐ.நா.சபையிடம் கோரிக்கை விடுத்தேன். ஐ.நா.நடவடிக்கை மேற்கொண்டாலும் தமது உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றார்கள்".

கனடாவில் வாழ்ந்து வரும் ஓவியரான காவலூர் கரம்பொன் கிழக்கு கிராமத்தைச் சேர்ந்த திரு. விக்ரர் மனுவேல் தான் வரைந்த பெரிய அளவிலான நெல்சன் மன்டெலாவின் உருவப்படம் ஒன்றினை நவநீதம்பிள்ளைக்கு அன்பளிப்புச் செய்தார். நெல்சன் மன்டெலா 2013ஆம் ஆண்டு காலமாகி விட்ட போதிலும் இன்றும் அவர் எங்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக் கின்றார். அதனால் அவரது படத்தினை தங்களிடம் கையளிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன் எனக் கூறினார்.

- வீரகேசரி மூர்த்தி

# ஒரே வருடத்தில் 3 உலகக்கிண்ணம் வென்று புதிய வரலாறு படைத்த மேற்கிந்திய தீவுகள் அணி!

## விளையாட்டுத் தகவல்கள் 375

ஜூனியர், மகளிர் டி20, ஆடவர் டி20 என மூன்று உலகக்கிண்ணத்தையும் ஒரே ஆண்டில் வென்று புதிய வரலாறு படைத்துள்ளது மேற்கிந்திய தீவுகள் அணி.

11வது ஜூனியர் உலகக்கிண்ண (19 வயதுக்குட்பட்டோருக்கான) கிரிக்கெட் தொடர் வங்கதேசத்தில் ஜனவரி 22ம் திகதி தொடங்கியது. இதில் பெப்ரவரி 14ம் திகதி நடந்த இறுதிப் போட்டியில் 3 முறை சாம்பியன் பட்டம் வென்ற இந்தியாவை வீழ்த்தி மேற்கிந்திய தீவுகள் அணி சாம்பியன் பட்டம் வென்றது. அதேபோல் கொல்கத்தாவில் நடந்த மகளிர் உலகக்கிண்ண டி20 இறுதிப் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணியும், அவுஸ்திரேலிய அணியும் மோதின.

இதில் 8 விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியாவை வீழ்த்திய மேற்கிந்திய தீவுகள் மகளிர் அணி சாம்பியன் பட்டத்தைத் முதன்முறையாக தட்டிச் சென்றது. அதே மைதானத்தில் நடந்த ஆடவர் டி20 உலகக்கிண்ண இறுதி ஆட்டத்தில் மேற்கிந்திய தீவுகள் அணி இங்கிலாந்தை சந்தித்தது. பரபரப்பான ஆட்டத்தில் மேற்கிந்திய தீவுகள் அணி 4 விக்கெட்டுகளால் இங்கிலாந்தை வீழ்த்தி 2வது முறையாக கிண்ணம் வென்றது. இதன் மூலம் ஒரே வருடத்தில் நடந்த 3 உலகக்கிண்ணத்தையும் வென்று புதிய வரலாறு படைத்துள்ளது மேற்கிந்திய தீவுகள் அணி. இதற்கு முன் ஒரே வருடத்தில் ஒரு நாட்டின் ஜூனியர், மகளிர் மற்றும் ஆடவர் அணிகள் 3 உலகக்கிண்ணங்களை வென்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### சாமுவேல்ஸ் அதிரடியில் மீண்டும் உலகக்கிண்ணத்தை கைப்பற்றியது மேற்கிந்திய தீவுகள் அணி

டி20 உலகக்கண்ண போட்டியில் 2வது முறையாக மேற்கு இந்திய தீவுகள் அணி வெற்றி பெற்று அசத்தியுள்ளது. டி20 உலகக்கிண்ண போட்டியில் இறுதி ஆட்டத்தில், நாணய சுழற்சியில் வென்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் பந்து வீச முடிவு செய்தது. துவக்க ஆட்டக்காரர்களாக ஜேசன் ராய் மற்றும் அலெக்ஸ் ஹேல்ஸ் களமிறங்கினார்கள். கடந்த ஆட்டத்தில் அசத்திய ஜேசன் ராய் பத்திரி பந்தில் ஸ்டேம்பை பறிக்கொடுத்தார். அடுத்த ஓவரில் மற்றொரு தொடக்க வீரரான ஹெல்ஸ் ஆட்டமிழந்ததும் இங்கிலாந்து அணி அதிர்ச்சியடைந்தது.
அடுத்து களமிறங்கிய அணித்தலைவர் மோர்கன் பத்திரி பந்தில் கேட்ச் ஆனார். இதனால் இங்கிலாந்து அணி கடும் பின்னடைவுக்கு உள்ளானது. இதனை அடுத்து இங்கிலாந்தின் நச்சத்திர வீரர் ஜோ ரூட்டும், ஜோஸ் பட்லரும் அணியை சரிவில் இருந்து மீட்டனர். சுலைமான் பென் வீசிய ஓவரில் பட்லர் இரண்டு சிக்ஸ் அடித்து ஓட்ட விகிதத்தை கூட்டினார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக பட்லர் 34 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் பிராத்வெய்ட் பந்து வீச்சில் கேட்ச் ஆனார். இதனால் அணியை காப்பாற்ற வேண்டிய முழு பொறுப்பும் ஜோ ரூட் மீது விழுந்தது. ஆனால் மோசமான ஒரு ஷாட்டை விளையாடி 54 ஓட்டங்களில் ஜோ ரூட் ஆட்டமிழந்தார். இதனை அடுத்து களமிறங்கிய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்ததால், இங்கிலாந்து அணி 20 ஓவர் முடிவில் 9 விக்கெட்களை இழந்து 155 ஓட்டங்கள் எடுத்தது. அதிகப்பட்சமாக ரூட் 54 ஓட்டங்கள் எடுத்தார். மேற்கிந்திய தீவுகள் அணி தரப்பில் பிராவோ, பிராத்வெயிட் ஆகியோர் 3 விக்கெட்களும், பத்திரி 2 விக்கெட்டும் விழ்த்தினார்கள். 156 ஓட்டங்கள் வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணிக்கு துவக்கத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது.

துவக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய கெய்ல் இரண்டு பந்துகளை மட்டும் சந்திருந்த நிலையில் ஜோ ரூட்டின் பந்து வீச்சில் ஸ்டாக்கிடம் தனது விக்கெட்டினை பறிகொடுத்தார். தொடர்ந்து சார்லஸ்(1) வெளியேற, அடுத்து வந்த சாமுவல்ஸ் நிதானத்தை வெளிப்படுத்தி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் சரிந்த வண்ணம் இருந்த போதும் சாமுவல்ஸ் அணியின் தேவையை புரிந்துகொண்டு ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதில், சாமுவல்ஸ் (85), பிராவோ (25), பிராத்வெயிட் (34) ஓட்டங்களென விளாசி 19.4 ஓவரில் மேற்கிந்திய தீவுகள் அணியின் வெற்றிக்கு வழிவகுத்தனர். மேற்கு இந்திய தீவுகள் அணி 161 ஓட்டங்களை குவித்தது. 66 பந்துகளில் 85 ஓட்டங்களெடுத்த சாமுவெல்ஸ் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார். இதன்மூலம் 2வது முறையாக உலகக்கிண்ணத்தை வென்று மேற்கு இந்திய தீவுகள் அணி அசத்தியுள்ளது.

### மேற்கிந்திய தீவுகள் அணி டி20 உலகக்கிண்ணம் வெல்ல உதவிய தர்மசேனா!

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்த டி20 உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் இங்கிலாந்து - மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதின. இதில் இங்கிலாந்தின் 156 ஓட்டங்கள் இலக்கை எட்டும்போது முதல் 3 ஓவர்களிலே கெய்ல், சார்லஸ், சிம்மன்ஸ் ஆகிய முக்கிய விக்கெட்டுகளை மேற்கிந்திய தீவுகள் அணி இழந்தது. இந்நிலையில் கடைசி வரை போராடிய சாமுவேல்ஸ் 66 பந்தில் 85 ஓட்டங்கள் குவித்து மேற்கிந்திய தீவுகள் அணி இலக்கை எட்ட உறுதுணையாக இருந்தார். ஆனால் இவர் 27 ஓட்டங்களிலே வெளியேறி இருக்க வேண்டியது.


ப்லன்கெட் வீசிய 7வது ஓவரின் முதல் பந்தில் சாமுவேல்ஸ் விக்கெட் கீப்பர் பட்லரிடம் பிடி கொடுத்தார். இதை நடுவர் ரொட் டக்கர் விக்கெட் கொடுக்க, சாமுவேல்ஸ் பெவிலியனை நோக்கி நகர்ந்து விட்டார். இந்நிலையில் இந்த விக்கெட்டில் திடீரென சந்தேகமடைந்த இலங்கை நடுவர் குமார் தர்மசேனா சாமுவேல்ஸை பவுண்டரி அருகே காத்திருக்க கூறி விட்டு சக நடுவருடன் இந்த விக்கெட் தொடர்பாக விவாதித்தார்.

ரொட் டக்கரிடம் தர்மசேனா கேட்டபோது சரியான 'அவுட்' என்றே அவர் கூறினார். இருப்பினும் தர்மசேனா 3வது நடுவர் மார்சஸூடம் தெளிவாக பார்க்க சொன்ன பாது, டிவி ரிப்ளையில் பட்லர் பந்தை பிட்ச் செய்து பிடித்திருப்பது தெளிவாக தெரிந்தது. இதனாலே சாமுவேல்ஸ் தொடர்ந்து விளையாடி மேற்கிந்திய தீவுகள் அணிக்கு கிண்ணம் வென்று கொடுத்தார். சரியான சமயத்தில் மட்டும் தர்மசேனா குறுக்கிடாமல் போய் இருந்தால் இங்கிலாந்துக்கே கிண்ணம் கிடைத்திருக்கும். துல்லியமாக கணிக்கும் தர்மசேனாவின் இந்த செயலை ரசிகர்கள் பாராட்டினாலும், அவரால் இங்கிலாந்துக்கு கிண்ணம் பறி போய்விட்டதாகவும் புலம்பி வருகின்றனர்.

### 9வது ஐபிஎல் டி20 கிரிக்கெட் தொடர் ஆரம்பாகியுள்ளது.

இதற்கு முந்தைய தொடர்களில் வீரர்கள் படைத்த சாதனைகளின் தொகுப்புகள் இதோ,

- ஐபிஎல் அரங்கில் அதிக விக்கெட் எடுத்தவர்கள் பட்டியலில் மும்பை அணியின் மலிங்கா முதலிடத்தில் உள்ளார். அவர் 98 ஆட்டத்தில் 143 விக்கெட் கைப்பற்றியுள்ளார். 13 ஓட்டங்கள் கொடுத்து 5 விக்கெட் கைப்பற்றியதே அவரது சிறந்த பந்து வீச்சு ஆகும். அமித் மிஸ்ரா (111), ஹர்பஜன்சிங் (110) அதற்கு அடுத்த நிலையில் உள்ளார்.
- அதிக ஓட்டங்கள் எடுத்தவர்கள் பட்டியலில் சுரேஷ் ரெய்னா முதலிடத்தில் உள்ளார். அவர் 132 போட்டிகளில் 3699 ஓட்டங்கள் எடுத்துள்ளார். ரோஹித் சர்மா (3385),கிறிஸ் கெய்ல் (3199), கோஹ்லி (3137), கம்பீர் (3133) ஆகியோர் அடுத்தடுத்த இடங்களில்உள்ளனர்.





- ஐபிஎல் போட்டிகளில் அதிக சிக்சர்கள் விளாசியவர்கள் பட்டியலில் கிறிஸ் கெய்ல் முதலிடத்தில் உள்ளார். அவர் 82 ஆட்டத்தில் 230 சிக்சர்கள் அடித்துள்ளார். அவருக்கு அடுத்தப் படியாக ரெய்னா (150), ரோஹித் சர்மா (147), யூசுப்பதான் (127), டோனி(126) உள்ளனர்.
- ஐபிஎல் அரங்கில் சென்னை (2010, 2011), கொல்கத்தா (2012, 2014), மும்பை (2013, 2015) ஆகிய அணிகள் தலா 2 முறையும், ராஜஸ்தான் (2008), டெக்கான் (2009) தலா ஒரு முறையும் சாம்பியன் பட்டம் வென்றுள்ளன.
- ஐபிஎல் வரலாற்றில் ஒரு இன்னிங்சில் அதிக ஓட்டங்கள் எடுத்த அணியாக பெங்களூர் (263 ஓட்டங்கள்) உள்ளது. சென்னை (246, 240) அடுத்த இடத்தில் உள்ளது.
- ஒரு இன்னிங்சில் குறைந்த ஓட்டங்கள் எடுத்த அணிகள் பட்டியலில் ராஜஸ்தான் முதலிடத்தில் உள்ளது. 2009ல் பெங்களூர் அணிக்கு எதிராக அந்த அணி 58 ஓட்டங்களில் சுருண்டது. கொல்கத்தா (67), பெங்களூர் (70) அடுத்த இடத்தில் உள்ளன.
- ஒரு தொடரில் அதிகபட்ச ஓட்டங்கள் எடுத்தவர்கள் பட்டியலில் கிறிஸ் கெய்ல், மைக் ஹசி முதலிடத்தில் உள்ளனர். இவர்கள் தலா 733 ஓட்டங்கள் எடுத்தனர்.

ஐசிசி உலக டி20 லெவன் அணிக்கு இந்திய வீரர் விராட் கோஹ்லி தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஐசிசி பொது மேலாளர் ஜெப் ஆலர்டைஸ், மேற்கிந்திய தீவுகளின் முன்னாள் வீரர் இயான் பிஷப், இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் நாசர் உசேன், இந்திய முன்னாள் நட்சத்திரம் சஞ்சய் மஞ்ரேக்கர், அவுஸ்திரேலிய முன்னாள் வீராங்கனைகள் மெல் ஜோன்ஸ், லிசா ஸ்தலேகர் ஆகியோர் அடங்கிய தேர்வுக் குழுவினர் உலக டி20 லெவன் அணியை அறிவித்துள்ளனர்.
கனவு அணியின் விபரம்:-

ஜேசன் ராய் (இங்கிலாந்து)
குவின்டன் டி காக் (தென் ஆப்பிரிக்கா)
விராட் கோஹ்லி (இந்தியா, அணித்தலைவர்)
ஜோ ரூட் (இங்கிலாந்து)
ஜோஸ் பட்லர் (இங்கிலாந்து)
ஷேன் வாட்சன் (அவுஸ்திரேலியா)
ஆந்த்ரே ரஸல் (மேற்கிந்திய தீவுகள்)
மிட்செல் சான்ட்னர் (நியூசிலாந்து)
டேவிட் வில்லி (இங்கிலாந்து)
சாமுவேல் பத்ரீ (மேற்கிந்திய தீவுகள்)
ஆசிஷ் நெஹ்ரா (இந்தியா)
முஸ்டாபிசுர் ரகுமான் (வங்கதேசம்)



**எஸ். கணேஷ்**




# பட்டுப்போன மரம்



பசுந்தளிர் வனப்புடன்
பரவசம் தந்த அந்த
பச்சை மரத்தவள்
பட்டுப் போய் பாவியாய் நிற்கிறாளே
பரிதாபமாய்

வண்ணமலர்களை அழகாக மலரச் செய்தவள்
வாசம் நேசம் தந்து
வாழ்வும் கொடுத்தவள், இன்று
வாடி வதங்கிய நிலையில்

நின்று, நிமிர்ந்து, நெஞ்சை நிமிர்த்தியவள்
நிலையாமையின் பிடியில்
நிலை தடுமாறி
நிர்க்கதியாய் நிற்கிறாள்

அவள் விதைகளில் உதித்த அவள் செடிகள்
ஆற்றாமையின் வலி தெரியாது
ஆணவத்துடன் கேலி செய்து கூத்தாடுவது
அடடா, இது நியாயமா?

கருணையில் கனிந்து, கனிகளாய் ஈந்து
கருத்தோடு கவனமாய் காத்திட்டவள்
கவலையோடும் கண்ணீருடனும்
காத்திருக்கிறாள்

பட்ட இடத்தில் தான் படும்
பட்ட மரத்தில் வெட்டுகள் விழும்
பழிகளை சுமந்தபடி விதியையும் நொந்தப்படி
பார்த்திருக்கிறாள்
பசுமையை தொலைத்த
பட்டுப்போன மரமாய்



மீரா குகன்
ஜேர்மனி



# JRS AUTO TECH

**OPEN 24 HOURS 7 DAYS A WEEK**

**MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS**



- Free Inspection & Diagnostics
- Complete Car & Truck Care
- Licensed Mechanics
- Insurance Work Done
- All Fluid Top Ups & A/C Repairs
- Fuel Injection Service & Muffler/ Turbos
- Courtesy Drop Off & Pick Up Available
- Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash

**SENIOR'S SPECIAL**
Free Shuttle Available for Seniors

## TIRE SPECIALS
NEW TIRES FROM $75
USED TIRES FROM $35

## FREE OIL CHANGE WITH RUST PROOFING
$99 Car
$120 SUV

## BRAKE JOB
STARTING FROM
$159

## WATER PUMP TIMING BELT & LABOR
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans

Castrol
REGULAR OIL CHANGE $29.95
CASTROL OIL CHANGE $39.95
SYNTHETIC OIL CHANGE $49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR $149.95

## TRANSMISSION FLUSH
*Starting From…*
*Imports $74.95*
*Radiator Flush $79.95*
*Domestic $149.95*

## ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS
CHECK
LEXUS
FREE DTC Code Run and Inspection

# 2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)

## CALL SUBAS DIRECT → 416-206-9489

## Tel: 416-628-4399

Email: jrsautotech@hotmail.ca

Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.

designed by: panchaldesigns.com 647.294.2963

# NK Movers

We make moving easy!




***Proudly moving the local community for the last 20 years***

கடந்த 20 ஆண்டுகளாக தமிழ் சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்றவர்கள்

## WE SPECIALIZE IN:

- RESIDENTIAL MOVING
- COMMERCIAL MOVING
- LONG DISTANCE MOVING

மேலதிகமாக

**$50**

கழிவினை பெறுவதற்கு இக்கூப்பனைக் காட்டவும்

**QUESTIONS TO ASK**

Choosing a moving company is a major decision. Making sure to learn about a company's cost and service is very important. Once you are comfortable then make your final selection.

- Are you an insured company?
- Is your staff trained?
- Do you offer free estimates?
- What payment option is available? Is a deposit required?
- Is there a contact number I can contact on move day if there are any questions or challenges?
- Are there additional charges for:
  Stairs?
  Travel time from your location to mine?
  Evenings and weekends?

**TEL: 416-566-4260**

**FAX: 1-888-614-9373**

**TEL: 1-800-895-8362**

WWW.NKMOVERS.CA

clientsupport@thenkmovers.com

**32 Howden Road - Unit 2. Toronto, M1R-3E4**





















**Free Real Estate Class -** Call: **416.321.6969**










விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு

***www.vlambaram.com***

***www.tamilvanakkam.com***

